பதவி



பக்கம் 18

உதயன்

சுடர்: 29 கதிர்: 267 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 4, புதன் 20.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



## சிக்கியது தங்கம்

யாழ்ப்பாணம், ஓக.20
தலைமன்னார் கடல் வழியாக தென்னிந்தியாவுக்குக் கடத்தப்படவிருந்த சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான தங்கம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தத் தங்கம் கொழும்பில் இருந்தே தலைமன்னாருக்கு எடுத்து வரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு குறித்த பகுதியில் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்

22 ஆம் பக்கம் பார்க்க

# முன்னாள் இராணுவ ஜெனரலான சந்திரசிறியும் இன்று சிவிலியனே

### இப்படிக் கூறித் தன்செயலை நியாயப்படுத்துகின்றார் மஹிந்த



கொழும்பு, ஓகஸ்ட் 20
முன்னாள் இராணுவ ஜெனரலான சந்திரசிறி இன்று சிவிலியன்தான் என்று கூறியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. வடக்கு மாகாணத்துக்கு சிவிலியன் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விடுத்த கோரிக்கையை நிராகரித்து, ஜி.ஏ.சந்திரசிறியை மீண்டும் ஆளுநராக நியமித்த தனது செயலை நியாயப்படுத்தும் விதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வடக்கு முதலமைச்சருக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின்போது, முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் பதவிக் காலம் முடிந்ததும், வடக்குக்கு சிவிலியன் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படுவார் என்று ஜனா

22 ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதி கூறியவை..



- பொலிஸ் அதிகாரம் இல்லை.
- ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு அனுமதி இல்லை.
- காணாமற்போனோர் நிகழ்வை இராணுவம் குழப்பவில்லை.
- வெளிநாடுகளில் தஞ்சம் கோரியோர் விவரம் பெறப்படும்.
- விடுதலைப் புலிகள் ஆபத்தானவர்கள்.

## மற்றொரு நபரும் நியமனம் ஆணைக்குழு ஆலோசகராக

### இந்தியரைத் தொடர்ந்து பாகிஸ்தானியரின் பெயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20
இறுதிப் போரில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவென பாகிஸ்தானைச் சேர்ந்த மற்றொருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.
மனித உரிமை வழக்கறிஞ

22 ஆம் பக்கம் பார்க்க

## நாவாந்துறை மக்களின் வீடுகளை கைப்பற்றும் முயற்சியில் ராணுவம்

யாழ்ப்பாணம், ஓக.20
நாவாந்துறை கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகளில் மக்கள் மீளக் குடியேறாத நிலையில், அதனைக் காரணமாக வைத்து அவற்றைதமது உடைமையாக்கும் முயற்சிகளில் இராணு

22 ஆம் பக்கம் பார்க்க



## படைச்சிப்பாயால் சிறுமி வன்கொடுமை

### மன்னாரிலும் தொடர்கின்றது கொடூரம்

யாழ்ப்பாணம், ஓக.20
மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுமி ஒருவர் படைச்சிப்பாயால் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் என்று மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்குள்ள சௌத்பார் இராணுவ முகாம் முன்பாக, இராணுவத்தினர் நடத்திவரும் கடையில் றொட்டி வாங்குவதற்குச் சென்ற சிறுமியே வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று முறையிடப்பட்டுள்ளது.
பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும்- இன்று நீதிமன்றுக்கு இது குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.
"குறித்த சிறுமி சில நாள்களுக்கு முன்

22 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவமாது வேடத்தில் நூதனமாகக் கொள்ளை

### பறிபோனது 8 பவுண் நகைகள்

யாழ்ப்பாணம், ஓக.20
மருத்துவமாது என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர், சிகிச்சைக்கென அழைத்துச் சென்று பெண்ணிடம் இருந்து 8 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பித்துள்ளார். யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.
நகைகளைப் பறிகொடுத்த

22 ஆம் பக்கம் பார்க்க

# தேசிய பாதுகாப்புத் தொடர்பில் இணக்கப்பாடுகள் ஏதுமில்லை

## இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, ஓக.20
தேசியப் பாதுகாப்பு விவகாரத்தில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதில்லை என்றுதெரிவித்துள்ளார் இராணுவத் தளபதி தயா ரட்நாயக்க.

2014ஆம் ஆண்டுக்கான தேசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அங்கு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட 30 ஆண்டு கால போரின் மூலம் பல்வேறு பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளோம். என்ன விலை கொடுத்தேனும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு நாட்டின் தேசியப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தேசியப் பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட நபர்களின் பாதுகாப்பு ஆகிய இரண்டு தொடர்பிலும் சமனிலையான கொள்கைகள் பின்பற்றப்படவுள்ளது. பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் சுபீட்சம் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதுடன், போர் வெற்றியின் மூலம் நாட்டின் ஸ்திரமான அபிவிருத்திக்கான வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

படையினர் பாதுகாப்பு கடமைகளை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். அதற்கு மேலதிகமாக நாட்டின் ஏனைய அபிவிருத்திப் பணிகளில் பங்களிப்புச் செய்து வருகின்றனர். பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டுமான மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் படையினர் காத்திரமான முறையில் பங்களிப்புச் செய்து வருகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார்.(ற)



இலங்கைக்கும் சமோவாக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளுக்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி கலாநிதி பாலித கோஹன மற்றும் சமோவுக்கான ஐக்கிய நாடுகள் நிரந்தர பிரதிநிதி அலி ஓயாகா பீருறி எலிசயா இணைந்து தத்தமது அரசுகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ற)

## 1919க்கு 80 லட்சம் அழைப்புகள்

கொழும்பு, ஓக.20
அரச சேவைகள் தொடர்பான தகவல்கள் பொது மக்களுக்கு வழங்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட 1919 என்ற அரச தகவல் நிலையத்திற்கு பெரும் எண்ணிக்கையிலான அழைப்புக்கள் இதுவரை கிடைத்துள்ளன என்று இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையம் ஆரம்பத்திலிருந்து இதுவரை 80 லட்சத்திற்கும் அதிகமான அழைப்புக்கள் கிடைத்திருப்பதுடன் குறுஞ்செய்தியூடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்திருக்கும் முகவர் நிலையம், மக்கள் கூடுதலாக புகையிரத சேவை, பொலிஸ் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், போன்றவற்றின் தகவல்களைப் பெறும் பொருட்டே அழைப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. (ற)

# வதந்திகளின் மூலம் வன்முறைகள் குற்றஞ்சாட்டுகிறது ஹெல உறுமய

கொழும்பு, ஓக.20
வதந்திகள் மூலம் நாட்டில் வன்முறைகளைத் தூண்ட முயற்சிக்கப்படுகின்றது என்று தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில, மக்கள் வதந்திகளை நம்பக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"வதந்திகளை பரப்புவோருக்கு எதிராக கடுமையான சட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும். சில முஸ்லிம் தலைவர்கள் சர்வதேச ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டனர். நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப் பட்டனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அது தொடர்பில் அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என குற்றம் சுமத்தியிருந்தனர்.

சமூக அந்தஸ்தைப் பயன்படுத்தி இவ்வாறு ஊடகங்களில் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மீண்டும் மீண்டும் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் பதிவாவதைத் தடுக்க முடியாது. கடந்த காலங்களில் முஸ்லிம் சிங்கள வன்முறைகளைத் தூண்ட முயற்சிக்கப் பட்டது. நாட்டில் முஸ்லிம் கடும்போக்குவாத அமைப்பு ஒன்று இயங்கி வருகின்றது. நாட்டில் வன்முறைகளைத் தூண்டும் நோக்கிலேயே புலிகள் தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தினர். அரந்தலாவையில் பௌத்த பிக்குகளை கொலை செய்தனர். ஸ்ரீ மஹாபோதி மீது தாக்குதல் நடத்தினர். இந்த நோக்கத்தை புரிந்து கொண்ட மக்கள் பொறுமையுடன் செயற்பட்டனர்.

போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் நாம் சமாதானத்தை மறந்து விட்டோம். அன்று வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிரபாகரன் என்ற பொடியனுடன் மோதினோம். இன்று உலகின் பலம் மிக்க நாடான அமெரிக்காவுடன் மோதுகின்றோம் என்பதனை அனைத்து மக்களும் கவனத்திற் கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தமிழ் மக்கள் மீது அரசு பூசுகின்றது புலிச்சாயம்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஓக.20
தமிழ் மக்கள் மீது புலிச்சாயம் பூசும் நோக்கிலேயே அரசு செயற்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

காணாமற் போனோரை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிப்பதில் கால தாமதம் ஏற்படும் என்று அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளா.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"காணாமற் போனோரை கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நடுநிலைத்தன்மை இல்லை. அரசையும் ஜனாதிபதி குடும்பத்தையும் தாம் செய்த குற்றங்களில் இருந்து விடுவிக்கவே இந்த ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் போர் நடந்த கால கட்டத்தில் காணாமற் போன பொது மக்கள் தொடர்பில் கடந்த காலங்களில் இருந்த தகவல்களை சேகரிக்கின்றனர். ஆயினும் அவை தொடர்பிலான சாதாரண அறிக்கைகள் தொடர்பில் கூட இவர்கள் வாய் திறக்க வில்லை. புலனாய்வு பிரிவினரையும் இராணுவத்தினரையும் பொது மக்களுக்கு எதிராக செயற்பட வைத்து மக்களின் மனதில் அச்ச உணர்வினை ஏற்படுத்துகின்றனர். சர்வதேச விசாரணையொன்று இலங்கைக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தவுடனேயே இலங்கை அரசும் தமது ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விரைவுபடுத்தியது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேசம் அழுத்தம் கொடுத்திருக்காவிடின் அரசு இவ்விடயத்தில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டிருக்காது. வடக்கில் உள்ள தமிழ் மக்கள் மீது புலிச்சாயம் பூசி தொடர்ந்தும் அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளையே கையாண்டிருக்கும்.

இலங்கை விடயத்தில் நல்லதொரு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அரசு அதை சரியாக பயன்படுத்த தவறுகின்றது."- என்று தெரிவித்துள்ளார். (ற)


# கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

## (Goethe தவிர்ந்த)இலங்கை ரீதியில் முதல் இடத்தை தட்டியுள்ளது.



சித்தியடைந்த மாணவர்களை இப்புகைப்படத்தினூடாக காணலாம்.



ஜேர்மன் A1 பரீட்சை நடாத்தும் முகாமையாளருடன் எமது ஜேர்மன் கல்லூரியின் ஆசிரியர் திரு. கோணேஸ்வரன் அவர்கள்.

ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்பட்ட வெளிநாடு செல்பவர்களுக்கான A1 பரீட்சையில் முதலாவது இடத்தை தட்டிக் கொண்டது கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி.

09.07.2014 அன்று கொழும்பில் Goethe தவிர்ந்த இலங்கை ரீதியிலான A1 பரீட்சையில் கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரியின் ஊடாக தோற்றிய மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தட்டிக் கொண்டது இந்நிறுவனம்.

பல வருடங்களாக யாழ் மண்ணின் பிரபல்ய ஆசிரியர் பி.கோணேஸ்வரனின் வழிகாட்டலினால் பல மாணவர்களை சித்தியடைய செய்து பெருமை சேர்த்துள்ளார் யாழ் மண்ணுக்கு.

இம்முறை மட்டுமல்லாது ஒவ்வொரு பரீட்சையிலும் பல மாணவர்கள் சித்தியடைவது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனமானது ஜேர்மன் செல்பவர்களுக்கு ஒரு சொப்பனமாக விளங்குகின்றது.



முதலிடத்தைப் பெற்ற கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி மாணவன் பரீட்சையை நடத்தும் முகாமையாளருடன்

* மற்றும் போலியான விளம்பரங்களை கண்டு ஏமாந்து போகாதீர்கள்.

(C 16105)(7.6.3)

German Language Academy ஆரியகுளம், யாழ்ப்பாணம். 077 970 7322

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 04 புதன்கிழமை (20.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 267

# புலம்பெயர் தமிழர்களால் புலிகள் மீளெழும் அபாயம்

## பாதுகாப்புக் கருத்தரங்கில் யாழ். தளபதி எச்சரிக்கை



கொழும்பு, ஒகஸ்ட் 20

**புலம்பெயர் தமிழர்களிடம் தமிழீழம் தொடர்பான சிந்தனைக்கோட்பாடு இன்னமும் அழியாமல் இருப்பதால் அவர்கள் மூலமாக விடுதலைப்புலிகள் இயக்கம் மீளெழுச்சி பெறலாம் என்ற அச்சநிலை உள்ளது என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெறும் பாதுகாப்புக் கருத்தரங்கின் இரண்டாம் நாள் அமர்வின் போது நேற்று 'தீவக நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதிலும் முன்னெடுத்துச் செல்வதிலும் ஏற்படக்கூடிய புதிய சவால்களை சந்திப்பதற்கான தரைப்படையொன்றின் வழிமுறைகள்' என்ற தலைப்பில் மேஜர் ஜெனரல் பெரேரா உரையாற்றினார். இதன்போது கருத்தரங்கில் பங்கேற்ற பாகிஸ்தானிய முன்னாள் படையதிகாரியொருவர், விடுதலைப் புலிகள் மீள எழுச்சி பெறுவதற்கான சாத்தியங்கள் எந்தளவுக்கு உள்ளதென வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேஜர் ஜெனரல்பெரேரா அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு இராணுவமும் தனித்த நிலையில் பயங்கரவாதத்தை தோற் கடிக்க முடியாது. முதலில் சர்வதேச ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் ஓரங்கட்டிய பின்னர் சமூகத்திடமிருந்தும் தனிமைப்படுத்திய பின்னரே விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது சாத்தியமானது. விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதில் சமூகத்தின் பங்களிப்பு இருந்தது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில் கைதானோருக்கு நேற்றுப் பிணை

யாழ்ப்பாணம், ஒக.20

மானிப்பாய் மற்றும் அதனை அண்மித்த இடங்களில் வெட்டு, குத்து எனச் சமூக விரோதச் செயல்கள் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில், வாள்கள், கைக் கோடரிகள், இரும்பு முள்கள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தும் நோக்கில் சென்றபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டில் 7 பேரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் 3 பேர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் ஏனைய நான்கு பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களே மல்லாகம் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (த-4)

## மின் கம்பத்துடன் பிக்கப் மோதி 4 பேர் படுகாயம்

வவுனியா, ஒக.20

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் ரக வாகனம் மின்கம்பத்தில் மோதியதில் தாய், தந்தை, பிள்ளைகள் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுக் காலை திருகோணமலை அன்புவளி புரத்திலிருந்து தாய் தந்தை, இரண்டு பிள்ளைகளுடன் பயணித்த பிக்கப் ரக வாகனம் வவுனியா ஹொரவப்பொத்தானைப் பகுதியை அண்மித்தவேளை மகாகச்சக்கொடிய பகுதியிலுள்ள மின் கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பயணித்த தாய், தந்தை, மகன், மகள் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையின் அவசர

(22 ஆம் பக்கம் பார்க்க)

## படகுகளை விடுவிக்குமாறு பாம்பனில் சாலை மறியல்

### இராமேஸ்வரம் மீனவர்கள் முடிவு

இராமநாதபுரம், ஒக.20

இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்கக்கோரி எதிர்வரும் 23 ஆம் திகதி பாம்பன் பஸ் பாலத்தை முற்றுகையிட்டு சாலை மறியல் போராட்டம் நடத்தப் போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் சங்க பொதுச் செயலாளர் போஸ் அறிவித்துள்ளார்.


இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை, உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை படகுகளுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இவற்றில் மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்பட்டு அவர்களின் படகுகளை விடுவிக்க இலங்கை அரசு மறுத்துள்ளது. இலங்கையில் 62 விசைப் படகுகளும் இரண்டு நாட்டுப் படகுகளும் உள்ளன. பல கோடி மதிப்பிலான இந்த படகுகள் இலங்கையில் இருப்பதால் அந்த படகுகளின் மீனவர்கள் மற்றும் சார்புத் தொழிலாளர்கள் என 1000 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அனுமதித்தால் மட்டுமே கூட்டமைப்பைச் சந்திப்பார் மோடி

### சொல்கிறார் சுப்பிரமணிய சுவாமி



கொழும்பு, ஒக. 20

இலங்கை அரசு அனுமதி வழங்கினால் மாத்திரமே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பார் என்று, இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் பிரமுகர்களில் ஒருவரான சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஆரம்பமாகிய, இராணுவம் நடத்தும் பாதுகாப்புக் கருத்தரங்கில் சுப்பிரமணிய சுவாமி பங்கேற்றுள்ளார். மாநாட்டின்போது ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வழக்கமாக எந்தவொரு நாட்டு அரசுடனும் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கும் தரப்புகளுடனான சந்திப்புகளை நாம் ஊக்குவிப்பதில்லை. தற்போதைய பிரதமர், சந்திப்புக்கான நியமனாங்களை இலகுவாக வழங்குவதில்லை .

இலங்கையுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் செயல்முறைகளை இந்தியா மேற்கொண்டுள்ளது. அந்த செயல்முறைகளைப் பலவீனப்படுத்தும், எந்த நடவடிக்கையையும் இந்தியா மேற்கொள்ளாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எந்த நேரத்திலும் வந்து பிரதமரைச் சந்திப்பதற்குக் கடந்தமுறை போல இப்போது இருக்காது. இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் எத்தகையை தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டாலும் அதனை இந்தியா எதிர்க்கும் -என்றார். (த-5)

## உரம் கலந்த பனங்கட்டி விற்பனை செய்ய தடை

### வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக.20

பயிற்செய்கைக்குப் போடப்படும் உரம் கலந்து ஊர்காவற்றுறையில் பனங்கட்டி தயாரிக்கப்பட்டு விற்பனை செய்து வந்தமை தொடர்பில் உரிய நடவடிக்கைக்காக வழக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தயாரிக்கப்பட்டுக் கடைகளில் விற்பனைக்காக அனுப்பப்பட்ட குறித்த பனங்கட்டிகளை விற்பனைக்குத் தடை விதித்த நீதிமன்று, அதனைப் பறிமுதல் செய்யாது வழக்கு நிறைவடையும்வரை அவர்களே வைத்திருக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குக் கிடைத்த தகவலின் படி கடந்த 13 ஆம் திகதி நடத்திய அதிரடிச் சோதனையில் உரம் கலந்து பனங்கட்டிகள் தயாரிக்கப்பட்டமை தெரிய வந்தது. அங்கிருந்து உரமும்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## புலிப்பார்வை, கத்தி படங்கள் திரையிடப்பட்டால் போராட்டம்

### 51 தமிழக அமைப்புக்கள் எச்சரிக்கை

சென்னை, ஒக.20

புலிப்பார்வை மற்றும் கத்தி திரைப்படங்கள் திரையிடப்பட்டால் கடுமையான போராட்டங்கள் வெடிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள 51அமைப்புக்கள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வியட்நாம் போரின் கொடூரத்தை உலகுக்கு எடுத்துச் சொன்னது ஒரு சிறுமியின் படம். அதுபோன்று தமிழீழ விடுதலைப் போரின் உச்சக்கட்ட கொடூரத்தைச் சர்வதேச சமூகத்துக்கு முன்வைத்தது பிர பாகரனின் இளைய மகன் பச்சிளம் பாலகன் பாலச்சந்திரன் குறித்த புகைப்படங்கள்.

தற்போது பாலச்சந்திரனின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்வதாகக் கூறும் வகையில் புலிப்பார்வை என்ற திரைப்படம் வெளியாக இருக்கிறது. இதன் காட்சிகளைப் பார்க்கும் மனச்சாட்சி உள்ள எந்த மனிதனுமே இப்படி ஒரு அப்பட்டமான இனத்துரோகச் சிந்தனையுடன் கூடிய படம் தமிழ

(22 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சன்னம் வெடித்து ஒருவர் கழுத்தில் படுகாயம்

### முள்ளிவாய்க்காலில் சம்பவம்

முல்லைத்தீவு, ஒக. 20

யாழ்ப்பாணத்திலிருந்து சென்று முள்ளிவாய்க்காலில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட வந்த ஒருவர், துப்பாக்கிச் சன்னம் வெடித்ததில் கழுத்தில் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் கிழக்கில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செந்தில் (வயது-32) என்ற தொழிலாளியே காயமடைந்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் காட்டுப்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கமலுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக.20

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக் ஷயனின் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன் னாள் அமைப்பாளர் கமல் உள்ளிட்ட மூவருக்கும் எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டு விளக்மறியல் நீடிக்கப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக் ஷயன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைச் சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும், வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கடந்த டிசம்பர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தனியார் கல்வி நிலையங்கள் மலசலகூட வசதியற்ற நிலையில்

தென்மராட்சி, ஓக.20

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட சில தனியார் கல்வி நிறுவனங்களில் மலசல கூட வசதிகள் இல்லாததால் அங்கு கற்கும் மாணவர்கள் இயற்கைக் கடன் கழிக்க அவசர அவசரமாக தத்தமது வீடுகளுக்குச் சென்று திரும்ப வேண்டியுள்ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.

குறிப்பாக தரம் 6 வகுப்பு வரை நடத்தப்படும் தனியார் கல்வி நிறுவனங்களிலேயே இவ்விதம் மலசல கூட வசதிகள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

தினமும் குறித்த கல்வி நிறுவனங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் அங்கு மலசல கூட வசதிகள் இல்லாததால் மாணவர்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)



கிளிநொச்சி வட்டக்கச்சி கிருஷ்ணன் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் சுவாமி தேரில் உலாவருகிறார். (வ)

# வீதிச் சண்டை; கல்வீச்சில் பஸ் கண்ணாடி சேதம்

பருத்தித்துறை, ஓக.20

பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் இரண்டு நபர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக ஒருவர் மண்டை உடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சண்டையின்போது யாழ்-கொழும்பு இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸொன்று கல்வீச்சுக்கு இலக்காகியது. பஸ்ஸின் கண்ணாடிகள் சேதமுற்றன.

பஸ்ஸின் சாரதிக்கும் பிறிதொரு நபருக்கும் இடையே இந்த மோதல் இடம்பெற்றது. பட்டப் பகலில் நட்ட நடு வீதியில் பஸ்ஸை நிறுத்திவிட்டு மோதலில் ஈடுபட்டதாகவும் அதை பொது மக்கள் பலர் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் தும்பளையைச் சேர்ந்த தெய்வேந்திரன் சிறிரங்கன் (வயது-22) என்பவரே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-109)

# மாணவருக்கான குறுநாடகப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.20

கலாசார மற்றும் கலைகள் அலுவல்கள் அமைச்சு மற்றும் டவர் மண்டபத் திரையரங்கு மன்றமும் இணைந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையில் குறுநாடகப் போட்டிகளை நடத்தவுள்ளன.

இதற்குப் பாடசாலை மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடகங்கள், ஓரங்க குறுநாடகமாக இருப்பதோடு 25 அல்லது 30 நிமிடங்கள் காட்சிப்படுத்தக்கூடியதாகவும், குழந்தைகளுக்கான நாடகம் அல்லாததும், சுயமாக எழுதப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் ஏ-4 அளவிலான கடதாசியில் 2 நாடகப் பிரதிகளைத் தயாரித்து பணிப்பாளர் நாயகம், டவர் மண்டபத் திரையரங்கு மன்றம் சவ்சிரிபாய, இலக்கம் 123, விஜேராம மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தச் செயற்பாட்டில் முதலாம் கட்டமாக விண்ணப்பங்கள் கோரலும், இரண்டாம் கட்டமாகப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலும் மூன்றாம் கட்டமாக நாடகம் தயாரித்தல் தொடர்பான மூன்று நாள்கள் பயிற்சியும், நான்காம் கட்டமாக பாடசாலை மட்டத்தில் குறு நாடகங்களை நடத்துதலும், ஐந்தாம் கட்டத்தில் மாகாண மட்டப் போட்டிகளை நடத்துதல், ஆறாம் கட்டமாக வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவித்தலும் வெகுமதி வழங்கலும் இடம்பெறவுள்ளது.

இந்த குறுநாடகத்தில் சிறந்த சங்கீத நெறியாள்கை, சிறந்த மேடைப் பின்னணி மற்றும் சிறந்த ஆடை அலங்காரம் என்பவற்றுக்கு பரிசில்களாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளன. (ஒ-108)

# 17 பயனாளிகளுக்கு முதற் கட்ட கொடுப்பனவு

தென்மராட்சி, ஓக.20

தென்மராட்சி பிரதேச செயலகத்தினூடாக சுய உதவி கோரி விண்ணப்பித்த 17 பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, விறகு வியாபாரம், விவசாயம், வியாபாரம் ஆகிய சுய தொழில்களை மேற்கொள்ள தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக விண்ணப்பித்தவர்களில் 17 பேருக்கு முதல் கட்டமாக தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

**மாடு வளர்ப்பு** - குணரத்தினம் குணமணி (கெற்பேலி மத்தி)

**கோழி வளர்ப்பு** - விக்னேஸ்வரன் இரத்தினரூபி (எழுதுமட்டுவாழ் தெற்கு), சண்முகநாதன் பார்வதிதேவி (எழுதுமட்டுவாழ் தெற்கு), சிவஞானம் பரமேஸ்வரி (மீசாலை வடக்கு), ஞானேஸ்வரன் மஞ்சுளா (தவசிகுளம் மிருசுவில்), ஜெயம் தேவரஞ்சி (எழுதுமட்டுவாழ் தெற்கு), சிறிமதன் மேரிமல்ரீனா (300 வீட்டுத்திட்டம் நாவற்குழி), தெய்வேந்திரம் பரமேஸ்வரி (விடத்தற்பளை), அற்புதராசா இரத்தினபூபதி (மறவன்புலோ மத்தி), சிவபாக்கியநாதன் நாகம்மா (எழுதுமட்டுவாழ் வடக்கு), வல்லிபுரம் இலட்சுமி (நாவற்காடு வரணி)

**விறகு வியாபாரம்** - வசந்தராசா மஞ்சுளாதேவி (300 வீட்டுத்திட்டம் நாவற்குழி)

**ஆடு வளர்ப்பு** - கந்தசாமி செல்வரஞ்சினி (எழுதுமட்டுவாழ் வடக்கு), சற்குணம் சிவனேஸ்வரி (எழுதுமட்டுவாழ் வடக்கு),

**விவசாயம்** - திருநாவுக்கரசு நேசமலர் (ஒட்டுவெளி, மிருசுவில்)

**வியாபாரம்** - தர்மலிங்கம் புவனேஸ்வரி (நாவற்காடு, வரணி), கிட்டினன் செல்வம் (சாவகச்சேரி) ஆகியோரே குறிப்பிட்ட கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டோராவர். (ஒ-9)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, ஓக.20

நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகுட்பட்ட கைதடி நாவற்குழிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் ஏற்றப்பட்டு வருகிறது.

அந்தப் பகுதியில் விலங்கு விசர் நோயினால் பாதிக்கப்பட்ட கட்டாக்காலி நாயொன்று, வளர்ப்பு மாடொன்றுக்குக் கடித்ததால் மாட்டுக்கு விலங்கு விசர்நோய் ஏற்பட்டு மாடு பலியானதை அடுத்து அந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்து வளர்ப்பு நாய்களுக்கும் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகிறது.

தென்மராட்சி பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு ஓராண்டு கழிந்த நிலையில் விலங்கு விசர் நோய் ஏற்பட்ட நாயினால் கடியுண்டு பசுமாடு இந்த நோய்க்கு ஆளாகிப் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# நல்லூர் மத்தியஸ்த சபை சனியன்று

யாழ்ப்பாணம், ஓக.20

பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்று வரும் நல்லூர் மத்தியஸ்த சபை அமர்வு, நல்லூர் தேர்த்திருவிழா காரணமாக எதிர்வரும் 24 ஆம் திகதியன்று நடைபெறமாட்டாது என் றும், குறிப்பிட்ட தினத்துக்குப் பதிலாக முதல் நாளான 23 ஆம் திகதி சனிக்கிழமை வழமைபோல் சபை அமர்வு இடம்பெறும் என்றும் மத்தியஸ்த சபைத் தவிசாளர் நா.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (ஓ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### பொனிப்பாஸ் தர்மசீலன்



மயிலை ஊரில் பிறந்து
பண்டையூரில் வாழ்ந்திட்ட
அன்புச்செல்வமான தர்மசீலனே!
குடும்பத்தின் நற்பிள்ளையாயும்
அன்புச்சகோதரனாயும் வாழ்ந்தீரே!
தீராத உளநோயால்
உன் உயிர் பிரிந்ததுவோ
பிரிவுத்துயர் தாங்காது துடிக்கின்றோம்
உம் உறவுகள் நாம்
உயிர்வாழும் காலம் வரை
என்றும் எம் உளமதிலே நீ இருப்பாய்.

தாயின் மடியில் 19.02.1977
ஆண்டவன் அடியில் 21.07.2014

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு

[50877](4.3.6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 23.07.2014 ஆம் திகதி புதன்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னப்பொடி சின்னத்தம்பி



தோற்றம் 05.06.1937
மறைவு 23.07.2014

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (20.08.2014) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 22.08.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
021 790 1334

(51055)(7.6.3)

## 11 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

செல்வி
### மங்கையர்க்கரசி (மங்கை) பொன்னம்பலம்




அன்பின் திருவுருவாய்
அறிவுச்சுடர் விளக்காய்
பாசத்தைப் பொழிந்த
இனிய இளைய மகளே!
வசந்த காலத்தில் மின்னலென
மலர்ந்த மங்கையே!
மறக்காது அம்மா உன் நினைவு

உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார்.
"பொன்மணி வாசா",
குப்பிளான் தெற்கு.
077 852 6152 (50785)(4.3.6)

மலர்வு: குப்பிளானில் 23.08.1978
உதிர்வு: லண்டனில் 20.08.2003

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வல்லிபுரம் அப்பாத்துரை



(ஓய்வுபெற்ற உப அதிபர், வீமன்காமம் ம.வித்தியாலயம்)

தோற்றம் 11.09.1935
திதி:20.08.2014
மறைவு 05.09.1999

அப்பா! கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று
கட்டி வளர்த்தீர்களே எம்மை
கடந்து விட்டது பதினைந்து ஆண்டுகள்
கடமை முடிந்தது என்று சென்றீர்களோ அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

ஜெட்மோட்டோர்ஸ்,
சுன்னாகம்.
(50889)(4.3.6)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சமய சந்நிதிகளில்

புலோலி, ஓக.20

வடமராட்சி தென் புலோலியூர் முறாவில் சித்தி விநாயகர் ஆலயத்தின் முதலாவது அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது. எதிர்வரும் 25ஆம் திகதி பூங்காவனமும், 26ஆம் திகதி குடமுழுக்கு உற்சவமும், 27 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், சப்பரத் திருவிழாவும், 28ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் விநாயகர் சதுர்த்தியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

பத்து நாள்களும் காலை உற்சவம் 9 மணிக்கும், மாலை உற்சவம் 6 மணிக்கு ஆரம்பமாகும். உற்சவங்களை சிவாச்சார்ய திலகம் சிவஸ்ரீ ராம்சபாநாதக் குருக்கள் நடத்தி வைப்பார். (ஓ)

♦♦♦

வட்டுக்கோட்டை வெப்பபட்டியோலை செந்தில் முருகையா பூரண மண்டலாபிஷேக பூர்த்தி விழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும். அன்றைய தினம் 1008 சங்காபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இரவு திருக்கல்யாண நிகழ்வும் இடம்பெறும்.

மண்டலாபிஷேக காலத்தில் ஆரம்பமான பன்னிரு திருமுறைகளும் தொடர்ந்து ஓதப்பட்டு வருகின்றன. (ஓ)

## மக்களின் பங்களிப்புடன் 200 அடி நீள வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.20

கோப்பாய்ப் பகுதியில் உள்ள ஆயிரத்து 200 அடி நீளமுள்ள வீதி ஒன்றை பிரதேச மக்கள் ஒன்றிணைந்து புனரமைப்புச் செய்துள்ளனர்.

சரவணபவானந்த வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள முத்துமாரி அம்மன் வீதியே இவ்வாறு புனரமைக்கப்பட்டது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் தலைமையில் குறித்த வீதியை அப்பகுதிப்பொதுமக்கள், வலி.கிழக்கு பிரதேச சபை பணியாளர்கள், உறுப்பினர்கள் ஒன்றிணைந்து புனரமைப்புச் செய்தனர்.

கருங்கற்கள் மற்றும் ஊரி மணலைக் கொண்டு குறித்த வீதி புனரமைக்கப்பட்டு மக்களின் போக்குவரத்துக்கு இலகுபடுத்தப்பட்டதாக சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் தெரிவித்தார். (வ-17)

காலை: சந்தானகோபாலர் உற்சவம்
மாலை: கைலாச வாகனம்

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு- 'மனித வாழ்வும் ஆன்மிகமும்' என்ற தலைப்பில் சைவப்புலவர் எஸ்.கே.என்.தவராசாவின் சிறப்புச் சொற்பொழிவும் சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை, மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, வரணி சிட்டிவேரம் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மற்றும் மாகியப்பிட்டி ஸ்ரீ பராசக்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஓ-7)

♦♦♦

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு - திருமதி பங்கயற்செல்வி முகுந்தன், வயலின் - எ.ஜெயராமன், மிருதங்கம் - திருமதி கானகோகிலம் ஜெயம், கெஞ்சிரா - ரி.சண்முகசுந்தரம்.

♦♦♦

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு வீணாகானம் இடம்பெறும். திருமதி விஜிதா பரணிதர சர்மா நிகழ்வில் பங்குபற்றுகின்றார். (ஓ)

♦♦♦

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்கவாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'அநுமன் தூது' இசைப் பேருரை இடம் பெறும். (ஓ)

♦♦♦

யாழ்ப்பாணம் சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'மன ஒருமைப்பாடு' என்பதாகும். (ஓ)

### நல்லூர்த் தேரன்று இலவசமாக நூல் விநியோகம்

'இந்து சமய அற்புதங்கள்' என்ற குறு நூல் நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று அடியவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

நல்லூர் இரதோற்சவத்தை முன்னிட்டு பக்தர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ள இந்த நூலில் தெய்வங்களின் பல்வேறு அற்புதங்கள் மற்றும் ஆன்மிகம் தொடர்பான துறைகளும் இடம்பெற்றுள்ளன.

ஸ்ரீவாணி வெளியீட்டகத்தின் ஆறாவது வெளியீடாக வெளிவரவுள்ள இந்த நூலின் பிரதிகளை அடியார்கள் நல்லூர் ஆலய முன்றிலிலுள்ள யாழ். மாநகரசபை மஹோற்சவ காலப் பணிமனையிலும் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

**தேவை**


நல்ல குருத்தோலை சார்வு தேவை. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.
அண்ணா தொழிலகம்
துரை வீதி, இணுவில். (சி/16101) (7.6.3)


**நல்லூர் உற்சவகால விசேட விலைக்கழிவு**

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு எமது நல்லூர் கிளையில் மட்டும் மலிவு விலையில் அண்ணா உற்பத்திப் பொருள்கள் (நூடில்ஸ் பைக்கற், மல்லிக் கோப்பி ரின், ஜீவாகாரம், டிப்பிடிப்பி பைக்கற், சாம்பிராணிப் பெட்டி) 5 பொருள்கள் அடங்கிய பொதி. ஒன்று 250/= விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
அண்ணா கோப்பி காட்சியறை
பருத்தித்துறை வீதி, நல்லூர். (சி/16102) (7.6.3)
(நல்லூர் சிவன் கோயில் பின்புறம்)

**தவறிவிட்டது**

யாழ்.நகர்ப் பகுதியில் கடந்த 15.08.2014 அன்று தேவராசா வினோபாஜி, ஆனந்தா வீதி, மானிப்பாய் என்னும் முகவரியுடைய எனது தேசிய அ.அ(890732941V) மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் TP. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(31027) (12.3.6)
தொடர்பு: 077 369 9828



பத்தொன்பதாம் நாள் திருவிழா

## நம்பியவர்க்கு அருள் புரிவான் காண்

(நேரிசை வெண்பா)

நல்லூர்க் கந்தனை நாளுந் தொழுவோர்க்கு
தொல்லைகள் எல்லாம் பறந்தோடும் - வல்லோர்கள்
கொடுவினை யழிந்து குறைகள் தீர்ந்திட
நாடுவோம் நல்லூரானை நாம்

வள்ளி தெய்வயானையுடன் வண்ணமயில் மீதேறி
அள்ளி அருளீந்து வரும் கந்தனே - வெள்ளி
அம்பலத்தான் மகனே விநாயகனின் தம்பியே
நம்பியவர்க் கருள்புரிவான் காண்

*ஆ.த.குணத்திலகம்,*
*சாந்தை, பண்டத்தரிப்பு*

## ஏதிலார்க்கு உதவிடையா!

மந்தகாச மதிமுகனே மால்மருகா
மாண்பு பல ஈந்திடையா வேல் முருகா
முக்கணன் முதல்வனீந்த புதல்வா
மெய்மையுணர்ந்திட அருளிடையா
உத்தம புருஷனே குறவஞ்சி மணாளா
உனைத்தொழப் போதுமையா ஒற்றைரூபா
எழில் மிகு தேகமுடையோனே இறைவா
ஏதிலார்க்கு உதவிடையா முருகா

*மேகலா குணசிங்கம்,*
*சுண்டிக்குளி.*

## நற்கருணையருள் நல்லை நகரானே!

அருணகிரியாரின் திருப்புகழின் நாயகனே! - நின்
கருணை பொழியும் பன்னிரு கண்களாலும்
வரமருளும் ஈராறு கைகளாலும்
தரணிதனில் எம்மவர்க்கு நல்வாழ்வு தந்திட வா;
வாடிடும் அடியார் கூட்டமெலாம் தினம்
பாடியே உனைப் பணிந்து போற்றுகிறோம்- உனை
நாடியே சிரமதில் இருகரம் கூப்புவோர் நலன்
தேடியே வந்து நற்கருணையருள் நல்லை நகரானே!

*வாகினி கிருபாகரன்,*
*நாச்சிமார் கோயிலடி.*

## தேவியர் தம்முடன் வலம் வரும் நாயகனே

மாதர்தம் குரலோசை பாவலரின் பாட்டோசை
யாவரையும் ஈர்த்துவைக்கும் நாயகனின் திருக்காட்சி
யாவருக்கும் அருளிடும் அருள் நிதி வள்ளலே
உமை வேண்டும் அடியவரை அருள்கூர்ந்து பார்த்திடையா
தொழுகின்றோம் அழுகின்றோம் துவள்கின்றோம் உன் அடியில்
துயர் துடைத்து காத்திடையா உம் அடியார் நாமன்றோ
எம்மவரின் சொத்தாய் எழிலிலங்கு நற் பதியில்
தேவியர் தம்முடன் வலம் வரும் நாயகனே!

*ப.பத்மநிருபன், சங்கானை.*



# பேசாலை வைத்தியர்களுக்கு பிரியாவிடையும் வரவேற்பும்



வைத்தியர்கள் கௌரவிப்பு

மன்னார், ஓக.20
மன்னார் பேசாலை பிரதேச வைத்தியசாலையில் 10 வருடங்களாக வைத்திய சேவையாற்றி மன்னார் பொது வைத்தியசாலைக்கு இடம்மாறிச் சென்ற வைத்திய கலாநிதி இம்மனுவேல் ஈற்றன் பீரிஸுக்கு பிரியா விடை நிகழ்வும் புதிதாக வைத்திய சாலையில் பொறுப்பேற்றிருக்கும் வைத்திய கலாநிதிகள் திரு. திருமதி கருணாரட்ன ஆகியோருக்கு வரவேற்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பேசாலை பங்கு மக்கள் நடத்திய இந்த விழாவில் பங்குத் தந்தை அருட்பணி எஸ்.வி. அவுதப்பர் அடிகளார், உதவிப் பங்குத் தந்தை அருட்பணி அன்ரனி அடிகளார் உட்பட பேசாலை பக்திச் சபை மற்றும் கழகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பங்குத் தந்தை, விழாநாயகர்கள், கலாபூஷணம் எஸ்.ஏ.மிராண்டா, பங்குச்சபைப் பொருளாளர். சூசை மரியான் பீரிஸ், ஆசிரியை நோ.ஜான்சி குலாஸ் ஆகியோர் உரையாற்றியிருந்தனர். (த)

# பிரதேச சபை உறுப்பினராக இஸ்ஸதீன்

மன்னார், ஓக.20
மன்னார் பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பாகக் கடந்த முறை தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட அப்துல் முத்தலிப் முஹம்மது றிஷாபி மேற்படி கட்சியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக முஹம்மது இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீன் தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வடமாகாண சபைத் தேர்தலின்போது அப்துல் முத்தலிப் முஹம்மது றிஷாபி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சியில் இருந்து கொண்டு அமைச்சர் றிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு ஆதரவு தெரிவித்து தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது.

அது தொடர்பான ஆதாரங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டதன் காரணமாக முஹமட் றிஷாபி கட்சியின் விசாரணைகளுக்கு பல முறை அழைக்கப்பட்ட போதிலும் அவர் அதற்கு செல்லாததால் குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்த கட்சி, அவரை கட்சியில் இருந்து நீக்கியது.

இது தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு அவரின் இடத்துக்கு அந்தத் தேர்தலில் போட்டியிட்டு அடுத்த இடத்தில் இருந்த புதிய உறுப்பினரான முஹம்மது இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீன் என்பவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

இதற்கமைய புதிய உறுப்பினரின் பெயர் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் அரவிந்த ராஜ் ஊடாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-56)

# கழிவு நீரை குளத்தில் கலக்காமல் பாதுகாக்குக

கிளிநொச்சி, ஓக.20
கிளிநொச்சி குளத்தில் நகரக் கழிவுநீர் கலக்காமலிருப்பதை உறுதி செய்ய நகர வர்த்தகர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி குளத்துக்கு அருகில் நகரக் கழிவுகள் பெருமளவில் கொட்டப்படுகின்றன.



கோப்புப்படம்


இதேநேரம் கிளிநொச்சி குளத்தில் கழிவுநீர் கலக்கக் கூடிய வகையில் மக்களின் குடியிருப்புக்கள் மற்றும் அடாத்தாக மேற்கொள்ளப்படும் கட்டட அமைப்புகள் அமைந்துள்ளன.

கிளிநொச்சிக் குளத்தின் சூழலைப் பாதுகாக்கும் வகையில் எல்லோரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும் குளத்தின் அணைக்கட்டு மற்றும் வான் பகுதிகளில் வீசப்படும் கழிவுகளினால் வட்டக்கச்சி பகுதிக்குச் செல்லும் மக்கள் மூக்கை பொத்தியவாறு பயணம் செய்யவேண்டிய அவல நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-18)

# முசலியில் கிராமிய வைத்தியசாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைப்பு

மன்னார், ஓக.20
மன்னார், முசலிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஹுனைஸ் நகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள கிராமிய வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாக இடம்பெற்றது.

இந்த வைத்தியசாலைக்கான அடிக்கல்லை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாறூக் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் ஆகியோர் நாட்டி வைத்தனர். (த-56)



அடிக்கல் நாட்டும் நிகழ்வு

# வவுனியா தமிழ்ச் சங்கம் பதிவு

வவுனியா, ஓக.20
கடந்த பத்து வருடங்களாக வவுனியாவில் இயங்கி வரும் வவுனியா தமிழ்ச் சங்கம் கலாசார அமைச்சின் கீழ் இயங்கும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய் யப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் இதனைத் தெரிவித்தார்.

சங்கம் பதிவு செய்யப்படுவதற்கு எம்முடன் இணைந்து பல வழிகளில் ஆலோசனைகளையும் உதவிகளையும் புரிந்த வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவுக்குச் சங்கம் தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது என்றும் அவர் கூறினார். (த-402)

# வட்டக்கச்சியில் குடிதண்ணீர் பெறுவதற்கு அலையும் மக்கள்

கிளிநொச்சி , ஓக.20
கிளிநொச்சி - வட்டக்கச்சி கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி பெரும் அவலத்தை உருவாக்கியுள்ளது.

வட்டக்கச்சி கிராமத்தின் மாயவனூர் மற்றும் இராமநாதபுரம் கிராமத்தின் அழகாபுரி, புதுக்காடு ஆகிய கிராமங்களில் குடி தண்ணீர் நெருக்கடி அதிகரித்துள்ளது.


புழுதியாறு குளம் வற்றிக்கொண்டிருப்பதன் காரணமாக புழுதியாற்றை சூழவுள்ள கிராமங்கள் குடி தண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

இந்தக் கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் அதன் அளவு போதாமையில் நீர் தேவைகள் அதிகரித்துக் காணப்படுவதாக கிராம மக்கள் கூறுகின்றனர். (த-18)

## றோயலின் கண்ணீர்க் காணிக்கை

எமது கல்வி நிறுவனத்தின்
பொருளியல் பேராசான்

### S.வரதராஜன்



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள் (51021) (12.3.6)
றோயல் அக்கடமி, சங்கானை, யாழ்-நல்லூர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### செல்லத்துரை செல்வராசா

தோற்றம் 01.03.1939 — மறைவு 21.07.2014

எமது குடும்பத் தலைவரின்
31ஆம் நாள் ஆத்மசாந்திக்கிரியைகள்
இன்று (20.08.2014) புதன்கிழமை எமது
இல்லத்தில் நடைபெறவுள்ளன
அவ்வேளை தாங்களும் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து
தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளுமாறும்
அன்புடன் அழைக்கின்றோம்.

அந்தோனியார் கோயிலடி முன்பாக
மானிப்பாய்.
077 791 7765, 077 971 6433

குடும்பத்தினர். (51036)(7.6.3)

## 25ஆவது ஆண்டு நினைவஞ்சலி

### நாகம்மா கதிரவேலு
(சீனிவாசகம்)




தோற்றம் 23.11.1923 — மறைவு 25.08.1989

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களை ஆறாத்துயரில் தவிக்கவிட்டுக்
காற்றோடு காற்றாகக் கலந்து 25 வருடங்கள்
ஆகிவிட்ட இன்றைய தினத்தில்
உங்கள் ஆத்மா ஐயாவுடன் இணைந்து
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

லண்டன் சீனிவாசகம்
பூதவராயர் வீதி, குடும்பத்தினர்
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(51030)(7.6.3)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னத்தம்பி சிவமகாராஜா

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,
தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்,
நிர்வாக இயக்குநர் "நமது ஈழநாடு" பத்திரிகை

தோற்றம் 28.06.1938 — மறைவு 20.08.2006

அன்புச் சகோதரனே! எட்டு ஆண்டுகள்
கடந்தாலும் ஆறாது எம் துயரம்
என்றும் எங்கள் நெஞ்சங்களிலே
வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்
உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மடத்தடி,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(51036) (7.6.3)

சகோதரர்கள்,
மருமக்கள்,
உறவினர்கள்.

# அச்சுறுத்தலுக்கு அடி பணியோம்

## இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை

காஸா, ஓக.20

ஹமாஸ் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்குப் பயப்படமாட்டோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.



பெஞ்சமின் நெதன்யாகு

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும், இஸ்ரேல் நாட்டுக்கும் இடையே பல ஆண்டுகளாக பகைமை இருந்து வருகிறது. கடந்த மாதம் 8 ஆம் திகதி இரு தரப்பினருக்கும் இடையே மீண்டும் ஆரம்பித்த கடும் சண்டையில் இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் காஸா பகுதியில் மட்டும் 1,900 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். சுமார் 4 லட்சத்து 25 ஆயிரம் பேர் மோதல் காரணமாக காஸா பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தும் இருக்கிறார்கள்.

இருதரப்பினருக்கும் இடையே நிலவும் மோதல் போக்கை முடிவுக்கு கொண்டுவர எகிப்து நாடு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் இரு தரப்பினரும் செய்து கொண்டிருந்த 5 நாள்களுக்கான போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது.

இது குறித்து ஹமாஸ் தீவிரவாதிகள் கூறுகையில்; இஸ்ரேல் மட்டுமன்றி, காஸா பகுதி பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறோம் என்று கூறி எகிப்தும் எங்களை முற்றுகையிட்டு நெருக்கடி அளிக்கிறது. எகிப்துடன் பேச்சு நடத் துவது பலஸ்தீன அரசுதான். நாங்கள் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். காஸாவில் துறைமுகம் ஒன்றையும் முந்தைய சண்டையில் சேதப்படுத்தப்பட்ட காஸா நகர விமான நிலையத்தையும் இஸ்ரேல் புதுப்பித்து தரவேண்டும் என்றனர். இல்லையென்றால் இஸ்ரேலுக்கு எதிரான போர் நீண்டகாலப் போராக மாறும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்து இருக்கிறார்கள்.

ஹமாஸ் தீவிரவாதிகள் விடுத்துள்ள எச்சரிக்கை குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தனது அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசினார். அப்போது அவர் கூறுகையில்;

தொடர்ந்து போர் நடக்கும் என்று ஹமாஸ் தீவிரவாதிகள் விடுத்துள்ள அச்சுறுத்தலுக்கு இஸ்ரேல் பயப்படாது. எமது மக்களின் பாதுகாப்புக்கு எந்த விதத்திலும் பிரச்சினை ஏற்படாது என்று தெரிந்தால் மட்டுமே போர் நிறுத்தத்துக்கு நாம் ஒப்புக் கொள்வோம். தொடர்ந்து தாக்குதல் நடத்துவதன் மூலம் எம்மைப் பணிய வைக்கலாம் என்று அவர்கள் கனவு கண்டால் அது தவறானது. எம்மைப் பொறுத்தவரை அமைதி திரும்பவில்லை என்றால் ஹமாஸ் தீவிரவாதிகள் மீது தொடர்ந்து தாக்குதலை நடத்துவோம் என்றார்.

அவரது கருத்துத் தொடர்பில் ஹமாஸ் செய்தி தொடர்பாளர் சமி அபுவி ஜுக்ரி கூறுகையில்; "முதலில் பலஸ்தீனியர்களின் பாதுகாப்புக்கு தீர்வு கண்டால்தான் இது சாத்தியமாகும். மேலும் எங்கள் மீதான முற்றுகையைக் கைவிட்டு எங்களது கோரிக்கைகளையும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார். (வ)

## தீவிரவாதிகளிடமிருந்து மொசூல் அணை மீட்பு



அமெரிக்காவின் உதவியுடன் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்டி மொசூல் அணையை குர்தீஷ் படைகள் கைப்பற்றியுள்ளன.

ஈராக்கில் ஷியா முஸ்லிம் அரசுக்கு எதிராக சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் போர்க்கொடி உயர்த்தி சண்டையிட்டு வருகின்றனர். கடந்த 7 ஆம் திகதி ஈராக்கில் குர்திஷ் படையினருடன் கடும் சண்டையிட்டு மொசூல் அணையை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் மொசூல் அணையை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதற்கிடையே குர்தீஷ்தான் தலைநகர் எர்பில் நோக்கி முன்னேறும் தீவிரவாதிகளைத் தடுக்கும்படி ஈராக் மற்றும் குர்தீஷ்தான் மாகாண அரசுகள் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்தன. அதனையடுத்து அமெரிக்கா தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை ஆரம்பித்தது.

ஈராக்கில் மொசூல் அணை மற்றும் குர்திஷ் தலைநகர் எர்பில் பகுதிகளில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைத்து, அமெரிக்கப் போர் விமானங்கள் நேற்று முன்தினம் குண்டு வீச்சு நடத்தின.

இதில் உயிர்ச்சேத விவரம் குறித்து தெரிய வரவில்லை. ஈராக்கில் பல்வேறு நகரங்களை தங்கள் வசப்படுத்தியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து மொசூல் அணையை மீட்கப் போராடி வரும் குர்திஷ் படை வீரர்களுக்கு ஆதரவாக, அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதன் மூலம் அந்த அணைப் பகுதியின் பெரும் பகுதி சுற்றிவளைத்து மீட்கப்பட்டது.

குர்திஷ் படைகளுக்கு ஆதரவாக தீவிரவாதிகளை நோக்கி அமெரிக்கா சரமாரியாக தாக்குதல் நடத்தியது. தற்போது அனை குர்திஷ்தான் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளனர். (வ)

## போதைப்பொருள் குற்றத்தில் ஜாக்கி ஜானின் மகன் கைது

பீஜிங், ஓக.20

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பிரபல நடிகர் ஜாக்கி ஜானின் மகன் ஜெய்சி ஜான் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை சீனப் பொலிஸார், பெய்ஜிங் நகரில் வைத்துக் கைது செய்தனர்.




ஜெய்சி ஜான்

32 வயதான ஜெய்சி ஜானும், அவரது தந்தையைப் போலவே நடிகரும் பாடகரும் ஆவார். அவரிடம் போதைப் பொருள்கள் இருந்ததாகக் கூறி சீனப் பொலிஸார் கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜெய்சி ஜான் பீஜிங்கில்தான் வசித்து வருகிறார். அங்குள்ள அவரது வீட்டை பொலிஸார் சோதனையிட்டு மூன்றரை அவுன்ஸ் போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ளனர். அவர் போதைப் பொருள் பயன்படுத்தியதையும் சோதனை மூலம் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். இதேவேளை தாய்வான் நடிகர் கைகோவும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்கள் தவிர சோங் என்ற ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சமீப காலமாக சீனாவில் பொலிஸார் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் சீனா, ஹொங்காங் மற்றும் தாய்வானைச் சேர்ந்த பல திரையுலகினர் சிக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



அமெரிக்காவின் பேர்குஸன் பிரதேசத்தில் ஆயுதமின்றி இருந்த கறுப்பின இளைஞர் ஒருவர் கடந்த வாரம் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். சம்பவத்தை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் பலர் முகங்களை மறைத்தவாறு இணைந்து கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (வ)

## காஷ்மீர் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை

### இந்தியா-பாக். பேச்சு ரத்து குறித்து அமெ.தெரிவிப்பு

காஷ்மீர் தொடர்பான கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என்று அமெரிக்கா மீண்டும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுடனான இரு நாட்டு பேச்சை இந்தியா ரத்து செய்வது தொடர்பாக வொஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளரான மேரி ஹார்ப் கருத்து வெளியிடுகையில், பேச்சுவார்த்தை ரத்தானமை துரதிர்ஷ்டவசமானது என்று கூறினார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் இருதரப்பு பேச்சுக்களை மேம்படுத்த அனைத்து விதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இதனை அமெரிக்கா தொடர்ந்து ஆதரிக்கும் என்றும் கூறினார். காஷ்மீர் பிரச்சினைக்கு இரு நாடுகளும் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று மேரி ஹார்ப் கூறியுள்ளார். (வ)

## ஈக்குவடோர் தூதரகத்திலிருந்து வெளியேறவுள்ளார் அசாஞ்சே

லண்டன், ஓக.20

விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்திலிருந்து விரைவில் வெளியேறவுள்ளதாக அறிவித்துள்ளார்.



அசாஞ்சே

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஜூலியன் அசாஞ்சே லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தங்கியிருந்து வருகின்றார்.

தூதரகத்தை விட்டு வெளியில் வந்தால் கைதுசெய்யப்பட்டு சுவீடனிடம் ஒப்படைக்கப்படக்கூடிய நிலையிலும் அவர் உள்ளார்.

சுவீடனில் நடந்துள்ளதாகக் கூறப்படும் பாலியல் தாக்குதல் சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அசாஞ்சே மீது உள்ளன.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் மூலம் அமெரிக்காவின் இரகசியத் தகவல் தொடர்பாடல்களை அசாஞ்சே அம்பலப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், அசாஞ்சே செய்தியாளர்களிடம் கூறுகையில், 'என் மீது எந்தக் குற்றமும் சாட்டப்படவில்லை. இப்படி ஒரே இடத்தில் அடைந்து கிடப்பது எனது ஆரோக்கியத்துக்கு நல்லது அல்ல. இங்கு தஞ்சம் அடைந்த காலத்தில் இருந்து அதிகமாகக் கஷ்டப்பட்டு விட்டேன். விரைவில் தூதரகத்தை விட்டு வெளியேற உள்ளேன்' என்று தெரிவித்துள்ளார். (வ)

## சீனாவின் ஊடுருவலை மறுத்துள்ளது இந்தியா



லடாக், ஓக.20

இந்திய எல்லையில் உள்ள லடாக்கில், சீன ராணுவம் 25 கி.மீ தொலைவுக்கு ஊடுருவியதாக வெளியான தகவலை இந்தியா மறுத்துள்ளது.

லடாக்கில் சீன இராணுவத்தினர் முகாம் அமைத்து தங்கியுள்ளதாகவும், இதனால் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக இந்திய இராணுவத்தினரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு முகாமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய எல்லையின் லடாக் அருகே இந்தியஇராணுவத்தினர்ரோந்து சென்றபோது, அங்கு சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தினர்முகாமிட்டிருந்ததைக் கண்டதாகவும், சீனப் படையினர் சுமார்25கி.மீதொலைவுக்குஎல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியை மீறி உள்நுழைந்ததாகவும் கூறப்பட்டது.

மேலும், இந்திய எல்லையில் ஒரு புதிய நிலையை ஏற்படுத்தி 'இது சீனப் பகுதி, வெளியேறுங்கள்' என்று எழுதப்பட்ட பதாகைகளுடன் சீன இராணுவத்தினர் அங்கு முகாமிட்டதாகவும் எல்லைக்கட்டுப் பாட்டுப் பகுதியிலிருந்து தகவல் வெளியானதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே, இந்திய இராணுவ உயர் அதிகாரி எஸ்.டி.கோஸ்சுவாமி இது பற்றிக் கூறும்போது, இந்திய மற்றும் சீன எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில், பல்வேறு கோணங்களில் பார்க்கும்போது, எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதி சற்று குழப்பம் ஏற்படுத்துவதாகவே இருக்கும். இரு நாடுகளும் எல்லைப் பகுதியில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ளும் போது, வீரர்களுக்கிடையே, எல்லையைப் பிரித்துப் பார்ப்பதில் குழப்பம் ஏற்படும். இதனால் எல்லையை மீறும் சம்பவங்களும் நடக்கும். தற்போது, இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுப்பகுதியில், சீனா அத்துமீறியிருக்கவில்லை - என்றார். (வ)

## 70 அடுக்குகளுடன் உலகின் மிக உயரமான ஆலயம்




70 அடுக்குகளைக் கொண்ட உலகின் மிக உயரமான இந்து ஆலயம் உத்தரப் பிரதேசத்தில் உள்ள மதுரா நகரில் சந்திரோதயா மந்திர் என்ற பெயரில் அமைக்கப்படவுள்ளது.

ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கம் என்று குறிப்பிடப்படும் இஸ்கான் அமைப்பின் ஏற்பாட்டில் சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தற்போதைய அக்ஷய் தாம் பிருந்தாவன் பகுதி அருகே 213 மீற்றர் உயரத்தில் அமைக்கப்படவுள்ள இந்தச் சந்திரோதயா மந்திருக்கான திட்டப் பணிகளைக் கடந்த ஹோலி பண்டிகையின்போது அந்த மாநில முதல் மந்திரி அகிலேஷ் யாதவ் ஆரம்பித்து வைத்தார்.

அதனையடுத்து, வேத விற்பன்னர்களின் மந்திர ஒலியுடன் கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இந்த விழாவில் ஆன்மிக பெரியோர்கள், மதுரா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமா மாலினி உள்ளிட்ட முக்கிய பிரமுகர் கள் பலர் பெருந்திரளாகப் பங்கேற்றனர். (வ)



கிருஷ்ணர் பிறந்தநாளை ஜென்மாஷ்டமி திருவிழாவாக வடமாநிலத்தவர்கள் 8 நாள்களுக்குக் கொண்டாடுவது வழக்கம். ஆரம்ப நாளான திங்கட்கிழமை மும்பையில் இளைஞர்கள் தயிர்ப் பானையை உடைக்கும் உறியடி விழா நடைபெற்றது. (வ)

# இந்திய-பாக். பேச்சு ரத்து

டில்லி, ஓக.20

இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் புதுடில்லியில் காஷ்மீர் பிரிவினைவாத தலைவர்களைச் சந்தித்ததை அடுத்து, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே நடை பெறுவதாக இருந்த வெளியுறவுச் செயலாளர் மட்டத்திலான பேச்சுகளை இந்தியா ரத்துச் செய்துள்ளது.

பாகிஸ்தான் தூதரின் இந்தச் சந்திப்பு பல கேள்விகளை எழுப்பியுள்ளது என்றும், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் இது ஒரு குறுக்கீட்டை ஏற்படுத்தியுள்ளது என்றும் இந்திய வெளியுறவுத் துறைஅமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருத்தின் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று இந்தியாவுக்கான பாகிஸ்தானிய தூதர் அப்துல் பசித்திடம் இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங் தெரிவித்துள்ளதாகவும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புக்கு அழைப்பு விடுத்து இந்தியா முன்னெடுத்த இரு நாடுகளுக்கும் இடையேயான இராஜதந்திர ஈடுபாட்டை, பாகிஸ்தான் தூதரின் தற்போதைய நடவடிக்கை சீர்குலைத்துள்ளது என்றும் வெளியுறவுத்துறை செயலாளர் சுஜாதா சிங் பாகிஸ்தானிய தூதரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தில் இரு நாட்டு வெளியுறவுச் செயலாளர்களும் எதிர்வரும் 25 ஆம் திகதி பேச்சு நடத்துவதாக இருந்தது.

தற்போதைய சூழ்நிலையில் இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் இஸ்லாமாபாத் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுத் துறைஅமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருத்தின், பேச்சுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் பாகிஸ்தான் தூதரகம் காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களுடன் பல முறை பேச்சுகளை நடத்தி வந்துள்ளது. எனினும் வெளியுறவுச் செயலாளர் மட்டத்திலான பேச்சுகள் நடக்கவிருக்கும் சமயத்தில் நடந்திருக்கும் இந்தச் சந்திப்பு ஆளும் பாரதிய ஜனதா கட்சியிடமிருந்தும் காங்கிரஸ் கட்சியிடமிருந்தும் கடும் எதிர்ப்புகளைக் கிளப்பியுள்ளது.

கடந்த சில தினங்களாக இந்திய எல்லையில் பாகிஸ் தான் இராணுவம் தொடர்ந்தும் அத்துமீறி தாக்குதல்களை நடத்தி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## சதீஸ்கரில் மாவோக்கள் தாக்குதல்; துணைப்படை மூவர் காயம்

ராய்ப்பூர், ஓக.20

சதீஸ்கர் மாநிலம் தந்தேவாடா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளனரா என துணை இராணுவ படையின் கோப்ரா பிரிவு வீரர்கள் சோதனை செய்து கொண்டிருந்தபோது அவர்கள் மீது மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் 3 வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

மாவோயிஸ்ட்டுகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்திய இடத்தில், துணைப் படையினர் குவிக்கப்பட்டு, மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிரான தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (வ)

## மோடி அலையை நம்பாதீர்

### நிதின் கட்காரி வலியுறுத்து



நிதின் கட்காரி

புனே, ஓக.20

வரவிருக்கும் சட்டமன்ற தேர்தல்களில், பா.ஜ.க. தொண்டர்கள் மோடி அலையை மட்டுமே சார்ந்திருக்க வேண்டாம் என்று மத்திய அமைச்சரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான நிதின் கட்காரி கேட்டுக் கொண்டுள்ளார்.

மகாராஷ்டிரம் உள்ளிட்ட சில மாநிலங்களில் விரைவில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், புனேவில் பா.ஜ.க. தொண்டர்கள் மத்தியில் பேசிய நிதின் கட்காரி, நாட்டில் மோடி அலை இருப்பது உண்மையானதுதான். ஆனால் மோடி அலையை மட்டும் நம்பி மீண்டும் ஆட்சிக்கு வந்து விடலாம் என்று தொண்டர்கள்கனவு காணவேண்டாம். தொண்டர்கள் கீழ்மட்ட மக்களிடம் இருந்து தேர்தல் பரப்புரையைத் தொடங்க வேண்டும். வாக்காளர்களின் நம்பிக்கையை சம்பாதிக்க வேண்டும். அப்போதுதான் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்று தெரிவித்துள்ளார். (வ)

## திட்டக் குழுவுக்கு மாற்றாக மக்களின் ஆலோசனையை கேட்கிறார் மோடி

டில்லி, ஓக.20

திட்டக்குழு என்ற அமைப்புக்கு மாற்றாக ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதற்கான யோசனைகளைப் பொது மக்கள் தெரிவிக்கலாம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டில்லி செங்கோட்டையில் சுதந்திர தினத்தன்று கொடி யேற்றி வைத்து பேசிய பிரதமர் நரேந்திரமோடி, திட்டக்குழு என்ற அமைப்பு முறையைக் கைவிடுவதற்கானகாலம் வந்து விட்டது என்று கூறியிருந்தார். இதற்கு காங் கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இருப்பினும் திட்டக் கமிஷனை மாற்றி அமைப்பதில் பிரதமர் உறுதியாக இருப்பதாக கூறப்படுகிறது. இத்திட்டக்குழுவுக்கு மாற்றாக 5 சிந்தனையாளர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க மோடி முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் மோடியைத் தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் முன்னாள் மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு, பொருளாதார வல்லுநர்கள் அரவிந்த் பங்கரியா, பிபேக் டெப்ராய் ஆகியோர் சேர்க்கப்பட இருக்கின்றனர். அத்துடன் மேலும் 2 பொருளாதார வல்லுநர்களும் இந்தக் குழுவில் இடம்பெறக் கூடும். இதற்கான முறையான அறிவிப்பு ஓரிருநாள்களில் வெளியாகக் கூடும் என்று கூறப்படுகிறது. இதனிடையே பிரதமர் நரேந்திர மோடி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திட்டக்குழுவுக்கு மாற்றாக 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற ஒரு அமைப்பு முறை தேவை. இதில் மாநிலங்களின் பங்களிப்பு வலுப்படுத்தப்பட வேண்டும். இந்த அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை பொதுமக்களும் தெரிவிக்கலாம் என்று தெரிவித்துள்ளார். (வ)

19 AUG 2014

# தமிழரின் பிறப்பு சான்றிதழில் நகைப்புக்கிடமான பெயர் பதிவு

## மொழிப் பிரச்சினை காரணமாக மத்திய மாகாணத்தில் இந்த நிலைமை

கொழும்பு, ஓக.20

மொழிப் பிரச்சினை காரணமாக தமிழர்களின் பிறப்புச் சான்றிதழில் நகைப்புக்கிடமான பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன. சிங்கள மொழிபதிவாளர் தமக்கு விளங்கும் விதத்தில் தமிழ்ப் பெயர்களைப் பதிவு செய்கின்றனர் - இவ்வாறு தெரிவித்துள்ளனர் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த தமிழர்கள்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தற்போது நாடளாவிய ரீதியில் மொழி ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்போதே மத்திய மாகாணத் தமிழர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

"பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யும் பதிவாளர் சிங்கள மொழியிலேயே தேர்ச்சி பெற்றவராக இருக்கின்றார். அதனால் நாம் எமது பிள்ளைகளின் பெயர்களைப் பதிவு செய்யச் செல்லும்போது பதிவாளர் அவருக்கு விளங்கிக் கொண்ட விதத்தில் பெயர்களைப் பதிவு செய்கின்றார். அதனால் எமது பிள்ளைகளின் பெயர்கள் கேளிக்கைக்குரியதாக - நகைப்புக்கிடமானதாக பிறப்புச் சான்றிதழில் பதியப்படுகின்றது.

அதனை மாற்றுவதற்கு அலைந்து திரிய வேண்டியுள்ளது"- என்றும் அந்த மாகாண தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

"பதிவாளர் என்ன பிள்ளை? என்று கேட்கும்போது, நாம் "ஆம்பிளப்பிள்ளை" என்று கூறினால், பதிவாளர் அதை பிள்ளையின் பெயர் என விளங்கிக் கொண்டு பதிவுச் சான்றிதழில் பதிந்து விடுகின்றார்.

அதேபோல, "எத்தனையாவது பிள்ளை?" என்று அவர் கேட்கும்போது "மூத்த பிள்ளை" என்று தெரிவித்துவிட்டால், அதையும் பிள்ளையின் பெயரில் பதிந்து தந்து விடுகின்றார்"- என்றும் அந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

"பதிவாளர் பிறப்புச் சான்றிதழ் பதிவு செய்வதில் அதிக தவறுகளை விடுகின்றார். அவரால் தமிழ் மொழியை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அதனால் தமக்கு விளங்கும் விடயங்களைக் கொண்டு பிறப்புச் சான்றிதழைப் பதிந்து தந்துவிடுகின்றார்"- என்றும் அந்த மக்கள் ஆய்வில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்துள்ளனர். (ற-14)

# தவறை நிரூபித்தால் பதவி விலகுகின்றேன்

## கல்வி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.20

தற்போது நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பொருளியல் வினாத்தாளில் தவறு இடம்பெற்றுள்ளது என்று நிரூபித்தால், மறுநாளே நாடாளுமன்றத்தில் பதவியைத் தூக்கியெறிவேன் என்று தெரிவித்துள்ளார் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன. சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"என் மீதும், அரசு மீதும் சேறு பூசுவதே, ஆசிரியர் சங்கத்தின் நோக்கம். இதற்கு முன்னர் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் முன்னரே வெளியானது என்று மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டியிருந்தார். அது தொடர்பான வழக்கு கம்பஹா நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. ஆயினும் அந்தக் குற்றச்சாட்டு இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

எது எவ்வாறு இருப்பினும் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர். சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# இ.போ.சவுக்கு 2 ஆயிரம் புதிய பஸ்கள்




கொழும்பு, ஓக.20

நாடு முழுவதும் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் நோக்கில் 2 ஆயிரம் புதிய பஸ்களை கடன் அடிப்படையில் இந்திய நிறுவனம் ஒன்றிடம் கொள்வனவு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக 100 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பயன்பாட்டில் உள்ள பஸ்களில் பெரும்பாலானவை 15 ஆண்டுகளுக்கும் மேலாக சேவையில் ஈடுபடுகின்றன. அந்த பஸ்களில் பல நீண்ட சேவையால் பழுதடைந்துவிட்டன. அவற்றில் ஆயிரம் பஸ்களை சேவையில் இருந்து நீக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே புதிய பஸ்களைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை - இந்திய கூட்டிணைவின் மூலமாக தற்போது இலங்கைக்கு 122 புதிய பஸ்கள் கிடைத்துள்ளன என்றும், இவை நாடு முழுவதும் சேவையில் ஈடுபடுவதற்காக போக்குவரத்துச் சபைகளின் சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# 14 மாவட்டங்களில் மொழி ஆய்வு

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நடத்துகின்றது

கொழும்பு, ஓக.20

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் நாடளாவிய ரீதியில் 14 மாவட்டங்களில் 36 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மொழி ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஆய்வு நடவடிக்கைகள் இந்த வருடம் முடிவடையவுள்ளது.

வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், மேல் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய 5 மாகாணங்களிலும் மாவட்ட ரீதியாக இந்த ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 68 இற்கும் மேற்பட்ட மொழி ஆய்வாளர்கள் இந்த ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் மக்கள் எதிர்கொள்ளும் மொழிப் பிரச்சினைகளை இலக்காக வைத்து இந்த ஆய்வு நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்கள், பொலிஸ் நிலையம் மற்றும் ஏனைய பொது இடங்களில் ஏற்படுகின்ற மொழிப் பிரச்சினைகள் தொடர்பில் நேரடியாக மக்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இந்த ஆய்வு நடவடிக்கைகள் முடிவடைந்ததும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்குமான தீர்வு நடவடிக்கைகள் தொடர்புடைய திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ளன என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது. (ற-14)

# பிழையான தகவல்களை கூறும் அரசியல்வாதிகள்

## குற்றஞ்சாட்டுகின்றனர் மகாநாயக்க தேரர்கள்

கொழும்பு, ஓக.20

அரசியல்வாதிகள் பிழையான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர் என்று மகாநாயக்க தேரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தனிப்பட்ட ரீதியில் தம்மைச் சந்திக்க வரும் சில அரசியல்வாதிகள், சந்திப்பின் பின்னர் பிழையான கருத்துக்களை ஊடகங்களுக்கு வெளியிட்டு வருகின்றனர் என்று அஸ்கிரிய பீட உறுப்பினர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஆசிகளையும் ஆலோசனைகளையும் வேண்டி மல்வத்து அஸ்கிரி பீடாதிபதிகளை சந்திக்கும் சில தரப்பினர், திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநாயக்க தேரர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கு முரணான வகையில் அரசியல்வாதிகள் கருத்து வெளியிடுகின்றனர். பௌத்த விவகாரங் களில் எவ்வித தொடர்பும் இல்லாதவர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளால் அரசுக்கும் நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆரம்பமாகியது. அதில் 120க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர். (ற)

# பஸ் விபத்தில் 21 பேர் காயம்




கொழும்பு, ஓக.20

இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியில் எஹெலியகொட - பரகடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளனர். ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதி மற்றும் 20 பெண் ஊழியர்களும் காயமடைந்த நிலையில் எஹெலியகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# போர் இடம்பெற்ற காலத்தில் எங்கிருந்தனர் பொது பலசேனா சண்டியர்கள்

## கேள்வி எழுப்புகின்றார் அமைச்சர் மேர்வின் சில்வா

கொழும்பு, ஓக.20

போர் நடைபெற்ற காலத்தில் பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கல கொட அத்தே ஞானசார தேரர் போன்ற சண்டியர்கள் எங்கு பதுங்கியிருந்தார்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா.

படையினர் போர் புரிந்த காலத்தில் கலகொட அத்தே ஞானசார தேரர் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


"போர்முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரே அனைத்து சண்டியர்களும் வெளியே இறங்கியுள்ளனர். பணம் சம்பாதிக்கவும், அதிகாரத்தை பெருக்கிக் கொள்ளவுமே சிலர் காவி உடை அணிந்துகொள்கின்றனர்.


காவி உடை மற்றும் பௌத்த மதம் போன்றவற்றைப் பயன்படுத்தி இயக்கங்களை உருவாக்காது, வேறு எவ்வாறான பெயர்களைப் பயன்படுத்திக் கொண்டாலும் பரவாயில்லை.




பாதுகாப்புப் படையினரின் அர்ப்பணிப்பு இல்லாவிட்டால் 30 ஆண்டு காலப் போர் இல்லாதொழித்திருக்க முடியாது.

தற்போது பல்வேறு வழிகளில் அறைகூவி வரும் ஞானசார தேரர் போர் நடைபெற்ற காலத்தில் எங்கிருந்தார். படைவீரர்களின் அர்ப்பணிப்பால் நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னரே சண்டியர்கள் வெளியே வருகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)





## இன்றைய பேஸ்புக் தத்துவம்

மொக்கை போடுதல் எல்லோர்க்கும் எளிது, அரியவாம் கடலை போடுதல்

## இவருக்கு 'கேர்ள் பிரண்ட்' இல்லையாம் !

சமந்தாவுடன், சில ஆண்டு களாக காதல் கிசுகிசுவில் சிக்கியிருப்பவர் சித்தார்த். இது குறித்த ஊடகங்களின் கேள்விகளுக்கு, இன்னமும் மழுப்பலாகவே பதிலளித்து வருகிறார் அவர். 'எப்போது திருமணம் செய்யப் போகிறீர்கள்?' என்று அவரிடம் கேட்ட போது, 'எனக்கு தோழி யாருமில்லை. ஆனால், திருமண வயதாகி விட்டதால், அனைவரும் இதுபற்றியே கேட்கின்றனர். அதனால், அடுத்த ஆண்டில் திருமணம் செய்து கொள்ள தீர்மானித்துள்ளேன். ஆனால், மணப் பெண் யார் என்று எனக்கு தெரியாது' என்று, மறுபடியும் நழுவலாக பதில் அளித்துள்ளார்.



## இதுக்கெல்லாமா திருமணத்தை நிறுத்துவாங்க ?

இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த மீர் மசூத் அலி என்பவருக்கும் ஹைதராபாத்தைச் சேர்ந்த முகமது கவுஸ் பாஷா என்பவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 9 ஆம் திகதி திருமணம் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் கடந்த 7 ஆம் திகதி மணமகன், மணமகளைப் பார்க்க அவள் வீட்டுக்கு சென்றிருந்தார். அப்போது மணமகள் தனது கைக ளில் மருதாணி வைத்து கொள்ளாமையினால் தமது திருமணத்தை நிறுத்துமாறு மணமகன் கோபமாக தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் மணமகள் வீட்டார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மண மகளின் வீட்டார் மணமகன் கேட்ட சீதனத்தை ஏற்கனவே கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இடத்தைப் பிடித்தது மகிழ்ச்சியே



தொடர்ச்சியாக சின்னத்திரை தொடர்களில் பல வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தவர் ரேகா. இடையில் காணாமற் போனார். சிறிய இடைவெளிக்குப் பிறகு இப்போது மீண்டும் பிசியாகிவிட்டார்.

பாசமலர், மரகதவீணை தொடர்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார். நடிப்பிலும், தோற்றத்திலும் பழம்பெரும் நடிகை சவுகார் ஜானகியின் சாயல் இருப்பதால் இவரை சின்னத்திரை சவுகார் என்று செல்லமாக அழைக்கிறார்கள்.

'நான் வில்லியாக நடிக்கவில்லை. ஆனாலும் என்னுடைய கதாபாத்திரங்கள் பெண்கள் திட்டு கிற கதாபாத்திரங்களாக அமைந்து விடுகிறது.

அடிக்கடி அழுது நடிப்பதால் சின்னத்திரை சவுகார் ஜானகி என்கிறார்கள். அவ்வளவு பெரிய ஜீனியசோடு என்னை ஒப்பிட்டுப் பேசுவது சந்தோஷமாக இருக்கிறது.

63 நாயன்மார்கள் தொடரில் சிவகாமியாக நடித்ததைப் பார்த்தவர்கள் திருநீலகண்டர் படத்தில் சவுகார் ஜானகி நடித்த மாதிரியே இருந்தது என்றார்கள். எனக்கு ரொம்ப மகிழ்ச் சியாக இருந்தது. இடையில் எனது சொந்த பிரச்சினைகள் காரணமாக ஒதுங்கி இருந்தேன். இனி தீவிரமாக நடிப்பில் கவனம் செலுத்துவேன் என்கிறார் ரேகா.




## 2050இல் உலகம் எப்படி இருக்கும்?

பையன்: அம்மா இவன்தான் உன் பேரன்.
அம்மா: கல்யாணத்துக்கு ஏன்டா எங்கள கூப்பிடேல்ல....!

பலசரக்கு கடை:

* அண்ணாச்சி 2 ஆயிரம் ரூபாவுக்கு 100 கிராம் சீரகம் குடுங்க.
* சூப்பர்ஸ்ரார் ரஜினிகாந்தின் அடுத்த படத்தில் ரஜினியின் அம்மா வேடத்தை த்ரிஷா ஏற்றார்.
* பேஸ்புக்கின் நிர்வாக பொறுப்பை, மார்க் (face book owner) அவரது இளைய மகனிடம் ஒப்படைத்தார்.
* 35 வருடங்களுக்கு முன் காணாமற் போன மலேசிய விமானத்தை விஜயகாந்த் (கப்டன்) கண்டு பிடித்தார்.
* இலங்கை தமிழர்களை காப்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென தி.மு.க போர்க்கொடி.
* இன்று மாலை சரியாக 5 மணிக்கு சென்னை அனைத்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு அம்மா இலவச கார் வழங்குகிறார்.
* ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதான சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரது தீர்ப்பு வழக்கு ஒத்திவைப்பு.

*யாவும் கலப்படமற்ற கற்பனை*








# வெந்நீரின் மகத்துவம்

சுக்கு கலந்த வெந்நீரை அடிக்கடி குடித்து வந்தால், வாயுத் தொல்லை இருக்காது. அடிக்கடி வெந்நீர் குடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு அஜீரணத்தால் ஏற்படும் தலைவலி வரவே வராது.

வெந்நீர் இரத்தத்தில் உள்ள நஞ்சை வெளியேற்றுகிறது. வயிற்றுப் புண்ணினால் ஏற்படும் வலியைக் குறைக்க, மிதமான சூடான வெந் நீரைச் சிறிது சிறிதாகக் குடிப்பது நல்லது. நல்ல பலமான விருந்து சாப்பிட்ட பிறகு வெந்நீரைக் குடித்தால். சாப்பிட்ட விருந்தானது எளிதில் ஜீரணமாகி விடும்.

கால் பொறுக்கும் அளவுக்கு வெந்நீரை ஒரு பாத்திரத்தில்விட்டு, அதில் கல் உப்பையும் போட் டுக் கலக்கவும். அந்த வெந்நீரில், கால் பாதங்களைப் பதினைந்து நிமிடங்கள் வைத்து எடுத்தால் கால் வீக்கம் குறையும்.

தாகம் எடுத்தால் பச்சைத் தண்ணீரைக் குடிக்காமல், பொறுக்கும் அளவு சூடான வெந்நீரைக் குடித்து வந்தால், உடம்பில் உள்ள வேண்டாத கழிவுகள் வெளியேறும்.

சாப்பிடுவதற்கு அரை மணி நேரம் முன்பு ஒரு டம்ளர் வெந்நீர் குடித்து வந்தால் உடல் எடை குறையும்.



# முடி உதிர்வதை தவிர்க்க

வாரம் இருமுறை கற்றாழை தேய்த்து ஒரு மணி நேரம் ஊற வைத்து பிறகு குளித்தால் தலைமுடி உதிர்தல்,தலையில் பூச்சி வெட்டுதல் மற்றும் பொடுகு என்பவற்றை தவிர்க்கலாம்.

வெந்தயத்தை ஊற வைத்து பிறகு அரைத்து அதை தலையில் தேய்த்து வர தலைமுடி நன்கு வளரும். செம்பருத்தி இலையை கருவேப்பில்லையுடன் சேர்த்து அரைத்து அதை தலையில் தேய்த்து வர தலைமுடி பொலிவு பெறும்.

# அல்சருக்கு அருமருந்து

வயிற்றில் உள்ள குடல்களில் சுரக்கும் அமிலங்களும் நச்சுப் பொருள்களும் அரிப்பதன் காரணமாக குடல் புண் என்னும் அல்சர் ஏற்படுகிறது.

பச்சை வாழைப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இந்த பாதிப்பில் இருந்து விடுபடலாம்.

குடல்களில் பழுதுபட்ட மெல்லிய சவ்வுத் தோல்களை விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றி விடும் சக்தி பச்சை வாழைப்பழத்திற்கு உண்டு.



# நீரிழிவு நோயாளிகள் உண்ணக் கூடிய பழங்கள்

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருசில பழங்களை சாப்பிடுவதன் மூலம் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளலாம்.

கொய்யாப்பழத்தை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடுவதால் மலச்சிக்கல் பிரச்சினையைப் போக்கலாம்.

நாவல் பழத்தை நீரிழிவு நோயாளிகள் சாப்பிட்டால், இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு விரை வில் கட்டுப்படும். அதுமட்டுமின்றி, இதன் விதையைப் பொடி செய்து சாப்பிட்டால், இன்னும் சிறந்த பலனைக் காண முடியும்.

தினமும் ஓர் அப்பிள் சாப்பிட்டால் ஆரோக்கியமாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் சொல்வார்கள். இது நீரிழிவு நோயாளிகளுக்குத் தான். ஏனெனில் அப்பிள் சாப்பிட்டால்,



கெட்ட கொலஸ்ட்ரோலை குறைப்பதோடு, இது செரிமான மண்டலம், நோயெதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

அன்னாசிப் பழமும் நீரிழிவு நோயாளிகளுக்கான பழம் தான். இந்தப் பழத்தில்; நோயெதிர்ப்பு அழற்சி தன்மை அதிகம் இருக்கிறது.

பப்பாளியும் நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்தது. ஏனெனில் இதில் விற்றமின்கள் மற்றும் மற்ற கனிமச் சத்துக்கள் அதிகம் கிடைக்கும்.

அத்திப்பழத்தில் நார்ச்சத்து அதிகம் இருப்பதோடு, இன்சுலின் சுரப்பைச் சீராக வைத்துக் கொள்ள உதவும். அதிலும் இதனை தினமும் அளவாக சாப்பிடுவது மிகவும் சிறந்தது.

அழகான சிவப்பு நிறத்தில் உள்ள மணிகளைக் கொண்ட மாதுளையும் நீரிழிவு நோயாளிகள் தைரியமாக சாப்பிடக்கூடிய பழங்களுள் ஒன்று. ஏனெனில் இது இரத்தத்தில் உள்ள சீனியின் அளவை குறைக்க பெரிதும் உதவியாக இருக்கும்.

பலாப்பழம் மிகவும் இனிப்பாக இருப்பதால், இதனை நீரிழிவு நோயாளிகள் அறவே தொடக்கூடாது என்று நினைக்கக் கூடாது. ஏனெனில், இந்தப் பழம் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் சிறந்த, இன்சுலின் சுரப்பை அதிகரிக்கும் பழங்களுள் ஒன்றாகும்.

# ஆரோக்கியம் தரும் பீற்றூட்

பீற்றூட் பலருக்குப் பிடிக்காது, சிலருக்கு மட்டுமே பிடிக்கும். குழந்தைகளில் பலருக்குப் பிடிக்கும். இது பலருக்கும் சுவை சம்பந்தப்பட்ட ஒன்றாகவே தெரிகிறது. ஆனால் இதற்கென்று பிரத்தியேக மருத்துவப் பயன்கள் உள்ளன.

பீற்றூட்டை வேக வைத்த நீரில் வினிகரைக் கலந்து சொறி, பொடுகு, ஆறாத புண்கள் மேல் தடவி வர அனைத்தும் குணமாகும்.



✱ பீற்றூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் குணமாகும்.

✱ பீற்றூட் சாறுடன் வெள்ளரிச் சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும் பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

✱ பீற்றூட் சாறுடன் படிகாரத்தை பொடியாக்கி சேர்த்து கலந்து உடலில் எரிச்சல், அரிப்பு உள்ள இடங்களின் மேல் தடவ எரிச்சல் அரிப்பு மாறும்.

✱ தீப்பட்ட இடத்தில் பீற்றூட் சாறைத் தடவினால் தீப்புண் கொப்புளமாகாமல் விரைவில் ஆறும்.

✱ பீற்றூட் கசாயம் மூல நோயை குணப்படுத்தும்.

✱ பீற்றூட் கூட்டு மலச்சிக்கலை நீக்கும். இரத்த சோகையை குணப்படுத்தும்.

✱ பீற்றூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும்.

✱ பீற்றூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் தோய்த்து உண்டுவர இரத்தத்தில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும்.

✱ பீற்றூட்டை வேக வைத்த நீரில் வினிகரைக் கலந்து சொறி, பொடுகு, ஆறாத புண்கள் மேல் தடவி வர அனைத்தும் குணமாகும்.

# மாரடைப்பைத் தடுக்கும் திராட்சை.



இரத்தத் தட்டுகள் ஒன்று சேருவதை பிளாவனாய்டு தடுப்பதால் மாரடைப்பு ஏற்பட வாய்ப்பில்லை. எனவே தான் பிளாவனாய்டு கலந்த ஆஸ்பிரின், இதய நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.

பொதுவாக மாரடைப்பால் மரணம் ஏற்படுவதற்கும் இதயக் குழாய்களில் இரத்தம் உறைதலே காரணம். இரத்தம் உறையாமல் இருக்க, பிளாவனாய்ட் என்ற வேதிப்பொருள் உதவுகிறது.

இரத்தத் தட்டுகள் ஒன்று சேருவதை பிளாவனாய்ட் தடுப்பதால் மாரடைப்பு ஏற்பட வாய்ப்பில்லை. எனவே தான் பிளாவனாய்ட் கலந்த ஆஸ்பிரின், இதய நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.

இத்தகைய உயிர்காக்கும் பிளாவனாய்ட்கள் திராட்சையில் ஏராளமாக உள்ளதால், மாரடைப்பு மற்றும் பிற இதய நோய்களைத் தடுப்பதில் திராட்சை பெரும் பங்காற்றுகிறது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

# வவுனியாக் குளத்தில் மீன்கள் இறந்து கிடப்பதால் துர்நாற்றம்

## அந்தப் பகுதி மக்கள் பெரும் பாதிப்பு

வவுனியா, ஓக.20
வவுனியாக் குளத்தில் பெருமளவான மீன்கள் இறந்து கிடப்பதனால் அந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.
இதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



கடந்த சில மாதங்களாக வவுனியாவில் வறட்சி ஏற்பட்டுள்ளது.
இதனால் பல குளங்களில் நீர் வற்றியது. வவுனியாக் குளத்திலும் நீர் வற்றிப்போனது. இதனால் பெருமளவான மீன்கள் இறந்தன.
நேற்று முன்தினம் பெய்த மழையையடுத்து இறந்த மீன்கள் கரையொதுங்கியுள்ளன.
இதனால் இந்தக் குளத்தை அண்மித்த பகுதியில் இருக்கும் மக்கள் மற்றும் குளத்தை அண்மித்த கடைகளில் உள்ள வர்த்தகர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.
வவுனியா நகர சபையினர் இதனை அப்புறப்படுத்த முன்வரவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

## பூநகரிப் பிரதேச செயலகம் தேசிய ரீதியில் முதலிடம்

கிளிநொச்சி, ஓக.20
இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் திட்டத்தில் அதிகளவு பயனாளிகளை இணைத்தமைக்காக பூநகரி பிரதேச செயலகம் தேசிய நிலையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
இதற்கான விருதுகளைக் கடந்த 18 ஆம் திகதி இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் திருமதி சுமணா ஆரியதாச, பூநகரிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலனிடம் கையளித்தார்.
நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும் கலந்து கொண்டார். (த-9)



தற்போது பெய்து வரும் மழையைத் தொடர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக வவுனியா நகர மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வு வவுனியா குடியிருப்பு குளத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. (த-421)

## வவுனியா வைத்தியசாலைக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு கருவி

கரணவாய், ஓக 20
இலங்கை வங்கியின் 75 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு வவுனியா இலங்கை வங்கியின் நகரக் கிளையினால் வவுனியா பொது வைத்தியசாலைக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்புக் கருவி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.
வவுனியா போதனா பொது வைத்தியசாலையின் விபத்துப் பிரிவுக்கு நீர் சுத்திகரிப்பு கருவி ஒன்றை வழங்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டதற்கு இணங்க இது வழங்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வவுனியா நகரக் கிளை முகாமையாளர் மா.றோய் ஜெயக்குமாரினால், வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.அகிலேந்திரனிடம் இந்தக் கருவி கையளிக்கப்பட்டது. (த-108)

CMYK

## மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு அமைச்சர் சத்தியலிங்கம் திடீர் பயணம்

மன்னார், ஓக.20
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன் தினம் திங்கட்கிழமை மதியம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்று குறைநிறைகளைக் கேட்டறிந்தார்.
மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரஜனி அன்ரன் சிசில், மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரூபன் லெம்பேட், மன்னார் வைத்தியசாலையின் நிர்வாக அலுவலகர் எஸ்.என்.எம்.சஜானி ஆகியோரைச் சந்தித்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் குறை நிறைகளைக் கேட்டறிந்தார்.



அமைச்சருடன் அதிகாரிகள்

இதன்போது வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.ஆர்.யூட்டும் கலந்து கொண்டார்.
குறிப்பாக மன்னார் பொது வைத்தியசாலையில் நிலவி வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும், வைத்தியசாலையின் குறைகள் தொடர்பாகவும் அதனை நிவர்த்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் கேட்டறிந்து கொண்டார். (த-56)

## இடி, மின்னல் தாக்கியதில் பேசாலையில் கடும் சேதம்

மன்னார், ஓக.20
பேசாலை சிறுத்தோப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் இடி, மின்னல் தாக்கியதில்



கோவில் முகப்பு குருசும், முகப்பும் சிறு சேதத்துக்கு உள்ளாகியதுடன் கோவில் மின்குமிழ்கள் மின்சார வயர்கள் எல்லாம் சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.
அத்துடன் சிறுத்தோப்பு கிராமத்தில் உள்ள சுமார் 15 வீடுகளிலுள்ள மின்சாரப் பொருள்கள் குறிப்பாகக் குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக் காட்சிகள், மின் குமிழ்கள் போன்ற பொருள்கள் சேதமடைந்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இந்தப் பகுதியில் திடீரெனப் பெய்த மழையின் போது ஏற்பட்ட இடி மின்னலாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. (த)

## தென்னைகள், வாழைகள் அழியும் நிலை



கிளிநொச்சி , ஓக.20
கிளிநொச்சி திருவையாறு கிராமத்தில் தென்னைகள், வாழைகள் அழிவின் விளிம்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருவையாறு இரணைமடுக் குளத்தின் கீழான ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தைக் கொண்ட தொரு கிராமமாகும்.
தற்போது இந்தக்கிராமத்தில் ஏற்று நீர்ப்பாசன செயற் பாடுகள் நடைபெறாததன் காரணமாக குழாய்க்கிணறு களை மட்டும் நம்பி தென் னைகள், வாழைகளை பெரும் நிலப்பரப்பில் நாட்டிய விவசாயிகள் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பெரும் நட்டங்களை எதிர் கொண்டுள்ளதுடன் பயிர்கள் அழிவடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (த-18)

## பாலம்பிட்டி முத்துமாரி ஆலயத்தில் திருட்டு

மன்னார்,ஓக.20
மன்னார் பாலம்பிட்டி சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த 13 ஆம் திகதி புதன் கிழமை, இரவுவேளையில் ஆலயத்தின் கூரைவழியாக உள்ளே நுழைந்த திருடர்கள் மூலஸ் தானத்தில் இருந்த பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.
ஆலயத்தின் உள்ளே சென்ற திருடர்கள் அம்மன் மூலஸ்தானத்தில் இருந்த அம்மன் இயந்திர தகடு, பிள்ளையார் இயந்திரத் தகடு,அம்மன் விக்கிரகத்தில் உள்ள சூலம் மற்றும் அரைப் பவுண் தங்க நகை ஆகியவற்றை களவாடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-56)

## நூலகத்தில் வசதிகள் இல்லை

மல்லாவி,ஓக.20
துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மல்லாவி நூல் நிலையத்தில் குடிதண்ணீர் வசதிகள், மலசலகூட வசதிகள் இன்றி வாசகர்கள் பெரும் அவலப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மல்லாவி பொது நூலகத்தைத் தினமும் பெருமளவு வாசகர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.
ஆயினும் இங்கு குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் இன்மையால் வாசகர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது
இதுகுறித்து பல தடவைகள் துணுக்காய் பிரதேச சபைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வாசகர்கள் தெரிவித்தனர். (த-415)

## கிளிநொச்சியில் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி,ஓக.20
கிளிநொச்சி மாவட்ட மக்களின் குடிதண்ணீர் விநியோகத்துக்கான வேலைகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி அரச செயலகத்தின் இடர்முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் தெரிவித்தார்.
வறட்சி நிலை நீடித்து வருவதன் காரணமாக குடிதண்ணீர்த் தேவை அதிகரித்துள்ளது.
புதிய நீர் நிலைகளைத் தேடி குடிதண்ணீர் பெற்று மக்களுக்கு விநியோகிக்க வேண்டிய தேவையுள்ளது. அரசினுடைய வறட்சி நிவாரணங்கள் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் தற்போது குடிதண்ணீர்த் தேவைக்கு முன்னுரிமை கொடுத்து வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும் கூறினார்.



இதேவேளை கிளிநொச்சி பரந்தனிலிருந்து பூநகரிக்கு குடிதண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது. பூநகரியிலுள்ள குடிதண்ணீர் நிலைகள் முற்றாக வற்றியுள்ளதன் காரணமாக பரந்தனிலிருந்து பூநகரி பிரதேச சபை குடி தண்ணீரைச் சேகரித்துச் செல்கின்றது.
பூநகரி முக்கொம்பனிலிருந்து குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பிருந்த போதிலும் நீர் விநியோக தாங்கியை எடுத்துச் சென்று நீரைப் பெற்றுவரக் கூடிய பாதை வசதி இல்லாதநிலை காணப்படுவதாக பூநகரி பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.
பூநகரி மேற்குப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் முழங்காவிலில் இருந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (த-18)

## நான்கு தலைவர்களுக்கு வலி.தென்மேற்கில் சிலை

வலி.தென்மேற்கு, ஓக.20

இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அமரர்களான நான்கு தலைவர்களுக்கு மானிப்பாய் தொகுதியில் வலி.தெற்கு பிரதேச சபை வளாகத்தில்சிலைநிறுவப்படவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் அமரர் வி.தர்மலிங்கம் நினைவுக்குழு மேற்கொண்டுள்ளது.

தர்மலிங்கம் நினைவுக்குழுக் கூட்டம் நினைவுக் குழுத் தலைவர் கே.கௌரிகாந்தன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற போது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மானிப்பாய் தொகுதியில் வசித்த அமரர்களான மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம், சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் செனற்றர் பொன். நாகலிங்கம், உடுவில் கிராம சபைத் தலைவர் முத்துலிங்கம், ஏழாலை கிராமசபைத்தலைவர் சிவகுரு ஆகிய நான்கு தலைவர்களுக்கும் மானிப்பாய் தொகுதியில் வலி.தெற்கு பிரதேச சபை வளாகத்தில் சிலை நிறுவப்படவுள்ளது.

இதேவேளை அமரர் வி.தர்மலிங்கத்தின் 28ஆவது நினைவு தினம் அடுத்த மாதம் 2ஆம் திகதி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபிக்கு முன்பாக காலை 7 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் பேராசிரியர் சிற்றம்பலம் உட்பட பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

அன்றைய தினம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் அன்னாரின் நினைவாக மதிய போசனமும் வழங்கப்படவுள்ளது.

(த-115)

# மானிய எரிபொருளுக்கு பதிலாக மீன்பிடி வலைகள்

## வடக்கு மீனவருக்கு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஓக.20

கடற்றொழில் அமைச்சினால் கடற்றொழிலாளர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட எண்ணெய்க்குப் பதிலாக வடக்கு மாகாணத்தில் 4 மாவட்டங்களில் 6 ஆயிரத்து 400 இற்கும்மேற்பட்டவர்களுக்கு வலைகள் மற்றும் உயிர்காப்பு அங்கிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதியைக் கடற்றொழில் அமைச்சு வழங்கியுள்ள நிலையில், வலைகளும் உயிர்காப்பு அங்கிகளும் மாவட்ட நீரியல் வளத்திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் முதற்கட்டமாக 150 பேருக்கு இவை வழங்கப்படவுள்ளன. ஏனையவர்களுக்குத் தெரிவின் அடிப்படையில் தகுதியானவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 2ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 300 பேருக்கு முதல் கட்டமாக வழங்கப்படவுள்ளன. 2ஆயிரத்து 500 பேரில் ஒரு படகு உரிமையாளருக்கு இரண்டு உயிர்காப்பு அங்கிகளும் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 496 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் 297 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 31 பேருக்கு முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளன. இதனை விட உயிர்காப்பு அங்கிகளும் வழங்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 464 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்களுக்கான வலைகள் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்ததும் வழங்கப்படவுள்ளன. இவர்களுக்கு உயிர்காப்பு அங்கிகளும் வழங்கப்படவுள்ளன.

4 மாவட்டங்களிலும் 6ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பயனாளிகள் தெரிவைக் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வலைகள் மற்றும் உயிர்காப்பு அங்கிகளை வழங்கவுள்ளது.

ஒருவருக்கு தலா ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான வலைகளும் உயிர்காப்பு அங்கிகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டத்தில் 300 பயனாளிகளுக்கான வலைகளும் உயிர்காப்பு அங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களுக்குரிய வலைக்கள் இன்னமும் திணைக்களங்களுக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-14-115)

## எங்கே வள்ளுவர்?

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ்.நகரில் சத்திரச் சந்தியில் இருந்து அகற்றப்பட்ட வள்ளுவர் சிலை எங்கே என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ்.சத்திரச் சந்தியின் வீதிச் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்காக நடுவில் இருந்த வள்ளுவர் சிலை இரவோடு இரவாக யாழ். மாநகர சபையால் அகற்றப்பட்டது.

அகற்றப்பட்ட வள்ளுவர் சிலை நகரின் வேறு ஒரு பகுதியில் நிறுவப்படும் என்று மாநகர சபையினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த வள்ளுவர் சிலை அகற்றப்பட்டு ஒரு வருடமாகின்ற நிலையில் அதனை வேறு இடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனச் சமூக ஆர்வலர்கள் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது இந்தச் சிலை எங்கே உள்ளது என்பது கூடத் தெரியாமல் உள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - யாழ். நகரின் மணிக்கூட்டுக் கோபுர சுற்று வட்டத்தில் மூன்று தமிழ் மன்னர்களின் சிலைகள் யாழ். மாநகர சபையால் அமைக்கப்பட்டுக் கடந்த வாரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## ஓட்டோ தடம்புரண்டு சாரதி காயம்

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் ஓட்டோவின் பின் சில்லு கழன்றதில் ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் அதன் சாரதி காயமடைந்தார்.

பருத்தித்துறை, பிரதான வீதியில் அத்தாய் வைரவர் கோயிலுக்கு அண்மையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.ரஞ்சித் (வயது-22) என்பவரே காயமடைந்தவராவர்.

பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி நோக்கிப் பயணம் செய்த வேளையில் ஏற்பட்டது.

(த-108)



நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு கண்காட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது. 'சூழலியல் விவசாயத்தை நோக்கி' என்னும் கருப்பொருளில் அமைந்த இந்தக் கண்காட்சி நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையின் விளையாட்டுத் திடலில், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (த-5)

## தற்காலிக பணியாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

### கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.20

கூட்டுறவுச் சங்கங்களில் நீண்ட காலம் பணியாற்றி நிரந்தர நியமனம் வழங்கப்படாத பணியாளர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:

நீண்ட காலம் சங்கங்களில் பணியாற்றி வருபவர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

சங்கங்களின் ஆளணி வசதிக்கேற்ப அவர்கள் உரிய முறைப்படி நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகள், நிலுவைகள் என்பன சம்பள அளவுத் திட்டத்துக்கு அமைவாக வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் தற்காலிக பணியாளர்களுக்கும் அவர்கள் பணியாற்றும் நாளுக்கு அமைவாக மாதச் சம்பளத்துடன் சுற்று நிருபத்துக்கு அமைவான வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படல் வேண்டும்.

சங்கங்களின் இந்த ஆளணி தொடர்பான சகல விவரங்களையும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் சேகரித்து வருகின்றது - என்றார்.

(த-17)

## சுகாதாரப் பணிமனை வளாகத்தில் மீன் குஞ்சு வளர்க்கும் தொட்டிகள்

தென்மராட்சி, ஓக.20

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை வளாகத்தில் மீன் குஞ்சுகள் வளர்ப்பதற்கான தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த கிணறுகளில், குளங்களிலிருந்து மீன் குஞ்சுகள் பிடிக்கப்பட்டுப் பொதுமக்களின் பாவனையில் உள்ள நீர் நிலைகளில் விடுவதற்காக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வந்தன.

கடந்த வருடம் போதிய மழை வீழ்ச்சியில்லாததால் குளங்கள் பல நீரின்றிக் காணப்பட்டதால் மீன் குஞ்சுகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வந்தது. கடந்த மாதம் பராமரிப்பற்ற காணிகளிலும் மோட்டர் பயன்படுத்தும் கிணறுகளிலும் டெங்கு குடம்பிகளை அழிப்பதற்காக மீன் குஞ்சுகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து பெருமளவு பொதுமக்கள் மீன் குஞ்சுகளைப் பெறுவதற்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு வந்திருந்தனர்.

பல தனியார் கிணறுகளிலிருந்து மீன் குஞ்சுகள் பெறப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இது தொடர்பாக உதயன் சுட்டிக்காட்டிச் செய்தி வெளியிட்டதை அடுத்து "வேள்ட் விஷன்" நிறுவனத்தினர் நிதி ஒதுக்கீடு செய்து சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு அருகில் மீன்குஞ்சுகளை வளர்ப்பதற்கான தொட்டிகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

பருவ காலத்தில் இந்த தொட்டிகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு பிரதேசத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## மருந்து விசிறப்பட்ட வாழைப்பழம் விற்பனை

யாழ்ப்பாணம், ஓக.20

குடாநாட்டுச் சந்தைகளில் மருந்து விசிறிப் பழுக்க வைக்கப்பட்ட வாழைப்பழங்கள் தற்போது அதிக அளவில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாழைப்பழத்தின் விலை தற்போது திடீரென அதிகரித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பைப் பயன்படுத்தி மருந்து விசிறிப் பழுக்க வைக்கப்பட்ட வாழைப்பழங்கள் சந்தைகளில் அதிகளவு விற்பனை செய்யப்படுகின்றமை குறித்துப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அதிகளவு கவனம் செலுத்த வேண்டும் என்றும் நுகர்வோர் கோரியுள்ளனர்.



குடாநாட்டில் நல்லூர் கந்தன் ஆலயம் உட்பட முக்கிய ஆலயங்களின் மஹோற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இதனால் வாழைப்பழத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி மருந்து விசிறப்பட்ட வாழைப்பழங்கள் விற்பனைக்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-17)

## கொடிகாமம் கடைகள் மீது சுகாதாரப் பகுதியினர் பாய்ச்சல்

தென்மராட்சி, ஓக.20

கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் நிலையங்கள் மீது சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் இணைந்து திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் நிலையங்கள் (பலசரக்கு கடைகள், உணவகங்கள், தேனீரகங்கள், குளிர்பான நிலையங்கள் உட்பட) மீது திடீர் பரிசோதனைகளை நடத்திகடை உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கினர்.

கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 9 கிளைக் கடைகளிலும் களஞ்சியத்திலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சக மனிதனில் கொள்வோம் அக்கறை

தமிழர்களுக்கு என்று தனிநாடு ஒன்றைப் பெறுவதற்கான துப்பாக்கிச் சண்டைகள் ஓயும் நிலையில், தமிழ்ச் சமூகத்தினுள் ஏற்படும் மாற்றம் பற்றிய திடுக்கிடும் தகவல் அறிக்கையை உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் வெளியிட்டிருக்கிறார். அவரது ஆய்வின் முடிவு அதிர்ச்சியளிக்க வைப்பதுடன், நுகர்வு மைய பொருளாதாரச் சூழலில் தமிழ்ச் சமூகக் கட்டமைப்பு எவ்வளவு தூரம் சிதைந்து அழுகிப்போகிறது என்கிற கவலையையும் ஏற்படுத்துகிறது.

துப்பாக்கிச் சண்டைகள் ஓய்வுநிலையை அடையும் போதெல்லாம் தமிழர்கள் மத்தியில், குறிப்பாக வடக்கில், தற்கொலை வீதங்கள் அதிகரிப்பதை பேராசிரியரின் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

"2005ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சம் பேருக்கு 23 பேர் தற்கொலை செய்துகொண்டனர். ஆனால் 2006இல் போர் மீண்டும் தீவிரம் பெற்றபோது அது 20 பேருக்கும் குறைவானதாக வீழ்ச்சி கண்டது. 2007, 2008இல் அந்த எண்ணிக்கை மேலும் வீழ்ந்தது.

2009ஆம் ஆண்டு போர் உச்சத்தை எட்டியிருந்த நெருக்கடியான தருணத்தில் தற்கொலை எண்ணிக்கை மிகச் சரிந்து ஒரு லட்சம் பேருக்கு 15 பேர் என்ற நிலையை அடைந்தது.

ஆயுதச் சண்டைகள் ஓய்ந்ததும் இந்த எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது. 2011ஆம் ஆண்டு அது 25 பேரின் தற்கொலை என்ற அளவை அடைந்தது. அடுத்த ஆண்டில் அது 25க்குச் சற்றுக் கீழே வந்தது. ஆனால் 2013ஆம் ஆண்டில் மீண்டும் 2011 இன் நிலையை எட்டியிருக்கிறது.

2002 முதல் 2004 வரையான காலப்பகுதியில்கூட, அதற்கு முந்தைய சண்டைக் காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்கொலை வீதம் யாழ்ப்பாணத்தில் அதிகமாகவே இருந்துள்ளது."

இப்படிச் சொல்கிறது பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் ஆய்வு முடிவு. போர்க் காலத்தில் தனிநபர்களின் ஏமாற்றம், விரக்தி, மனமுறிவு, உளப்புளுக்கம் எல்லாம் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டதன் விளைவே தற்கொலைகளின் எண்ணிக்கை வீழ்ச்சிக்குக் காரணம் என்கிறார் பேராசிரியர். மன அழுத்தம் மற்றும் நெருக்கீடுகளின் பாதிப்புக்கள் குறித்த கவனிப்பும் அக்கறையும் கொண்ட சமூகப் பொறிமுறை ஒன்று சண்டை நேரங்களில் எம்மத்தியில் காணப்பட்டமைதான் தற்கொலை எண்ணங்கள் தவிர்க்கப்பட ஏதுவாக இருந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

"இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டிருந்தபோது ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக, எல்லோரும் ஒன்றாக இருந்தார்கள். ஆனால் ஆயுதச் சண்டைகள் ஓய்ந்த நிலையில் சமூக ஆதரவும் அதற்கான பொறிமுறைகளும், அக்கறையும் குறைந்துபோனது. குடும்பங்கள் குலைந்துபோயின. தனிமனித உள்முரண்பாடுகள் அதிகரித்துவிட்டன" என்று தெளிவுபடுத்துகிறார் பேராசிரியர்.

அரசின் கொள்கைகளும் இந்த நிலைமைக்குக் கணிசமான காரணம் என்று பேராசிரியர் சாடினாலும்கூட சக மனிதனில் நாம் எவ்வளவு தூரம் அக்கறை கொள்ள மறுத்துத் திரிகிறோம் என்பதை அவரது ஆய்வு பட்டவர்த்தனமாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இந்த நிலைமை தொடர்ந்தால் மேலும் மேலும் பல அவலச் சாவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். அந்த நிலைமையை எட்டுவதற்கு முன்பாக சக மனிதர்களில் அக்கறை கொள்ளும், எம்மிடமிருந்த கூடி வாழும் முறைமையை நாம் மீட்டெடுக்க வேண்டும். கொழும்பு அரசோ, மாகாண அரசோ இவற்றைச் செய்யும் என்று நம்பிக்கை கொள்வது மடத்தனம் என்பதால் இதர சமூகக் கட்டமைப்புகள் இது தொடர்பில் அக்கறை செலுத்தி தமிழ்ச் சமூகத்தை அபாயத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டும்.

# கடும் வறட்சி நிலவினாலும் பண வெள்ளம் குறையாது

*சீன, ஜப்பான் தலைவர்களின். வருகை அரசுக்கு 'ஜாக்பொட்'*

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடைபெற்றுவரும் சர்வதேச விசாரணைகள் மூலம் மோசமான எதிர்விளைவுகள் இடம்பெறுவதிலிருந்து தப்பிக் கொள்வதற்கான ஒரு புதிய மூலோபாயத்தைக் கடைப்பிடிப்பது இலங்கை அரசின் இப்போதைய நடவடிக்கையாகத் தெரிகின்றது. அந்த வகையில்தான் அமெரிக்காவில் பொது பரப்புரை நிறுவனங்களை வாடகைக்குப் பிடிக்கும் செயற்பாட்டை அரசு தொடங்கியுள்ளது. இந்தச் செயல், ஓய்வுபெற்ற ராஜதந்திரிகளாலும், அமெரிக்க அதிகாரிகளாலும் குறை கூறப்படுகின்றது. இலங்கை குறித்த ஒபாமா நிர்வாகத்தின் கொள்கையில் மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு பரப்புரை நிறுவ னங்களையும் ஓய்வு பெற்ற சட்ட சபை உறுப்பினர்களையும் வாடகைக்கு அமர்த்துவது பயனற்ற செயல் என் கிறார்கள் அவர்கள்.

அமெரிக்காவில் இவ்வாறான ஒரு செயற்பாட்டில் அரசு இறங்கியிருக்கும் அதே நேரம் இலங்கையில் போர்க்குற்ற விசாரணை பற்றிய செயற்பாடுகளும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் மாக்ஸ்வெல் பரணகம அதுபற்றி பின்வருமாறு கூறினார்; 'ஆலோசனை சபை உறுப்பினர்களுடன் முறையான சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதியின் அலுவலகம் ஏற்பாடு செய்யும்வரை காத்திருக்கின் றேன். இரண்டு வாரங்களுக்கு முன் சேர் டெஸ்மொன்ட் டி சில்வாவை கொழும்பில் சந்தித்தேன். அது உத்தியோகபூர்வமற்ற சந்திப்பு. ஏனையவர்களையும் உத்தியோகபூர்வமாகச் சந்திப்பதற்கு ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்யும் வரை காத்திருக்கிறேன் என்றார்.

இதுவரைக்கும் ஜனாதிபதியின் ஆணைக் குழுவுக்கும் ஆலோசனை சபைக்குமிடையில் உத்தியோகபூர்வமாக ஆவணம் எதுவும் கைமாற்றிக் கொள்ளப்படவில்லை. மேற்கொண்டு இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஜப்பானி லிருந்தும் ஆலோசகர்கள் நியமிக்கப்பட விருப்பதாக அறிகிறேன். நாம் மன்னாரில் பகிரங்க அமர்வுகளை முடித்துக் கொண்டு திரும்பியுள்ளோம். இப் பொழுது அந்த வேலைகளில் மூழ்கியுள்ளோம். சேகரிக்கப்பட்ட தகவல்களை அலசிக் கொண்டிருக்கிறோம். அடுத்த அமர்வு பற்றி நாங்கள் இன்னமும் முடிவு எதுவும் செய்யவில்லை' என்றார்.

அடுத்த மாதம் இரண்டு வரலாற்று முக்கியத்துவம் மிக்க பிரமுகர் வருகைகள் இடம்பெறவிருப்பதாக ஜனாதிபதி தமது அமைச்சர்களிடம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் வைத்துத் தெரிவித்தார். இந்த வருகைகளால் இலங்கை பெருமளவில் பயனடைவதாய் இருக்கும் என்றார் அவர். அவ்வாறான ஒருவர் சீன ஜனாதிபதி ஸி ஜிங் பிங். அது அனேகமாக செப் ரெம்பர் 7,8 ஆம் திகதிகளில் இடம்பெற லாம். சீன ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவை. அவரைத் தொடர்ந்து ஜப்பானியப் பிரதமர் ஷின்ஸோ அபே செப்ரெம்பர் 16,17 ஆம் திகதிகளில் இலங்கை வரவிருக்கிறார். இவைகளையடுத்து ஜனாதிபதி மஹிந்த நியூயோர்க்கில் ஐ.நா.வின் 69 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. செப்ரெம்பர் 20 ஆம் திகதி ஐ.நா.பொதுச் சபை கூடுகிறது.

சீனாவிடமிருந்து கிடைக்கவிருக்கும் பொருளாதார மற்றும் வர்த்தக உதவிகளைத் தவிர மேலும் அதிக உதவிப் பொதிகள் தொடர்பாக சீன அதிபர் ஸியின் வருகையின்போது அறிவிக்கப்படலாம் என்று அரசுத்துறை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. அதே போன்று ஜப்பானியப் பிரதமர் அபேயின் இலங்கை வருகையின்போதும் ஏராளமான உதவித் திட்டங்கள் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தவித எதிர்பார்ப்புக்களை முன்வைத்தே எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தை அரசு தயாரிக்கவிருப்பதாகவும் கருதப்படுகிறது. 2015, 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று தெரிகின்றது. அந்த வகையில் சுகாதாரத்துறை, கல்வி, வீதிகள் மற்றும் மாவட்டங்களின் பாதுகாப்பான குடிதண்ணீர் வசதி போன்றவை முக்கியத்துவம் பெறலாம். இதற்கிடையில் வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலையொட்டிய ஏற்பாடுகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன. அது ஜனவரியிலா மார்ச்சிலா என்று கூற முடியாவிட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறும் என்பது உறுதியாகியுள்ளது. அதற்கான பரப்புரைகளை முன்னெடுக்க அரச முக்கியஸ்தர் ஒருவரின் இளைய மகன் நெருக்கமாகப் பழகும் ஒரு விளம்பர நிறுவனம் மாபெரும் விளம்பரச் செயற்பாடுகளுக்கென ஏற்பாடு செய்து வருகிறது.

நாடு முழுவதுமுள்ள 225 கோட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கும் தலா 300 மில்லியன் ரூபா உள்கட்ட மைப்பு அபிவிருத்தி வேலைகளுக்கென வழங்கப்படவிருக்கின்றது. இந்தப் பணம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் இப்போது வழங்கப் படவிருக்கின்றது. இவ்வருடம் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் இந்தப் பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் மீதே இது வழங்கப்படும் என்று தெரிகின்றது. கோட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகவே இருக்கும். அவர்கள் இல்லாத இடங்களில் உள்ளூர் அரசு சார்ந்த அமைப்பாளர்கள் பொறுப்பளிக்கப்படுவார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பகிர்ந்தளிக்கப்படும் வரவு- செலவுத்திட்ட கொடுப்பனவு இப்போது 5 மில்லியன் ரூபாயாக இருப்பது அரசு தரப்பு உறுப்பினர்களுக்கு மட்டும் 30 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட விருக்கிறது. கொழும்பு நகர அபிவிருத்தியும் களை கட்டத் தொடங்கியிருக்கிறது.

இவ்வாறு பலவித அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் சூழ்நிலையில் அரசின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய மாத்திரம் உண்மையாகவே கவலை கொண்டிருப்பது தெரிய வருகின்றது.

நாம் இப்படியே தொடர்ந்தும் போக முடியாது என்று கூறினார் அதன் பொதுச் செயலாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க. நாட்டில் எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மக்களை விழிப்புக் கொள்ளச் செய்யும் இயக்கத்தை தமது கட்சி தொடர்ந்து நடத்தப் போவதாகவும் பொருளாதாரம் மற்றும் ஆட்சிமுறை போன்ற பலவற்றில் அவசர நடவடிக்கைகள் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். அரசியல் மீள் கட்டமைப்புக்கு இது அவசிய தேவையாகும். இப்பொழுது ஒரு சிலர்தான் முடிவுகளை எடுப்பவர்களாக இருந்து வருகிறார்கள் என்று கூறிய அமைச்சர் ரணவக்க மகா சங்கத்தினரின் ஆலோசனை பெறப்படுவதில்லை என்றார். இந்த நிலைமை குறித்து எல்லா அரசியல் கட்சிகளோடும் நாம் கலந்துரையாட இருக்கிறோம். சுற்றாடலைப் பாதுகாத்து சமூக நீதி மற்றும் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கான அவசர தேவை இருக்கிறது என்றார்.

அரசின் இன்னொரு பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி இன்னமும் திருப்தியடையாது போனாலும் குறைந்தது தற்காலிகமாகவாவது பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ஊவா மாகாண சபைத் தேர்தலின்போது மக்கள் சுதந்திர முன்னணியின் பரப்புரை மேடைகளில் தேசிய சுதந்திர முன்னணிக்கும் இடம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தல் விடுத்ததையடுத்து இந்தச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய சுதந்திர முன்னணி தனது வேட்பாளர்களையும் மாகாண சபைத் தேர்தலில் நிறுத்தப் போவதாக அறிவித்தபோது அது வெறும் பித்தலாட்டம் என்றே அரசு தரப்பில் சில பகுதியினர் எண்ணியிருந்தார்கள்.

மொனராகல மாவட்டத்துக்கான தமது வேட்பாளர் பட்டியலை சமர்ப்பித்த பின்னர் தமது காரியாலயத்துக்கு வந்து சேர்ந்த அந்தக் கட்சியின் தலைவர் அமைச்சர் வீரவன்ஸ அமைச்சரவை சகாவான டலஸ் அழகப் பெரும மற்றும் பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோர்களுடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். பின்னர் வீரவன்ஸ பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் அரசு தரப்பில் எமது 12 அம்ச திட்டத்துக்கு சில திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டன. அவை பற்றி எமது கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்தேன். அவைகளை அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஜனாதிபதியும் அதனை அங்கீகரித்திருப்பதால் அலரி மாளிகை செய்தியாளர் மாநாட்டில் அது அறிவிக்கப்பட்டது என்றார்.

ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை அதன் அரசியல் விவகாரப் பணிப்பாளர் மங்கள சமரவீர விடுத்த அறிக்கையொன்றுதான் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஐ.நா.சர்வதேச விசாரணைக் குழுவின் முன்பாகத் தாம் சாட்சியமளிக்க திட்டமிட்டிருப்பதாக அவர் செய்தியாளர்களிடம் கூறினார். இதன் நோக்கம் என்னவென்றால் ஐ.நா. குழுமுன் புலிகள் தரப்பில் மேற்கொள்ளப் பட்ட போர்க் குற்றங்களை வெளிப்படுத்து வதும் போர் நடைபெற்ற காலத்தில் சகல சந்தர்ப்பங்களிலும் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றிருந்தவராக குமரன் பத்மநாதனை வெளிப்படுத்துவதுமாகும். விடுதலைப் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களை பெற்று வழங்கியவர். அவர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மிகவும் வேண்டப்படுபவராகும். இப்பொழுது அவர் இலங்கையில் ஒரு சுதந்திர மனிதனாக நடமாடுவதுடன் கிளிநொச்சியில் அரசு சாரா நிறுவனம் ஒன்றின் தலைவராகவும் இருந்து வருகிறார். இன்னொரு முக்கிய எதிர்க்கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிந்த பிறகே ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றித் தீர்மானிக்கும் என்று தெரிகின்றது. அதன் தலைவர் அனுர குமார திசாநாயக்க கூறுகையில்; ஒரு தீர்மானம் எடுக்க முன்னர் ஊவா மாகாண தேர்தல் முடிவுகளின் பின் தெரியும் அரசியல் நிலைமைகள் ஆராயப்படும் என்று கூறினார்.

அமெரிக்காவிலுள்ள சில பொது பரப்புரை நிறுவனங்களுக்கு இப்போது களியாட்ட காலமாகும். இலங்கையில் பல சிக்கலான நிலைமைகளை ஜனாதிபதி தடைதாண்ட வேண்டியிருக்கிறது. அபிவிருத்திக்கும் வேறு பல செயற்பாடுகளுக்கும் நிதிகள் வந்து குவிந்தபடி இருக்கின்றன. நாட்டில் இப்போது நிலவுகின்ற கடும் வறட்சி எப்படிப் போனாலும் எதிர்க்கட்சிகளை அடியோடு சாய்த்துவிடும் அளவுக்கு பண வெள்ளம் வந்து மோதப் போகிறது.

ஜயந்த தனபால
வெள்ளிக்கிழமை அரங்கின் சார்பில்
தமிழில் : வீ.கே.ஆர்.

# நாட்டு மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்க முடியாத நிலை

சில மாதங்களுக்கு முன்னர் வெள்ளிக்கிழமை அரங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட பகிரங்க அறிக்கையொன்றில் எமது நாட்டின் தற்போதைய நிலையைப் பிரதிபலிக்கும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அதில் இந்த நாடு எதேச் சாதிகாரத்தை நோக்கிச் செல்கின்றதா என்று கேள்வியும் எழுப்பப்பட்டிருந்தது.

ஆனால் இந்த அறிக்கை பரவலாக விநியோகம் செய்யப்பட்ட போதிலும் தேசிய நாளிதழ்களில் முக்கிய இடத்தைப் பிடிக்கவில்லை.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சகத்தில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்திலிருந்து அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தச் சுற்றறிக்கை அரசு ஆபத்தான பாதையொன்றில் பயணிப்பதை எடுத்துக் காட்டுகின்றது. இது ஜனநாயக ஆட்சி முறையின் விழுமியங்களை அழித்து விடும்.

இந்தச் சுற்றறிக்கை 'அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது அதிகார வரம்புக்கு அப்பால் செயற் படுகின்றன' என்ற தலைப்பிட்டு வழங்கப்பட்டுள்ளது. செய்தியாளர் மாநாட்டை ஏற்பாடு செய்தல், பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல், ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல், பத்திரிகைகள் மூலமாகச் செய்திகளைப் பரப்புதல் ஆகியனவே அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது அதிகார வரம்பை மீறிச் செய்யும் செயற்பாடுகளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாகக் கைவிடப்பட வேண்டுமெனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த விடயம் எமது அரசியல்சாசனத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளைப் பாழ்படுத்தும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

> பாதுகாப்பு அமைச்சகத்தில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக் கான தேசிய செயலகத்திலிருந்து அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தச் சுற்றறிக்கை அரசு ஆபத்தான பாதை ஒன்றில் பயணிப்பதை எடுத்துக் காட்டுகின்றது. இது ஜனநாயக ஆட்சி முறையின் விழுமியங்களை அழித்து விடும்.





இலங்கையில் வசிக்கின்ற மக்கள் ஒன்று கூடுவதற்கும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், சுதந்திரமாக உரையாடுவதற்கும், கருத்துகளை வெளியிடுவதற்கும் அரசியல் சாசனத்தில் விசேட ஏற்பாடுகள் உள்ளன. இது தொடர்பாக உயர்நீதிமன்றமும் தெளிவுபடுத்தியுள்ளது.

அரசுக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள நேர்மையற்ற மனிதர்கள் சிலர் தமது சொந்த நலன்களை மேம்படுத்தும் பொருட்டு அரச சார்பற்ற நிறுவனங்களை விமர்சனம் செய்வது வழமையாகும்.

ஆனால் நாம் ஒன்றைத் தெளிவாக நினைவு படுத்த விரும்புகின்றோம். அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நோக்கங்களைத் தாமாகவே தீர்மானம் செய்து மக்களுக்குத் தன்னார்வ உதவிகளைப் புரிந்து வருகின்றன என்பதே அதுவாகும்.

மேலும் இந்த நிறுவனங்கள் பல்வேறு விதிமுறைகளின் கீழ் இலங்கையில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன. கம்பனிகள் பதிவுச் சட்டம் 2007, சமூக சேவைகள் சட்டம் என்பன இதில் அடங்கும். இத்தகைய நிறுவனங்கள் தமது வரவு - செலவு விவரங்கள், வேலைகள் தொடர்பான விவரங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கிய தகவல்களை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளன. மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டின் விதிகளை மீறும்போது பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு உடையனவாகும்.

ஆனால் ஏற்கனவே நடைமுறையிலுள்ள சுயாதீனம் அடங்கலான விதிகள் மற்றும் நடைமுறைகளை உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளதால் அரச சார்பற்ற நிறுவனங்களையும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் கட்டுப்படுத்த முடியாது.

பொது மக்கள் அமைதியான முறையில் ஒன்றுகூடும் போதும், தமது கருத்துகளைச் சுதந்திரமாகத் தெரிவிக்கும்போதும் அத்துமீறி நுழையும் அழையா விருந்தாளிகளால் அவர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்வது பொலிஸ் உத்தியோகத்தர்களின் முக்கிய கடமையாகும்.

இதேவேளை அரசின் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்வது தொடர்பாக உள் நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் எழுகின்ற அழுத்தங்களை நிறுத்த வேண்டுமானால் அரசும், வெளிவிவகார அமைச்சரும் சரியான தகவல்களை வெளியிட வேண்டும். மனித உரிமைகள் சரியான வகையில் பேணப்படுகின்றதா என்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய செயற்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் இந்தச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் எழுந்த கண்டனங்களைத் தொடர்ந்து அரசின் சார்பில் முரண்பாடான அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்தச் சுற்றறிக்கை சட்ட பூர்வ மானதொரு கட்டளையென வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்ட போது வழங் கப்பட்ட விதிமுறைகளை மீறி வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதம மந்திரி டி.எம்.ஜயரட்ண இந்தச் சுற்றறிக்கை வேண்டுகோளுடன் கூடிய அறிவுறுத்தல் ஒன்றெனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டு மக்கள் இந்தச் சுற்றறிக்கைக்குத் தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும். ஆன்மால் நாட்டின் தற்போதுள்ள சூழ்நிலையில் அரசியல் சாசனத்தின் பரப்புரை மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளுக்கு எம்மால் உத்தரவாதம் வழங்க முடியாதுள்ளது.

---

வாசகர் திருமுகம்

## யாழ். கச்சேரி ஒழுங்கையை பயன்படுத்த உதவுங்கள்?

கச்சேரி ஒழுங்கையை 100 வருடங்களுக்கும் மேலாக மக்கள் பாவித்து வருகிறார்கள். இந்த ஒழுங்கை, கச்சேரி கிழக்குப் பக்க எல்லைச் சுவருடன் செல்கிறது. இந்த ஒழுங்கையில் துளசி அடுக்குமாடி புதிதாகக் கட்டப்பட்டுப் பாவனையில் உள்ளது.

மேலும் இந்த ஒழுங்கை யாழ். மாநகர சபைக்கு உரித்தானது. மின்சாரம், தொலைத்தொடர்பு எல்லா வசதிகளும் உண்டு. பள்ளிச் சிறார்கள், கச்சேரி ஊழியர்கள், கச்சேரிக்கு வரும் பொதுமக்கள் எனப் பலரும் இதனையே பாவித்து வருகிறார்கள். தற்போது இந்த ஒழுங்கை புகையிரதப் பாதையின் திருத்தப் பணிகளுக்காக மூடப்பட்ட போதிலும் கடந்த ஒரு மாத காலமாகத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

இந்த ஒழுங்கையில் முன்பும் ரயில் பாதை இருந்தது. அப்போது அதற்குக் கடவை அமைக்கப்படவில்லை. இந்த ஒழுங்கை இல்லையெனில் இந்த மக்கள் 3 கிலோ மீற்றர் சுற்றித்தான் கச்சேரிக்கு வர வேண்டும். வயோதிபர், ஓய்வூதியர், கால் இயலாதவர் களுக்கு மிக மிகச் சிரமம். ஓட்டோவுக்கு முன்பு 150 ரூபா கொடுத்தோம். தற்போது 250 ரூபா கொடுக்க வேண்டும். ஒரு அவசரத்துக்கு அல்லது ஒரு அம்புலன்ஸ் வந்து போக முடியாத நிலை மற்றும் கச்சேரி பிரதான பஸ் தரிப்பிடம் சுப்பர் மார்க்கெட் போன்றவையும் இதே பாதையில் உள்ளன.

இதே மாதிரியான சோமசுந்தரம் ஒழுங்கையை மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் ரயில்வேப் பகுதி செய்து கொடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக நாம் எல்லோரும் கையொப்பமிட்டு இதற்குப் பொறுப்பான பொறியியலாளரிடம் கொடுத்தோம். இதுவரை எதுவும் நடக்கவில்லை. ஆகவே நாம் தினமும் படும் துன்பத்தைக் கருத்தில் கொண்டு இந்த ஒழுங்கையை மக்கள் பயன்படுத்தும் வகையில் எமக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*பாதிக்கப்பட்ட கிழக்கு ஒழுங்கை மக்கள்*

## மாணவர்கள் புரிந்து கொள்வார்களா?

காலை 7.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் 750 இலக்க பஸ்ஸில் பல்கலைக்கழக மாணவர்களும், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் பிரயாணம் செய்வதற்குத் தடைகள் எதுவும் இல்லை.

ஆனால் அவர்களுக்கென்றே தனியாக 764ஆம் இலக்க பஸ் காலை 6.45, 7.00, 7.15 ஆகிய நேரங்களில் சேவையில் ஈடுபடுகின்றது. ஆனால் அந்த மாணவர்கள் அதனைப் பயன்படுத்தாது 750ஆம் இலக்க பஸ்ஸிலேயே பயணிக்கின்றனர். 750ஆம் இலக்க பஸ் சாரதிகள் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களை ஏற்றாது செல்வதும் உண்டு. இதனால் இவர்கள் 764ஆம் இலக்க பஸ்ஸையும், 750ஆம் இலக்க பஸ்ஸையும் தவற விட்டு விட்டு கால தாமதத்தை எதிர்கொள்கின்றனர்.

அவர்களை 750ஆம் இலக்க பஸ்ஸில் பயணிக்க வேண்டாம் என்று நாம் சொல்லவில்லை. இயலுமானவரை அவர்களுக் கென்று விடப்படுகின்ற 764ஆம் இலக்க பஸ்ஸில் பயணம் செய்தால் ஏனையவர்கள் நெருக்கடியும், இடையூறுகளுமின்றி பயணம் செய்ய முடியும். மேலும் இந்த மாணவர்களும் உரிய நேரத்துக்குச் செல்ல முடியும். அத்துடன் அவர்கள் பஸ்களைத் தவறவிட வேண்டிய தேவையும் இருக்காது. ஆகவே இந்த மாணவர்கள் தமக்கெனச் சேவையில் ஈடுபடுத்தப்படும் 764ஆம் இலக்க பஸ்ஸைப் பயன்படுத்துவதால் 750ஆம் இலக்க பஸ்ஸில் செல்லும் பயணிகள் தமது பயணத்தை இலகுவாக்கிக் கொள்ள முடியும்.

*கனிமொழி*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வேலைகளைச் செய்து முடிப்பதில் தடைகள் ஏற்படலாம். எதையும் யோசித்துச் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வேகம் இருக்காது. தொழிலில் சிற்சில போட்டிகள் நிலவும்.

**இடபம்**: போட்டிகள் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை உண்டாகும். சக ஊழியர்கள் மற்றும் மேல் அதிகாரிகளிடம் பேசும் போது கவனம் தேவை. பேசாமல் சென்றால் கூட வீண் பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம்.

**மிதுனம்**: பிள்ளைகளிடம் கவனமாக இருப்பது நன்மை தரும். பயணங்களில் எதிர்பாராத தடங்கல் உண்டாகலாம். யோசித்து செய்யும் காரியங்கள் சாதகமான பயன்தரும். எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைப்பதில் தடை ஏற்படலாம்.

**கடகம்**: முக்கிய நபரின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். மரியாதை கூடும். திட்டமிட்ட காரியங்கள் நன்றாக நடந்து முடியும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி சிறப்பாக நடக்கும்.

**சிங்கம்**: உத்தியோகத்தர்களின் நிலை மேம்படும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். சிலருக்கு திருமணம் கைகூடும். குடும்பத்தில் நிலவிய பிரச்சினை நீங்கும். பிள்ளைகளால் நன்மை கிடைக்கும்.

**கன்னி**: எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெற்றிபெற எடுக்கும் முயற்சிகள் சாதகமான பயன் தரும். மனத் தைரியம் உண்டாகும். வாக்கு வன்மையால் காரியம் கைகூடும். ஆன்மிக எண்ணம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**துலாம்**: தொழில் வியாபாரம் நல்லநிலைக்கு உயரும். போட்டிகள் நீங்கும். தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். மனோதைரியம் கூடும். சாமர்த்தியமான பேச்சால் எடுத்த காரியம் வெற்றிபெறும். உத்தியோகத்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

**தனுசு**: எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளியூர் பயண வாய்ப்புகள் உண்டாகலாம். மனதில் தேவையற்ற எண்ணங்கள் ஏற்படும். திடீர் செலவு உண்டாகலாம். காரியங்களில் தடைதாமதம் ஏற்படும்.

**மகரம்**: தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்காமல் சற்று மந்தமாகக் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்பு அதிகமாகும். முயற்சிகள் பயன்தராமல் போகலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் தொல்லைகள் ஏற்படலாம்.

**கும்பம்**: உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் உண்டாகலாம். பிள்ளைகள் மேல் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வீண் மனக்கவலை உண்டாகலாம். காரியங்களில் தடை தாமதம், வீண் செலவு ஏற்படலாம்.

**மீனம்**: பலவகையிலும் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எதிர்பாராத துன்பமும், தொல்லையும் உண்டாகும். அதிகமான சுகபோகத்தால் உடல் ஆரோக்கியம் கெடலாம். அரச காரியங்களில் இருந்த தடை நீங்கும். புத்தி சாதுரியம் அதிகரிக்கும்.

## நாளை

**ஆவணி-05 வியாழக்கிழமை | 21.08.2014**

திதி: ஏகாதசி பி.ப.01.06 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.09.29 வரை
சுபநேரம்: 07.35-09.05 வரை
இராகுகாலம்: 01.35-03.05 வரை
ஏகாதசி விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### முக்தியில் நம்பிக்கை கொள்

இம்மையிலோ மறுமையிலோ சுக போகத்தை அனுபவிக்க வேண்டும் என்னும்விருப்பத்தைவிட்டு விடு. புலன்களையும் மனத்தையும் அடக்கு. துன்பத்தை அனுபவிக்கிறோம் என்ற எண்ணமே இன்றித் துன்பத்தைப் பொறுத்துக் கொள். முக்தியைத் தவிர வேறு எந்தச் சிந்தனைக்கும் இடம் கொடுக்க வேண்டாம். குருவிடமும், அவரது போதனைகளிலும், எது நடந்தாலும் நீ முக்தியடைவது உறுதி என்பதிலும் நம்பிக்கை கொள். என்ன நேர்ந்தாலும் "ஸோ ஹம், ஸோ ஹம்– நான் அவனே, நான் அவனே" என்று கூறு. உண்ணும் போதும் நடக்கும்போதும் துன்புறும்போதும் இதையே சொல்லிக் கொண்டிரு. நாம் காண்பது ஒருபோதும் இருந்ததில்லை என்றும் நான் என்பதே உள்ளது என்றும் உன் மனதுக்கு இடைவிடாமல் கூறு. இந்த எண்ணம் மின்னலைப் போல ஒளிரட்டும், அப்போது கனவு மறைந்துவிடும்! இந்தப் பிரபஞ்சம் சூனியம் என்றும் இறைவன் ஒருவனே இருப்பவன் என்றும் இரவும் பகலும் நினை; முக்தி அடைவதில் உனது நாட்டம் தீவிரமாகட்டும்.

உற்றார் உறவினர் அனைவரும் 'வற்றிப் போன பாழும்' கிணறு. அதற்குள் வீழ்ந்து விட்ட நாம் கடமை என்றும் பந்தபாசம் என்றும் கனவுகளைக்காண்கிறோம். அதற்கு ஒரு முடிவே இல்லை. பிறருக்கு உதவுகிறேன் என்னும் மதிமயக்கத்தை உண்டு பண்ணிக் கொள்ளாதே, அது பரவிக் கொண்டே செல்லும் ஆலமரம் போன்றது. நீ துவைதியானால், கடவுளுக்கு உதவ முற்படுவது உனது முட்டாள்தனத்தைக் காட்டுகிறது. நீ ஏகான்மவாதியானால் நீயே கடவுள் என்பது உனக்குத் தெரியும். அப்படியானால் உனக்குக் கடமை ஏது? கணவன், குழந்தை நண்பன், ஆகியோருக்குச் செய்ய வேண்டிய கடமை உனக்கு இல்லை. வருவதை அப்படி அப்படியே ஏற்றுக் கொள். அமைதியாக இரு. உடலை அதன் போக்கிலே மிதிக்க விட்டுவிடு. கடல் பொங்கும்போது நீயும் பொங்கு; கடல் வடியும் போது நீயும் வடி. உடல் மாய்ந்து போகட்டும். உடல் என்பது தேய்ந்துபோன ஒரு பழங்கதை. 'அமைதியாக இரு, நீயே பிரம்மம் என்பதை அறி'.

## மின்கலத்தில் நீண்ட தூரம் பயணிக்கும் கார்கள் அறிமுகம்



ரெஸ்லா நிறுவனம் கடந்த 2008 ஆம் ஆண்டு மின்கலத்தைப் பயன்படுத்தி 245 மைல்கள் பயணிக்கக்கூடிய கார்களை அறிமுகம் செய்திருந்தது.

இந்தக் கார்கள் அமெரிக்காவில் 2011 ஆம் ஆண்டு வரையிலும், ஏனைய நாடுகளில் 2012 ஆம் ஆண்டு வரையிலும் விற்பனையில் இருந்தன. தற்போது ரெஸ்லா நிறுவனம் பல்வேறு புதிய மொடல் கார்களை உற்பத்தி செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

இவற்றுள் முன்னர் 245 மைல்கள் மின்கலத்தில் பயணித்த கார்களைப் போன்று 400 மைல்கள் பயணிக்கக்கூடியவாறான மின்கலத்தை உள்ளடக்கிய புதிய கார் ஒன்றையும் வடிவமைத்து வருகின்றது. இந்தக் கார் தொடர்பான மேலதிக விவரங்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | 6 | 4 | | 1 | |
| | | 9 | | | | 6 | 8 | |
| 1 | | 5 | | | 2 | | 7 | |
| | 2 | 4 | | 1 | 6 | 5 | 9 | 7 |
| | | | | | | | | |
| 3 | 5 | 6 | 8 | 7 | | 2 | 4 | |
| | 9 | | 4 | | | 1 | | 8 |
| | 1 | 2 | | | | 7 | | |
| | 8 | | 6 | 9 | | | | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 8 | 2 | 4 | 6 | 9 | 3 | 7 |
| 2 | 7 | 6 | 1 | 3 | 9 | 8 | 5 | 4 |
| 9 | 4 | 3 | 7 | 8 | 5 | 1 | 2 | 6 |
| 8 | 9 | 4 | 5 | 1 | 3 | 6 | 7 | 2 |
| 6 | 3 | 2 | 9 | 7 | 8 | 4 | 1 | 5 |
| 7 | 5 | 1 | 6 | 2 | 4 | 3 | 8 | 9 |
| 4 | 2 | 9 | 3 | 5 | 1 | 7 | 6 | 8 |
| 3 | 6 | 5 | 8 | 9 | 7 | 2 | 4 | 1 |
| 1 | 8 | 7 | 4 | 6 | 2 | 5 | 9 | 3 |

CMYK



ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய 'ஏ' பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்ட பரிசளிப்பு நிகழ்வின் போது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தால் கரப்பந்தாட்டத்துறைக்கு சேவையாற்றிய, ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆ.நவரெத்தினம், க.ஜெயநிதி, இ.அழகுரெத்தினம், கா.கந்தசாமி, சி.திரவியநாதன், மு.தர்மராசா, பொ.அழகுரெத்தினம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப் பாமாலை வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (5-23)

# சொந்த மண்ணில் கண்டி நுவவெல மத்தியை வீழ்த்தியது யாழ்.மத்தி

யாழ்ப்பாணம், ஓக. 20
கண்டி நுவவெல மத்திய கல்லூரி அணியை சொந்த மண்ணில் 8 இலக்குகளால் தோற்கடித்த யாழ்.மத்திய கல்லூரி அணி காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவினருக்கான தேசிய மட்ட பிரிவு 3 இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டி அஸ்கிரிய பொலிஸ் மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி நுவவெல மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி நுவவெல மத்திய கல்லூரி அணியினர் 48 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றனர்.
துடுப்பாட்டத்தில் கருணா திலக 17 ஓட்டங்களையும், குமார 19 ஓட்டங்களையும், திலகரட்ண 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாக அலன்ராஜ் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கௌதமன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கார்த்தீபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
98 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 28 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றனர்.
இதில் ஜெறொசன் 38 ஓட்டங்களையும், அலன்ராஜ் 20 ஓட்டங்களையும், வினோஷண் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கண்டி நுவவெல மத்திய கல்லூரி அணி சார்பில் சேனநாயக்க 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், தர்மரெட்ணா 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
யாழ். மத்திய கல்லூரி அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது. (5-23)



பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண பிரதி கல்விப்பணிப்பாளர் சந்தியபாலன், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணித் தலைவர் நிதர்சனிடம் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார். (5-23)

## ஆவரங்கால் இந்து இளைஞர் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 20
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்திய 'ஏ' பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 25:21, 20:25, 25:19, 19:25, 15:10 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியைச் சேர்ந்த செல்வதரன் தெரிவானார். (5-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 20
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் றெஜின் போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 20
கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தா விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக 'ஏ" அணி மோதவுள்ளது.
காலை 9.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.
காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மதியம் 11.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
12.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மதியம் 1.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மதியம் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைமாதா நகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 20
கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 20
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று புதன் கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன. இன்று 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அராலி ஏ.ஏல். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈவினை கலைமதி விலளயாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

## அரையிறுதிக்கு முன்னேறிய அணிகள்

கரணவாய்,ஓக.20
பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டங்களுக்கு முன்னேறியுள்ளன.
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான சுற்றுப் போட்டிகள் வல்வை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.
இந்த ஆட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய நவஜீவன்ஸ் அணி 4:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.
இதில் அந்த அணியின் முன்னணி வீரர் உசானந் மிகவும் அபாரமாக விளையாடித் தமது அணிக்காக 4 கோல்களையும் அடுத்தடுத்துப் போட்டு அசத்தினார்.
அடுத்து இடம்பெறவிருந்த ஆட்டத்தில் பங்குபற்றவிருந்த கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி போட்டிக்குச் சமுகமளிக்காத காரணத் தால் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதனால் அவ்வணி அரையிறுதிஆட்டத்துக்குமுன்னேறியது. (ரி-108)

# மனைவி தந்த பதவி மனம் திறந்தார் குக்


மனைவியின் சமரசத்தால் தான் நான் அணித் தலைவர் பதவியில் நீடிக்கிறேன் என்று இங்கிலாந்து அணித் தலைவர் அலெஸ்டயர் குக் கூறியுள்ளார்.

நடந்து முடிந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் குக் தலைமையிலான இங்கிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் தொடரை வென்று அசத்தியது.

ஆனால் இங் கிலாந்து அணி லோர்ட்ஸ் டெஸ்ட் தோல்வி வரை 10 டெஸ்ட் ஆட்டங்களில் ஒரு வெற்றியைக் கூடப் பதிவு செய்திருக்கவில்லை. இத னால் அணித் தலைவர் அலெஸ்டயர் குக் மீது கடும் விமர்சனங்கள் எழுந்தன.

அணித் தலைவர் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று முன்னாள் வீரர்கள் போர்க்கொடி தூக்கினார்கள்.ஆனால் குக் பதவியில் இருந்து விலக மறுத்து விட்டார்.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான தொடரை 3-0 என்ற ரீதியில் வென்ற பிறகு பேட்டியளித்த குக். அணித் தலைவர் பதவியில் இருந்து விலக மறுத்ததற்கான காரணத்தைக் கூறியுள்ளார்.



குக்

இது பற்றி அவர் கூறுகையில்; இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், நாங்கள் முதல் இரண்டு டெஸ்ட் போட்டி முடிவில் 0-1 என்ற கணக்கில் பின்தங்கிஇருந்தாலும்தொடரை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. சவுதம்டனில் நடந்த 3ஆவது டெஸ்ட் போட்டி தான் எங்களுக்கு திருப்புமுனையாகும். அந்த வெற்றியில் இருந்து அதே வழியில் எங்கள் ஆட்டத்தை தொடர விரும்பினோம். எங்கள் அணியின் வெற்றிக்கு பந்து வீச்சு முக்கிய பங்கு வகித்தது.

அவர்களுக்கு எதிராக இந்திய துடுப்பாட்டக்காரர்கள் விளையாடுவது கடினமாக இருந்தது.

எனது மனைவி இல்லை என்றால் நான் இப்போது இங்கு அணித்தலைவராக நின்று கொண்டு இருக்க முடியாது.

இங்கிலாந்து அணி தொடர்ந்து வெற்றியை பெற முடியாமல் தவித்தபோது அணித் தலைவர் பதவியில் இருந்து விலக முடிவு செய்தேன். ஆனால் என் மனைவி தான் எனது முடிவை தடுத்ததுடன் என்னைச் சமரசம் செய்தார். இதனால் நான் விலகல் முடிவைக் கைவிட்டேன். எனது திறமை மீதும் எனக்கு நம்பிக்கை இருந்தது என்று கூறியுள்ளார். (ரி)

## டெஸ்ட் தொடர் தோல்வி இந்திய அணிக்கு அதிரடி

இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை மோசமாக இழந்துள்ள நிலையில் கடந்த வாரம் நடைபெற்ற இந்தியக் கிரிக்கெட் சபை பொதுக்குழு கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி இந்திய அணியின் ஒருநாள் போட்டிகளை வழிநடத்த அணியின் முன்னாள் அணித் தலைவர் ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும். அவரை இந்திய அணியின் ஒருநாள் போட்டியின் மேற்பார்வையாளராகவும் நியமிக்கப்படுவதாக இந்தியக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. டெஸ்ட் தொடரை மோசமாக இழந்துள்ள நிலையில் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து பொறுப்பேற்பார் என்றும் அறிவித்துள்ளது. மேலும் இந்திய அணியின் பயிற்சியாளராக டங்கன் பிளட்சர் தொடருவார் என்றும் அறிவித்துள்ளது.

மேலும், இந்திய அணியின் களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சுப் பயிற்சியாளர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். இந்திய அணி இங்கிலாந்து டெஸ்ட் ஆட்டங்களில் மோசமான நிலையில் தோற்றதற்காகவே அவர்களை இந்தியக் கிரிக்கெட் சபை அதிரடியாக நீக்கியுள்ளது.

பந்து வீச்சுப் பயிற்சியாளர் ஜோ டவ்ஸ், மற்றும் களத்தடுப்பு பயிற்சியாளரான ட்ரெவர் பென்னியை நீக்கிவிட்டு இந்திய அணியின் முன்னாள் வீரர்களான சகலதுறை ஆட்டக்காரர் சஞ்சய் பங்கர் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் பாரத் அருண் உதவி பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருநாள் போட்டியின் களத்தடுப்பு பயிற்சியாளராக ஆர்.ஶ்ரீதர் நியமிக்கப்பட்டுள்ளார். (ரி)



ஷஹாரியார் கான்

## மிஸ்பாவே அணித் தலைவர்

பாகிஸ்தான் அணியின் அணித்தலைவராக மிஸ்பா உல் ஹக்கே தொடர்ந்தும் செயற்படுவார் என அந்நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார் கான் கூறியுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை 0- 2 என்ற ரீதியில் முழுமையாக இழந்திருந்தது.

இதனையடுத்து பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் மீது கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எனினும் சில போட்டிகளில் தோற்றுவிட்டோம் என்பதற்காக அணித்தலைவரை மாற்ற வேண்டும் என்று கூறுவதை ஏற்க முடியாது என சஹாரியார் கான் கூறியுள்ளார். அடுத்த ஆண்டு நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உலக கிண்ணப் போட்டிகள் வரை மிஸ்பாவே அணித்தலைவராக தொடர்வார் என வாரிய தலைவர் குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தான் அணி வீரர்களையும் தான் சந்திக்க உள்ளதாக கூறியுள்ள சஹாரியார் கான், தோல்வியை பின்னால் தூக்கி போட்டுவிட்டு. எதிர் வரும் ஒரு நாள் போட்டிகளில் தீவிர கவனம் செலுத்துங்கள் என அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்போவதாகவும் தெரிவித்துள்ளார். (ரி)

# டோனியின் பதிலுக்கு கோபப்பட்டார் பேடி

இங்கிலாந்து தொடரில் தோற்றதற்காக ஐ.பி.எல். போட்டிகள் மீது யாரும் பொறாமைப்படாதீர்கள் என்று அணித்தலைவர் டோனி கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இவரது இந்தக் கருத்துக்கெதிராக தனது ஆத்திரத்தை டுவிட்டர் தளத்தில் மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் பிஷன் சிங் பேடி.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடிய இந்திய அணி, அதில் மூன்று டெஸ்டுக்களில் படு மோசமாக தோல்வியை தழுவி தொடரை 1-3 என்ற ரீதியில் இழந்தது. கடைசி டெஸ்ட் போட்டி நேற்று முடிவடைந்த நிலையில். போட்டிக்கு பிறகு நிருபர்களுக்கு அணித்தலைவர் டோனி பேட்டியளித்தார். தோல்வி குறித்து கேட்டதற்கு பொறுத்திருந்து பாருங்கள் என்று மட்டும் பதில் அளித்தார்.

டெஸ்ட் போட்டிகளில் ஜாம்பவானாக விளங்கிய இந்திய அணி, ஐ.பி.எல். போட்டிகள் வருகையால் டெஸ்ட் ஆட்ட திறமையை இழந்துவிட்டதா, என்ற நிருபர்களின் கேள்விக்கு. ஐ.பி.எல். விளையாட்டை பார்த்து பொறாமை தேவையில்லையே என்று பொறுமை இழந்த நிலையில் பதிலளித்தார் டோனி. டோனியின் இந்த பதிலால் அதிருப்தியடைந்துள்ள பிஷன் சிங் பேடி, தனது டுவிட்டர் வலைத்தளத்தில் ஆத்திரத்தை கொட்டி தீர்த்துள்ளார்.

ஐ.பி.எல். ரசிகர்களே, உங்களுக்கு வேண்டியதை நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள். இந்தியாவின் டெஸ்ட் விளையாட்டு திறன் அழிவைத்தானே நீங்கள் விரும்பினீர்கள் என்று கூறியுள்ளார். (ரி)



டோனி

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி

கரணவாய், ஓக.20

குகரதன் அடுத்தடுத்து 4 கோல்களைப் போட 5:0 என்ற நிலையில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கற்கோவள ் உதயதாரகை விளைய ாட்டுக் கழகமும், கம்பர்ம லை யங்கம்பன்ஸ் விளைய ட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தி ் போக்கை தமது அணியி ் கட்டுப்பாட்டில் வைத்தி ந்த யங்கம்பன்ஸ் அணி அ த அணியின் வீரர் குகரதன் எதிரணியினருக்கு தண்ணி ாட்டி 8 ஆவது, 14 ஆவது, 34 ஆவது மற்றும் 44 ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து நான்கு கோல்களைப் போட்டு அசத்த பிரகாஷ் 51 ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும் போட 5:0 என்ற கோல் அடிப்படையில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தில் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகமும், செம்பியன்பற்று சென். பிலிப்ஸ் நேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

சம பலத்துடன் இரு அணியும் மோதி மைதானத்தின் உள்ளேயும் வெளியேயும் ஒரு வகையான பரபரப்பு நிலை காணப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் சென். பிலிப் நேரிஸ் அணி வீரர் டிலான் 7 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டார். இதனை அடுத்து இரு அணி வீரர்களும் கோல் போடும் முயற்சியில் இறங்க அது முடியாமல் போனது. அடிக்கடி இரு பகுதி கோல் கம்பங்களுக்கு அண்மையாகப் பந்து சென்று வந்ததே தவிர கோல் பெறமுடியவில்லை. இதனால் 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழக வீரர் வினோத் அசத்தலான கோல் ஒன்றைப் போட ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. இந்தச் சூழ்நிலையில் 42 ஆவது நிமிடத்தில் பிலிப் நேரிஸ் அணி வீரர் டிலான் மேலும் ஒரு கோலையும், நெடியகாடு விளையாட்டுக் கழக வீரர் விஸ்வரூபன் ஒரு கோலையும் போட 3:2 என்ற நிலையில் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது.

அடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் முதலில் இரு அணியினரும் தலா 5 கோல்களைப் போட மேலதிகமாக வழங்கப்பட்ட உதையை நெடியகாடு கோலாக்க பிலிப் நேரிஸ் அணியினர் தவறவிட்டனர். இதனால் 6:5 என்ற கோல் அடிப்படையில் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (த-108)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 20

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியான் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொடுக்குழாய் சத்திவேல் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கட்டைக்காடு சென்.ரேஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டிநவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொடுக் குழாய் சத்திவேல் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. (த-23-108)

## திக்கம் இளைஞர் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி



கரணவாய், ஓக.20

பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப் பங்களைச் சமர்ப்பிக்குமாறு விளையாட்டுக் கழக நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (த-108)

## அமெரிக்க ரென்னிஸ் ஆடமாட்டார் நடால்



ரென்னிஸ் போட்டிகளின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான ஸ்பெயின் நாட்டின் ரபேல் நடால், அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டிகளில் விளைய டமாட்டார் என அறிவித்துள்ளார்.

அவர் இறுதியாக விளையாடிய 3 ( மரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டிகளிலும் இறுதிப் போட்டிக்குத் தெரிவான அதேவேளை இரண்டு தடவைகள் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த மாதம் விம்பிள்டன் தொடரில் ஆரம்ப சுற்றுக்களிலேயே 19 வயது ஆஸ்திரேலிய வீரரிடம் தோல்வியடைந்து நடேல் வெளியேற்றப்பட்டார். உபாதையே இதற்கு காரணமாகும். நான் இம்முறை அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டிகளில் பங்குபற்ற மாட்டேன் என அறிவிப்பது கஷ்டமாக இருந்தாலும் அதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன் என நடால் தெரிவித்துள்ளார்.

உலகின் இரண்டாம் நிலை வீரராக கருதப்படும் நடால் அண்மையில் நடைபெற்ற இரண்டு தொடர்களில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)


## காணவில்லை

நாவற்குழியைச் சேர்ந்த **நகுலேஸ்வரன் கஜேந்திரன்** என்பவரை கடந்த 17.08.2014 இல் இருந்து காணவில்லை. வயது 16, மூக்குக் கண்ணாடி அணிபவர், பொது நிறம். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அறியத்தரவும்.

021 791 5995,
077 444 3737 (51112) (10)

தகவல்: தாய்.



## ALL OUT
Pest control service



கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்

தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

(51108)(10)


## மரண அறிவித்தல்

### திருமதி சுப்புலட்சுமி செந்தில்நாதன்



திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இல. 91 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்புலட்சுமி செந்தில்நாதன் (15.08.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பியப்பா செந்தில்நாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பத்மலோஜினி மற்றும் சற்குணம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலவேணி, விமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், கௌசல்யா, அகல்யா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகரன், வாசவன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரகல்யா, பிரியங்கா, பிரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**இல. 91, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி .**
**021 205 2201**

(51107)(10.6)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் பராசக்தி



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், இல.307, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சோமசுந்தரம் நேற்று (19.08.2014) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் (அம்பிகா ஸ்ரோர்ஸ்-அப்புத்தளை) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா, இரத்தினம், இலட்சுமி, பாக்கியம் மற்றும் தில்லையம்பலம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், தவராஜசிங்கம் (அம்பிகா ஸ்ரோர்ஸ்- அப்புத்தளை) மற்றும் யோகாம்பிகை (கொழும்பு), இந்திராணி, நாகேஸ்வரி, ஞானாம்பிகை, அகிலாண்டேஸ்வரி, மகேஸ்வரன் (விநாயகர் ஸ்ரோர்ஸ்- கம்பளை) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2014) வியாழக்கிமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல. 307, பலாலி வீதி,**
**பரமேஸ்வராச் சந்தி,**
**திருநெல்வேலி.**

(51111) (10.6)

**தகவல்: குடும்பத்தினர்.**
**மகேஸ்வரன்**
**021 4919 785, 075 587 5780**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**கனகேஸ்வரன் மோகனதீபன்**



தோற்றம் : 03.07.1984

மறைவு : 23.07.2014

கடந்த 23.07.2014 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அமரர் கனகேஸ்வரன் மோகனதீபன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 22.08.2014 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பக் குலவிளக்கின் மரணச் சடங்கிற்கு சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும், நேரடியாகக் கலந்து கொண்டும், தொலைபேசி வழியாகவும் அஞ்சலியைச் செலுத்தி, அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**4ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு.**

**குடும்பத்தினர்.**

(51028)(7.6.3)

## முதியோர் சங்க கூட்டம்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பிரதேச மட்ட முதியோர் சங்கம் அமைப்பதற்கான கூட்டம் இன்று புதன்கிழமை கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. முதியோர்களின் நலன் சார்பாக அமைக்கப்படவுள்ள முதியோர் சங்கக் கூட்டத்துக்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அலுவலர் பிரிவில் இருந்தும் தலா 2 முதியோர்கள் வீதம் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த முதியோர் சங்கத்தில் இணைவதற்கு ஆர்வமுள்ள முதியோர் களை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ கேட்டுள்ளார். (வ-108)

## பொருளியல் பேராசானுக்கு எமது அஞ்சலிகள்

எமது பொருளியல் ஆசான்

**S.வரதராஜன்**



அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்கள்
**P.பகீரதன் - A/L 2001**
**K.சுகாஷ் - A/L 2004** (51029) (12.3.6)

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 23 * 03 * 1961



மறைவு 24 * 07 * 2014

## திருமதி கலாதேவி கணேசலிங்கம்

கடந்த 2014.07.24 வியாழக்கிழமை சிவபதமடைந்த திருமதி கலாதேவி கணேசலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.08.2014) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 23.08.2014 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்தத் துயரச்செய்தி அறிந்து இறுதி நிகழ்வில் கடலெனத் திரண்டு எம் உணர்வோடு கலந்த எம் அன்பு உறவுகளே...! நண்பர்களே! எம் மனத்துயரின் பால் தவறவிடப்பட்டிருக்கும் அழைப்புக்களை மன்னித்து மனத்தயவுடன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு எம்முடைய நன்றி சமர்ப்பித்தலை ஏற்று எம் குடும்ப விளக்கின் ஆத்மசாந்திக்காய் தங்கள் அன்பினைப் பகிரும் வண்ணம் அழைக்கின்றோம்.


D-8 ஆனந்தம் பண்ணை
உருத்திரபுரம், கிளிநொச்சி. (51026) (4.3.6)

**குடும்பத்தினர்.**
**077 341 4373**

# மரண அறிவித்தல்

## சிற்றம்பலம் சிறீஸ்கந்தராஜா

(உரிமையாளர்-இ.சிற்றம்பலம் அன்ட் கொம்பனி, 25, பழைய சோனகத்தெரு, கொழும்பு - 12)



சுருவில், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிறீஸ்கந்தராஜா 17-08-2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிவஞானபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், அபிராமி, Dr. சஞ்சீவன், சரண்யா (Abans PLC Colombo - 3) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி அஞ்சுலன், பிரணவன் (Copal Amba Research PVT Ltd) ஆகி யோரின் மாமனாரும், அஷ்வினின் பாட்டனாரும், இராசலெட்சுமி, காலஞ் சென்ற Dr. இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலெட்சுமி மற்றும் சந்திரமதி, அருள் கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருநிலைநாயகி, KVமகேந்திரன் (சட்டத்தரணி), விமலநாயகி, காலஞ்சென்ற சொரூபராணி மற்றும் தவராணி, கமலராணி K.Vசுசீந்திரன், K.V ரவீந்திரன், காலஞ்சென்ற சண்முகலிங்கம் (நொதேன் இன்டஸ்ரீஸ் யாழ்ப்பாணம்), Dr மைத்திரிதேவி, மரகதவல்லி, Dr சிறீகாந்தன், பாலசுப்பிரமணியம், சோமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கீர்த்திசிங்கம், சிவராஜா மற்றும் கனகரட்ணம், துவாரகன், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு சகலனும், யசோதா, நந்தினி, பத்மலோஜினி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (19-08-2014) செவ்வாய்க்கிழமை பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் காலை 9 மணிதொடக்கம் மலை 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (20-08-2014) புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப் பின்னர் பொரளை கனத்தை இந்து மயானத்தில் பி.ப. 3 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**14, 4/1, அருத்துசா லேன்,**
**வெள்ளவத்தை.**

தகவல் : **மனைவி, மக்கள், மருமக்கள்.**

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை வரதராஜன்

(பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வரதராஜன் (பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்) நேற்றுமுன்தினம் (18.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலாவின் அன்புக் கணவரும், Dr.இளவேணி, பார்த்தீபன் (Litteaid) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. அனுசன் (யாழ்.போதனா வைத்தியசாலை), சிந்துஜா (நூலக உதவியாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனும், சிவசுப்பிரமணியம் (கனடா), விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேனுசானின் (British Business College) பேரனும், ஜமுனாவதி, காலஞ்சென்ற பானுகலா (கனடா), Dr. சாந்தி குமார் (லண்டன்), இராஜசிங்கம், சாந்தநிதி (லண்டன்), கிரிதரன், சிறீதரன், நாகேஸ்வரி ஆகியோ ரின் மைத்துனரும், ஜனார்த்தனி (லண்டன்), செந்தூரன், பிரகாஸ், கோகுலன் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், மயூரன் (டுபாய்), அபிராமி (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி) ஸ்ரீகஜன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் D.C.M கல்வி நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**215, பழைய பூங்கா வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.** (51020) (12.3.6)

தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
(வ-து)

## கேள்வி கோரல்கள்

1. பழைய அச்சக இயந்திரங்கள்
2. பழுதடைந்த மரத்தளபாடங்கள்
3. பழுதடைந்த கணினிகள், போட்டோப் பிரதி இயந்திரங்கள்
4. இரும்பு
5. துவிச்சக்கரவண்டி

கேள்விப் பத்திரத்திற்கான மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/= செலுத்தி இயந்திரத்திற்கான விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் சபை அலுவலக நேரத்தில் பெற்று 10.09.2014 இற்கு முன்பதாக விண்ணப்பிக்கலாம். அலுவலக நேரத்தில் பொருள்களைப் பார்வையிடலாம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் கட்டடத் தொகுதி, 2ஆம் மாடி,
இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி16104)
(12.3.6)

## சட்டவிரோத துப்பாக்கிகளை கைப்பற்ற நடவடிக்கை

கொழும்பு, ஓக.20
மேல்மாகாணத்தில் சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வைத்திருப்போரை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வைத்திருப்போர் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு அறிவிக்குமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித்ரோஹன குறிப்பிட்டுள்ளார்.
நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அஜித் ரோஹண இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.
கொழும்பு மாவட்டத்தின் மூன்று பகுதிகளில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களை அடுத்தே இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ற)

## கண்ணீர் அஞ்சலி



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவர்,
சமூகப் புல்மையாளன், ஆற்றல் மிகு பொருளியல் ஆசான்

அமரர்
**சின்னத்துரை வரதராஜன்**
அவர்கள்

அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை தெரிவிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**
**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**

## வேலை ஆட்கள் தேவை



**பதவிகள்**
1.விற்பனைப் பிரதிநிதி
2.பண அறவீட்டாளர்

**கீழ்வரும் தகைமை உள்ளவர்கள் விரும்பத்தக்கது.**
- ஒரு வருடத்துக்கு மேல் குறித்த துறையில் அனுபவம்
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்திவு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

நேர்முகத்தேர்வுக்கு வருகைதரும் திகதி: 21.08.2014

**ரவீர என்ரர்பிறைஸஸ்**
புலோப்பளை, பளை.
கிளைக் காரியாலயம்.
021 720 1722 077 442 2098
(47253)(10.6)

2 மணித்தியாலத்தில்
## கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

## கண்ணீர் அஞ்சலி

பொருளியல் பேராசான்
S.வரதராஜன்
தமிழரின் இருப்பின் போராளி
அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் மாணவன்.
G.கஜேந்திரன்
காளிகோயிலடி,
குப்பிளான் வடக்கு,
குப்பிளான்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **சிவபாமா ராகவன்** அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி **யோகேஸ்வரி தங்கராசா**
அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**
ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.
(சி16106)
(12.3.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உறவினரான
த. செல்வராசா அவர்களின்
பாசமிகு துணைவியார்
**திருமதி பவானி செல்வராசா**

அவர்களின் மறைவினால் துயர் அடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

**சி. கனகரட்ணம்**
**கதிர்வேலன் அரிசி ஆலை**
**கைதடி கிழக்கு, கைதடி.**
(51103)
(10.6)

## தேசியப் பற்றாளர்

அமரர்
# சி.வரதராஜன்



பல்லாயிரம் மாணவர்களை
வளப்படுத்திய
அரும் பொருளியலாளனே!

கொள்கையில் தடம்புரளா
தேசியப் பற்றாளனே!

துப்பாக்கி முனைக்கும்
எதிர்நின்று கருத்துரைத்த
தமிழ் உணர்வாளனே!

பிரிந்தாலும் பிரிக்கமுடியாத
நினைவுகளுடன்
உங்கள்
கனவுகள் நனவாக
எம் பணி தொடரும்...

**பொ. ஐங்கரநேசன்**

## மரண அறிவித்தல்

### திருமதி பவானி செல்வராசா



கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த திருமதி பவானி செல்வராசா நேற்று (19.08.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலசிங்கம்-சிவயோகி தம்பதியரின் அன்பு மகளும், பிரபல புகையிலை வியாபாரி வல்லிபுரத்தின் (சுன்னாகம்) அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான தம்பு- முத்துமாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், பிரபல புகையிலை வியாபாரி செல்வராசாவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, சிவநாதன், யோகநாதன், காலஞ்சென்றவர்களான தேவகி, தவச்செல்வி, விமலா ஆகியோரின் அன்பு சகோதரியும், யசோதா (லண்டன்), மயூரா (லண்டன்), மயூரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், துசியந்தன் (லண்டன்), சிவராம கிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், விதுசிகா, உமேசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கைதடி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**த. செல்வராசா (கணவர்)**
(51102)
(10.6)

## மரண அறிவித்தல்



### திருமதி கமலாதேவி மகாதேவா

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலா தேவி மகாதேவா ஆவணி மாதம் 17ஆம் திகதி (17.08.2014) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யாழ்ப்பாணம் முன்னாள் மேயரும் சட்டத்தரணியுமான S.C மகாதேவாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், அருளா னந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திராணி, இந்தி ராணி, செல்வராணி, செல்வராஜா, ஜெயராணி, பவளராணி, பத்மராணி, சிவராஜா, சித்ரா ஆகியோரின் அன்புத் தாயும், Dr. குணரட்ணம், Daniel Galagher, மாசிலாமணி, சித்ரா, அச்சுதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 24.08.2014 ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Home : 416 281 3067
சிவராஜா : 416 953 3702
சித்ரா : 647 402 4439

(51104)
(10.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## தொடர்ச்சிகள்

### புலிப்பார்வை,

கத்தில் இருந்து வெளியாகிறதே என்று கொந்தளிக்கத்தான் செய்வார்கள்.

ஏனெனில், இந்தப் படத்தின் காட்சிகள் அனைத்திலுமே பாலச்சந்திரன் சிறுவர் போராளியாகச் சித்தரிக்கப்படுகின்றார். இது உண்மைக்கு மாறானது. உச்சக் கட்டக் கொடூரமா கப் பிரபாகரன், பாலச்சந்திரனுக்கும் சிறுவர்களுக்கும் ஆயுதப் பயிற்சி கொடுப்பதாகக் காட்சிகள் வருகின்றன. இவை அனைத்துமே சிங்கள அரசின் பொய்யுரைக்கு வலுச் சேர்க்கவே பயன்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆளுமை செலுத்திய காலத்தில்- பாலச்சந்திரன், அங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்தார். அது தொடர்பான செய்திகளும் படங்களும் உலகத்தின் பார்வைக்கும் வந்திருக்கின்றன. ஆனால் போர் முனையில் பாலகன் பாலச்சந்திரன் உயிரிழந்ததாகக் காட்டி அந்தப் படுகொலையை நியாயப்படுத்தத் துடிக்கிறது 'புலிப்பார்வை' திரைப்படம். இது சிங்களப் பேரினவாதத்தின் பொய்யுரைக்கு வலுச் சேர்க்கின்றது.

பாலகன் பாலச்சந்திரன் போன்ற பிஞ்சுக் குழந்தைகளையும் அப்பாவி பொதுமக்களையும் ஈவிரக்கமின்றிச் சிங்களப் பேரினவாதம் படுகொலை செய்ததை நியாயப்படுத்துகிற இனவெறியின் உச்சக் குரலே புலிப்பார்வை திரைப்படம். இனப்படுகொலை புரிந்த குற்றச்சாட்டின் பேரில் சிங்களப் பேரினவாத அரசு சர்வதேச விசாரணைக்கு உள்ளாகியிருக்கும் நேரத்தில் சிங்களத் தைக் காப்பாற்றும் முயற்சியாக இந்தத் திரைப்படம் வந்துள்ளது.

தமிழீழப் பிரச்சினையில் ஒட்டுமொத்தமாகத் தமிழகமே ஒன்று திரண்ட நிலையில், இலங்கை பேரினவாத அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வலியுறுத்தித் தமிழ்நாட்டு சட்ட மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் சிங்களப் பேரினவாதமும் அதன் தலைமைத்துவத்தில் இருக்கின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவும் ஒட்டுமொத்த தமிழினத்தின் கொந்தளிப்பைக் கொச்சைப்படுத்த, திசை திருப்ப, மழுங்கடிக்கக் கையில் எடுத்த உத்திதான் தமிழ்நாட்டு சட்டமன்ற தீர்மானத்தை தோற்கடிக்கும் வகையில் தமிழ்த் திரை உலகத்துக்குள் பணத்தைப்பாய்ச்சுவது என்பது.

தமிழ்த் திரை உலகத்தில் ஐங்கரன் நிறுவனக் கரு ணாவை அனைவரும் அறிவர். ஆனால் அவருடன் மெல்லமெல்ல லைக்கா என்ற நிறுவனம் இணைந்து கோடம்பாக்கத்தில் கால் பதித்தது. அத்துடன் இயக்குநர் முருகதாஸ் இயக்கத்தில் நடிகர் விஜய் நடிக்கும் திரைப்படத்தைத் தயாரிக்கிறது லைக்கா நிறுவனம்.

இந்தத் தகவல்கள் வெளியானது முதலே லைக்கா நிறுவனத்திற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பத் துக்குமான உறவுகள் என்ன என்பது குறித்து நீண்ட பட்டியல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இப்படி புலிப்பார்வை, கத்தி போன்ற திரைப்படங்கள் தமிழினத்தின் உளவியல் சிந்தனை மீது நடத்தப்படுகின்ற போரின் வெளிப்பாடே!. சிங்களத்தின் உளவியல் போரை வெல்லத் தமிழர்களாக ஓரணியில் ஒன்று திரள்வோம். தமிழீழ விடுதலையை மீட்டெடுப்போம்-என்று தமிழர் வாழ்வுரிமைக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் தி.வேல்முருகன் 51 அமைப்புக்களின் சார்பாகவும் தெரிவித்தார். (த-5)

### படகுகளை

இந்த நிலையில் இலங்கையில் மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் பல்வேறு போராட்டங்களை நடத்தியபின் மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்பட்டனர். அவர்களின் படகுகள் விடுவிக்கப்பட வில்லை. இலங்கையில் உள்ள மீனவர்களின் படகுகளை விடுவிக்கக்கோரி கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட காலவரையற்ற வேலை நிறுத்தம் இன்று 28 ஆவது நாளாக நீடித்து வருகின்றது. இலங்கை அரசு மீனவர்களை மட்டும் விடுதலை செய்து விட்டுப் படகுகளை விடுவிக்க மறுத்து வருவதை கண்டித்தும், படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் எதிர் வரும் 23ஆம் திகதி பாம்பன் பஸ் பாலத்தை முற்றுகையிட்டுச் சாலை மறியலில் ஈடுபடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார். (த-14)

### புலம்பெயர்

விடுதலைப்புலிகள் மீளெழுச்சி பெறாத வண்ணம் எடுக்கக்கூடிய அதிகபட்ச நடவடிக்கைகளை நாம் மேற் கொண்டுள்ளோம். ஆனால், புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் சிந்தனை இன்னமும் அழியாமல் உள்ளது - புலம்பெயர்ந்தவர்கள் இங்குள்ள பிராந்திய அரசியற் கட்சிகளை தமது தேவைக்கு ஏற்ப திரிபுபடுத்திச் செயற்படுகின்றனர். பணம் கிடைக்கின்றமையால் இங்குள்ள கட்சிகளும் புலம் பெயர்ந்தவர்களின் தாளங்களுக்கு ஏற்ப செயற்படு கின்றனர். அந்தவகையில் புலம் பெயர்ந்தவர்களாலேயே விடுதலைப் புலிகள் மீளெழுச்சி பெறு வதற்கான தொரு அபாய நிலை காணப்படுகின்றது - என்றார். (த)

### துப்பாக்கிச்

பகுதியில் பழைய இரும்புகள் சேகரித்துக்கொண்டு வந்து வீட்டு முற்றத்தில் வைத்து, அவற்றைச் சீர் செய்யும்போது அதற்குள் இருந்த துப்பாக்கிச் சன்னம் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் செந்திலின் கழுத் துப் பகுதியில் ஆழமான காயம் ஏற்பட்டதாகவும், உடனடியாக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்கப்பட்டுப் பின்னர் அவர் வவுனியா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-5-102)

### உரம்

மீட்கப்பட்டது.

அந்தச் சங்கத்தை உடனடியாகச் சீல் வைத்து மூட உத்தர விட்ட நீதிமன்று, சங்க முகாமையாளரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பியிருந்தது.

அதன்படி சங்க முகாமையாளர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலையானார். ஆரம்ப விசாரணையின் பின்னர் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதில் பனங்கட்டி தயாரிப்புக்கு உரம் பயன்படுத்தியமை, அவற்றை அனுமதியின்றித் தயாரித்தமை மற்றும் அவற்றின் விளம்பர அட்டை யில் (லேபிளில்) தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சேர்மா னங்கள் தொடர்பில் எதுவும் குறிப்பிடாமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அவற்றின் மேலதிக நடவடிக்கைக்காக வழக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதுவரை ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தைச் சீல் வைத்து மூடியவாறு இருக்க நீதிமன்று உத்தர விட்டது.

அங்கு பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தும் பொகோடோ உரம் 125 கிலோகிராம் மற்றும் உரம் கலந்து தயாரிக்கப்பட்ட 125 கிலோகிராம் பனங்கட்டி என்பன மீட்கப்பட்டுள்ளன. குறித்த உரம் வாழ்வெழுச்சி திட்டத்தில் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-4)

### மின் கம்பத்துடன்

சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் கே.வைகுந்தன் (வயது-33), வை.மங்கையர்க்கரசி (வயது -31), வைசாய் சரண் (வயது-3), சாய்ராணி (வயது-1) ஆகியோரே காயமடைந்துள்ளனர். (த-421)

### கமலுக்கு

3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதற்கு முதல்நாள் வேலணையில் வசித்து வந்த லண்டன் யசிந்தன் மற்றும் டானியல் றெக் ஷயனின் மனைவியான அனித்தா ஆகியோர் கைதாகித் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர கமல் தனது சட்டத்தரணி மூலமாக யாழ். மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்துள்ளார். அது தொடர்பான கட்டளை இந்த மாத இறுதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

### முன்னாள்

திபதி உறுதியளித்திருந்தார். நேற்று அலரி மாளிகையில் நடத்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கேள்வி எழுப்பட்டது. அதன் போதே ஜி.ஏ.சந்திரசிறி மீண்டும் ஆளுநராக நியமிக்கப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

"அந்த நியமனம் தொடர்பில் எனக்கு எந்த ஆச்சரியமும், அதிர்ச்சியும் இல்லை. நாங்கள் வடக்கு மாகாண ஆளுநர் நியமனத்தில் எந்தத் தவறும் விடவில்லை. அதை யாரும் விமர்சிக்க முடியாது.

வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி முன்னாள் இராணுவத் தளபதி. அவர் இராணுவ உடையைக் கழற்றிய பின்னர், அவரும் சிவிலியன்தான். நாம் இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதிகளுக்கு எதுவும் வழங்காமல் விடுவது அவர்களது உரிமைகளைப் பாதிப்பதாக அமையாதா?" என்று எதிர்க் கேள்வி எழுப்பினார்.

**பொலிஸ் அதிகாரம் இல்லை**

மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, "மாகாணங்களுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டு விட்டன. அவற்றைக் கொண்டு மாகாண சபைகளை இயக்க முடியும். 13 ஆவது திருத்தச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பொலிஸ் அதிகாரம் மாகாணசபைகளுக்கு ஒரு போதும் வழங்கப்படாது. பொலிஸ் அதிகாரம் மத்திய அரசிடமே தொடர்ந்து இருக்கும்"- என்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும்போது: "பொலிஸ் அதிகாரம் மாகாண அரசுக்கு வழங்கப்பட்டால், நானே எனது சொந்த ஊரான மெதனமுல்லவுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும். இந்தியாவில் இவ்வாறு மாநிலங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால், அந்த மாநிலத்தின் முதல்வர் மறுத்தால் அங்கு இந்தியாவின் பிரதமரே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதே போன்று இங்கும் ஏற்படக் கூடும். அதனால் பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்க முடியாது.

காணி அதிகாரம் வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மாகாண காணி ஆணையாளர் ஒருவர் இருக்கின்றார். அவரை மீறி நாம் அங்கு காணி எதனையும் பெற முடியாது."- என்றும் தெரிவித்தார்.

**ஐ.நா. குழுவுக்கு அனுமதியில்லை**

ஐ.நா. விசாரணைகள் தொடர்பாக ஜனாதிபதி கூறும்போது, "இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணைக் குழுவை இலங்கைக்குள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். இந்த விசாரணைக் குழு தன்னிச்சையானது. இதனை ஆரம்பத்திலிருந்து நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. எம்மைப் போன்று பல நாடுகளும் இதனை ஏற்றுக் கொள்ள வில்லை. அவர்கள் அதனைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை" - என்று குறிப்பிட்டதுடன், "இந்த விசாரணைக் குழுவைப் பற்றி தேவைப்படுபவர்களே அதனைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்கின்றார்கள். நாம் அந்த விசாரணைக் குழு தேவையற்றதொன்று என்று கருதுவதால் அதனைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள விரும்ப வில்லை."- என்றும் தெரிவித்தார்.

**இராணுவம் குழப்பவில்லை**

"காணாமற்போனோரின் பெற்றோருக்கும், வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் இடையில் மருதானையில் இடம்பெற்ற நிகழ்வை படையினரோ - பொலிஸாரோ குழப்பவில்லை"- என்று தெரிவித்த ஜனாதிபதி, "அங்கு இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலைத் தடுத்து சமரசம் ஏற்படுத்துவதற்காகவே பொலிஸார் சென்றனர்."- என்றும் தெரிவித்தார். "1989 ஆம், 1990 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இதேபோன்று காணாமற்போனோர் பிரச்சினைகளை நாமும் எதிர் கொண்டோம். அப்போதிருந்த அரசு, இந்தப் பிரச்சினையை இராணுவத்தினரைப் பயன்படுத்தி அடக்கியது. நாம் அவ்வாறு செய்யவில்லை."- என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

**தஞ்சம் கோரியவர்கள் விவரம் பெறப்படும்**

"காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவுக்கு இதுவரையில் 20 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காணாமற்போனவர்கள் என்று சொல்லப்பட்டவர்களில் பலர் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளமை தொடர்பிலும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதனால் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்தவர்கள் தொடர்பிலான விவரங்களை வெளிநாடுகளில் கோரவுள்ளோம்."- என்றும் ஜனாதிபதி சந்திப்பின்போது கூறினார்.

**புலிகள் ஆபத்தானவர்கள்**

"தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள். அவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அவர்கள் மீளவும் கட்டியெழுப்பப்படுவது தொடர்பில் அவதானமாக இருக்கின்றோம். இதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதனை எமது புலனாய்வாளர்கள் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முறியடித்துள்ளனர்"- என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (ற-5)

### நாவாந்துறை

வத்தினர் ஈடுபட்டுள்ளனர். முதலில் தற்காலிக முகாம்களை அமைத்த இராணுவத்தினர் தற்போது, அந்தக் காணி இராணுவத்தினருக்குச் சொந்தமானது, யாரும் உட்பிரவேசிக்க வேண்டாம் என்று துண்டுப்பிரசுரம் ஒட்டியுள்ளனர்.

அந்த முகாமுக்குள் இராணுவத்தினர் முழுநேரமாக இருப்பதில்லை என்றும், இரவு 9 மணியளவில் வருவார்கள் பின்னர் அதிகாலை நான்கு மணிக்கு வெளியேறிவிடுகின்றனர். அங்கு என்ன நடக்கின்றது என்று தெரியவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (ற-21)

### படைச்சிப்பாயால்

னர் பற்றையொன்றுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு, வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அதனைச் சிலர் கண்ணுற்றுவிட்டனர் என்று கூறப்படுகின்றது. அது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதுடன், சிறுமி மருத்துமனையில் சேர்க்கப்பட்டார். முறைப்பாட்டை அடுத்து அந்த இராணுவ முகாமுக்குள் விசாரணை நடத்துவதற்கு பொலிஸாருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதையடுத்து அது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்."- என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் காரைநகரில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் கடற்படைச் சிப்பாயால் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார் என்று முறையிடப்பட்டு, அது குறித்த குற்றவாளி இன்னமும் இனங்காணப்படாத நிலையில், தற்போது மன்னாரிலும் படைச் சிப்பாய் ஒருவரால் சிறுமி வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற-4)

### மற்றொரு

ரான அஹ்மர் சூபி மற்றொரு ஆலோசகராக நியமிக்கப்படுகிறார் என்று நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே பெயர் குறிப்பிடப்பட்டவரான இந்தியாவைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் அவ்டாஸ் கௌஷலின் நியமனமும் ஜனாதிபதி செயலகத்தால் உத்தியோகபூர்வமாக நேற்றையதினம் அறிவிக்கப்பட்டது.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள 2013 ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதன் விசாரணைப்பரப்பு கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி முதல் போர்க் குற்றங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. அத்தோடு ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழ்ங்க, மூன்று சர்வதேச வல்லுநர்கள் நியமிக்கப்பட்டனர். தேவையேற்படின் மேலும் சிலரையும் தான் நியமிப்பார் என்று ஜனாதிபதி அறிவித்தார்.

சார்க் நாடுகளைச் சேர்ந்தவர்களையும் ஆலோசனைக் குழுவில் இணைக்க வேண்டும் என்பதற்காகவே பாகிஸ்தான், இந்தியாவைச் சேர்ந்த வல்லுநர்களை தற்போது ஆலோசகர்களாக நியமித் துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (உ-5)

### மருத்துவமாது

பெண்ணுக்குக் குழந்தைகள் இல்லை. அதற்கான சிகிச்சைகளைப் பெற்றுத் தருவதாகக் கூறியே மருத்துவமாதாக நடித்த பெண் தனது காரியத்தை நிறைவேற்றியுள்ளார். பெண்ணை ஓட்டோவில் ஏற்றிச் சென்ற அந்த மருத்துவமாது, அவரை ஒரு மருத்துவமனை ஒன்றில் இறக்கி, அங்கு காத்திருக்குமாறு கூறியதுடன், சிகிச்சையின்போது நகைகள் அணிந்திருக்கக் கூடாது என்று கூறி அவரது நகைகளை சாமர்த்தியமாக வாங்கிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.


தாலிக்கொடி, மோதிரம் உள்ளிட்ட நகைகளே பறிபோயுள்ளன. தன்னை மருத்துவமாதாக நடித்து ஏமாற்றியவர் யாழ்.மாநகர பகுதியைச் சேர்ந்தவர் என்று பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் உபயோகமான எந்தத் தகவலும் தெரியவில்லை. கிடைத்த விடயங் கள் பதிவு செய்யப்பட்ட முறைப் பாட்டுடன் முரண்படுகின்றன. 14 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்ற போதும் 8 பவுண் நகைகளே திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4)

### சிக்கியது

டது. அப்போது பொலிஸார் அங்கு நின்றிருந்த ஹைஏஸ் வாகனம் ஒன்றைச் சோதனையிட்டுள்ளனர். அதனுள் இருந்து ஆடைகள் வைக்கப்பட்டிருந்த நான்கு பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 56 தங்கக் கட்டிகளைப் பொலிஸார் கைப்பற்றினர். வாகனத்தில் இருந்து மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு மற்றும் புத்தளம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்துள்ள பொலிஸார், அவர்களிடம் இருந்து 6 கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டன என்றும்- குறித்த வாகனமும் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது என்றும்- தெரிவித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணைகளில் இந்தத் தங்கக் கட்டிகள் தலைமன்னார் ஊடாக தென்னிந்தியாவுக்குக் கடத்தப்படவிருந்தன என்று தெரியவந்துள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்துள்ளனர். (ற-4.56)



திருகோணமலை சீனன்குடா மீன்பிடி துறைமுகத்தில் ஆழ்கடல் மீன்பிடி படகுகள் திருத்தும் நிலையம் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கடலில் இருந்து இயந்திரங்களின் துணையுடன் படகுகள் இந்நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டு, திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த துறைமுகம் ரூபா 15 மில்லியன் செலவில் நிர் மாணிக்கப்பட்டுள்ளது.

# கருமலையூற்று பள்ளிவாசல் தொடர்பாக ஆவணங்கள் படையினரிடம் சமர்ப்பிப்பு

## அரச செலவில் திருத்தப்பட்டமையும் சுட்டிக்காட்டு

திருகோணமலை, ஓக. 20

திருகோணமலை கருமலையூற்று வெள்ளை மணல் ஜும் ஆப் பள்ளிவாசல் உடைக்கப்பட்டமை தொடர்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக், லெப்டினன்ட் கேணல் கெசுலுடன் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பள்ளிவாசல் சம்பந்தமாக சகல ஆவணங்களும் பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கு காண்பிக்கப்பட்டன.

அத்துடன் 2007ஆம் ஆண்டு தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு அரச நிதியில் இருந்து இப் பள்ளிவசால் திருத்தியமைக்கப்பட்டமையும் கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பள்ளிவாசல் சம்பந்தமாக திருமலை மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ் விடயமாக கருத்துத் தெரிவித்த லெப்டினன்ட் கேணல்- பள்ளிவாசல் உடைக்கப்பட்டமை தொடர்பாக தனது உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் பள்ளிவாசலை மீள நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.



*வெள்ளை மணல் ஜும் ஆப் பள்ளிவாசல் உடைக்கப்பட முன்னர் அதன் தோற்றம்*

இந்தச் சந்திப்பில் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர், பிரதேச உறுப்பினர்கள் பசீர் மற்றும் அலி சப்றி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கருமலையூற்றுப் பள்ளிவாசல் இடிக்கப்பட்டமை தொடர்பில், கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா 'வெள்ளை மணல் கருமலையூற்றுப் பகுதியில் பள்ளிவாசல் இருக்கவில்லை. இந்த நிலையில் எவ்வாறு அதை இடிக்க முடியும்' எனக் கேள்வி எழுப்பியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- திருமலை வெள்ளைமணல் கருமலையூற்று பள்ளிவாசலை மீள அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ. எச். எம். அஸ்வர் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் பள்ளிவாசலுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை பற்றி ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் திங்கட்கிழமை அந்த இடத்தை பார்வையிட்டதைத் தொடர்ந்து பள்ளிவாசலின் நிலைமை குறித்து ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு செயலாளருக்கும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் முதலமைச்சரை கேட்டுக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# தமிழரசுக்கட்சியின் கிளைக் காரியாலயம் காரைதீவில் திறப்பு




காரைதீவு, ஓக. 20

இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளைக்காரியாலயம், காரைதீவில் திறந்து வைக்கபட்டுள்ளது. கட்சியின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசா கிளைக் காரியாலயத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.கலையரசன், மு.இராஜேஸ்வரன், கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# கல்முனை விபத்தில் நால்வர் படுகாயம்

கல்முனை, ஓக. 20

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்

மட்டக்களப்பிலிருந்து அக்கரைப்பற்றை நேக்கிச் சென்ற பொத்துவில் டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸும், மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிக்குடியை நோக்கிச் சென்று கொண்டிருந்த நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான பிக்கப் வாகனமுமே ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன.

இதில் பஸ்ஸில் பயணித்த ஒருவரும், பிக்கப் வாகனத்தில் பயணித்த சாரதி மற்றும் நீர்ப்பாசனத் திணைக் களத்தின் நவகிரிப்பிரிவுக்குரிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் எம்.மயூரன் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களுள் மூவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதியட்சகர் கு.சுகுணன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-10)

# வெறும் சான்றிதழ்களால் மட்டும் வேலைவாய்ப்பை பெறமுடியாது

## யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

வெறும் சான்றிதழ்களால் மட்டும் இன்று நாம் ஒரு வேலைவாய்ப்பை பெற்றுவிட முடியாது. எனவே மேலதிகமாக பல திறன்களை வளர்த்துக் கொள்வதன் ஊடாகவே தகுதியுடைய ஒருவேலைவாய்ப்பை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு முக்கியமாக ஆங்கில அறிவு, கணினி அறிவு என்பவற்றை ஒவ்வொருவரும் கற்றிருக்க வேண்டியது கட்டாயமாகும் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.




இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

உயர்கல்வியில் பல்கலைக்குத் தகுதி பெறாத மாணவர்கள் தம்மால் பல்கலைக் கழகத்துக்குச் செல்ல முடியவில்லையே எனக் கவலைப் படுவார்கள். ஒவ்வொருவருக்குள்ளும் திறமைகள் உள்ளன. ஆனால் சில சமயங்களில் அவை வெற்றியளிப்பதில்லை. எனினும் உயர் கல்வியை முடித்து விட்டு மேலதிக கற்கைகளைப் பயில விரும்பும் மாணவர்களுக்குத் திறந்த பல்கலைக்கழகம் வாய்ப்பளிக்கிறது. திறந்த பல்கலைக் கழகத்தில் உள்ள கற்கை நெறிகள் தொடர்பான விவரங்கள் வடக்கில் உள்ள பல மாணவர்களுக்குத் தெரியாது. எனவே மாணவர்கள் அங்குள்ள கற்கைநெறிகள் தொடர்பாக அறிந்து மற்றவர்களையும் அதில் ஈடுபட உதவ வேண்டும்.

இன்று இலங்கைப் பல் கலைக் கழகத்தால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர். கற்கை நெறி முடிவடைய எமக்கு ஒரு சான்றிதழ் கிடைத்து விட்டால்போதும் என நாம் இருந்துவிட முடியாது. ஏனெனில் சான்றிதழ்கள் மட்டும் எமக்கு ஒரு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரப் போவதில்லை. ஆங்கில அறிவு கணினி அறிவுபோன்றவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்- என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் கே.எச்.ஜெயவர்த்தன, இலங்கை திறந்த பல்கலைக்கழக்த்தின் சமூக வியல் பீடத்தின் பீடாதிபதி சி.இ. குணரட்ண, இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-14)

# பாதுகாப்பு, சுத்திகரிப்புச் சேவைகளை நிறுத்தியமை பிரதம செயலாளரின் தன்னிச்சையான நடவடிக்கை

*முதலமைச்சர் செயலகம் கூறுகிறது*

யாழ்ப்பாணம், ஒக. 20

வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்துக்கான பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை என்பன நிறுத்தப்பட்டமை, பிரதம செயலாளரின் தன்னிச்சையான நடவடிக்கை தான் என்று சாரப்பட முதலமைச்சர் செயலகத்தினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முதலமைச்சர் செயலகம் வெளியிட்டுள்ள ஊடகக் குறிப்பில், மாகாண நிதியின் ஊடாக செலவீனம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு விடயமும் மாகாண அமைச்சரவையின் பரிந்துரையுடனும், மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளுக்கு அமைவாகவுமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அமைச்சரவையின் பரிந்துரையினைப் பெறாமல், 200 மில்லியன் பெறுமதியான பாதுகாப்புச் சேவையினூடாக 295 பாதுகாப்பு ஊழியர்களைப் பணியில் அமர்த்தல் தொடர்பான பெறுகைக் குழுத் தீர்மானம் ஒன்றில் கையொப்பமிடுமாறு முதலமைச்சரின் செயலாளருக்குத் தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்குமுகமாக அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று பெறுகைக் குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது சிறப்பானது என்று முதலமைச்சரின் செயலாளரினால் கடந்த 11 ஆம் திகதி பிரதம செயலாளருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் கடிதத்துக்கு பதிலேதும் வழங்கப்படாமலேயே, கடந்த முதலாம் திகதியிலிருந்து வழங்கப்பட்டிருந்த சேவைகள் கடந்த 15 ஆம் திகதி முதல் நிறுத்தப்படுவதாகவும், அமைச்சுக்கள் யாவும் தத்தமது அலுவலகங்களுக்கான பாதுகாப்புச் சேவையைத் தாமாகவே அலுவலக நடைமுறைக்கமைவாகப் பெறுதல் வேண்டுமெனவும் 9 ஆம் திகதி அன்று பிரதம செயலாளரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

வெறும் 5 நாள்கள் அவகாசத்தில் இது சாத்தியமற்றது என்பதால் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றிச் சேவைகளைப் பெறுவதற்கு வசதியாக அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை சேவைகளை நீடித்து வழங்குமாறு கடந்த 11 ஆம் திகதி அன்று பிரதம செயலாளருக்கு, முதலமைச்சர் செயலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டது.

இதேவேளை கடந்த 12 ஆம் திகதி அன்று முதலமைச்சரின் செயலாளர் தவிர்ந்த ஏனைய அமைச்சுச் செயலாளர்களை அவசரமாக அழைத்த பிரதம செயலாளர், தம்மால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்காது மேற்கொள்ளப்பட்ட முடிவுக்கமைவாகத் தயாரிக்கப்பட்ட பெறுகைத் தீர்மானத்தில் கையொப்பம் பெற்றுக் கொண்டு பாதுகாப்புச் சேவைகளை அந்த அமைச்சுக்களுக்கும் தமது செயலகத்துக்கும் வழங்கத் தீர்மானித்தார்.

இதனை அறிந்து முதலமைச்சர் செயலகத்துக்கும் சேவைகளை விஸ்தரிக்குமாறு முதலமைச்சரின் செயலாளரால் 13 ஆம் திகதி அன்று பிரதம செயலாளரிடம் எழுத்து மூலம் கோரப்பட்டது. ஆயினும் இவை எவையுமே செவிமடுக்கப்படாது பாதுகாப்புச் சேவைகள் மட்டு மன்றிச் சுத்திகரிப்புச் சேவைகளும் முதலமைச்சர் செயலகத்துக்கும் அதன் கீழ் வரும் சகல திணைக்களங்கள், முதியோர் இல்லம், அரச பொறுப்பேற்கும் (சிறுவர்) இல்லம் ஆகியவற்றிற்கும் 15 ஆம் திகதி முதல் நிறுத்தப் பட்டுள்ளன.

அமைச்சரவையுடன் எந்த ஒரு கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது தன்னிச்சையான முறையில் பிரதம செயலாளர் முதலமைச்சரின் அமைச்சுக்கான சேவைகளை நிறுத்தியதும் உரிய முறையிலான அங்கீகாரத்தைப் பெறாமல் ஏனைய அமைச்சுக்களுக்கு இந்தச் சேவைகளை வழங்கியதும் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் கீழ்ப்படிவின்மை ஆகியவற்றையே எடுத்துக் காட்டுகின்றது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

# தென்கொரியாவில் பயிற்சி பெறுவதற்கு வடக்கில் சிங்கள கணக்காளர்கள் தேர்வு

*நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக. 20

வடக்கு மாகாண நிர்வாகத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக கடமையாற்றும் நிலையில், இங்குள்ள சிங்களக் கணக்காளர்களுக்கு, தென்கொரியாவுக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு அவர்களை கொழும்பு மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.

கொழும்பு அரசின் திறைசேரியினால் வடக்கில் கடமையாற்றும் 4 சிங்களக் கணக்காளர்களும், 2 தமிழ் கணக்காளர்களும் பயிற்சிநெறிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான அனுமதியை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளார்.

மேற்படி நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ள வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் 6 கணக்காளர்களுக்குப் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான இரண்டு வாரகாலச் சிறப்புப் பயிற்சியை வழங்கத் தென்கொரிய அரசு முன் வந்திருந்தது.

99 சதவீதத்திற்கு மேலாக தமிழ் உத்தியோகத்தர்களைக்கொண்ட வடக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் அதிலும் 10 வருடத்திற்கு மேலான சேவை மூப்புடன் சிறப்புப் பயிற்சிகளுக்குச் சந்தர்ப்பங்களே கிடைக்காத ஏராளமான தமிழ்க் கணக்காளர்கள் உள்ளனர். இவ்வாறான நிலையில் தகுதிகாண் சேவை நிலையிள்ள 10 சிங்களக் கணக்காளர்களில் 4 பேர் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இரண்டு தமிழர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு அரசின் திறைசேரியினால் முதலில் 4 சிங்கள கணக்காளர்கள் மாத்திரம் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான அனுமதியை வழங்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திடம் கேட்கப்பட்டுள்ளது. அவ்வாறு கொழும்பு அரசு கோரிக்கை விடுத்தவர்களுக்கு ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட்டு அவர்கள் குறித்த பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் பின்னரே இரண்டுதமிழ் கணக்காளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.


இது தொடர்பில் வடக்கு முதலமைச்சருக்கு, ஆளுங் கட்சி உறுப்பினர் சுட்டிக்காட்டிய மனுவில், தகுதி காண் சேவை நிலையிலிருக்கும் சிங்கள கணக்காளர்கள் தமது தகுதி காண் காலத்தை நிறைவு செய்ய இன்னும் காலமுள்ளது. காலங் காலமாக தென்னிலங்கையில் தமிழர்களுக்கான சந்தர்ப்பங்கள் இனவாத அடிப்படையில் நிராகரிக்கப்பட்டு பெருமளவு அரச நிர்வாகிகளும் ஏனைய அதிகாரிகளும் விரக்தியடைந்து தமது உத்தியோகங்களை பாதியில் விட்டு வெளிநாடு சென்றுள்ளனர்.

இந்த இனவாத அடிப்படையிலான ஆளெடுப்பு, பதவியுயர்வு, வெளிநாட்டுச் சிறப்பு பயிற்சிக்கான வாய்ப்புக்கள் தீர்மானிக்கப்படல் என்பவற்றின் விளைவாக நாட்டின் பொது நிர்வாக சேவையில் 5 வீதத்துக்கும் குறைவாகவே தமிழர்கள் இருக்கும் நிலையில் தமிழ் நிர்வாகிகள், அதிகாரிகளின் தரத்தை உயர்த்த கூடிய ஒரே நிறுவனமாக வடக்கு மாகாண சபை மட்டுமே உள்ளது.

இங்கும் இனவெறியுடன் கூடிய அதிகார துஷ்பிரயோகத்தின் மூலம் வடக்கு ஆளுநர் சிங்களவர்களை அதுவும் முறைகேடான வகையில் தகுதிகாண் சேவைக்கால கணக்காளர்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். இது ஆளுநரின் இனவெறி மனோபாவத்தையும், பிரதம செயலாளரின் அடிமை மனோபாவத்தையும் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

இந்த விடயத்தில் தலையிட்டு முறைகேடான தெரிவை நிறுத்தி வடக்கு மாகாண நிர்வாகத்துக்கு நிதிநிர்வாகம், நிதிமுகாமைத்துவ விடயங்களில் வலுச்சேர்க்கும் வகையில் தகுதியான இந்தப் பயிற்சியின் தேவையுடையவர்களைத் தேர்வு செய்ய வேண்டும் - என்று கோரப்பட்டுள்ளது.

(த-5)



# வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது ஓட்டோ

கரணவாய், ஒக.20

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த டிராக்டர் இயந்திரப் பெட்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் காயமடைந்தனர்.

புலோலி - உபயகதிர்காமம் கோயில் வீதியில் உபயகதிர்காமம் ஆலயத்துக்கு அண்மையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த த. சுரேந்தினி (வயது-24) அவரது மகனான த.நிலக்ஷன் (வயது- 7) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவார். படுகாயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் ஓட்டோவின் முன் பகுதி பெரிய சேதங்களுக்கு உள்ளான போதும் சாரதி காயம் எதுவும் இன்றி தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த பேர் ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திசென்றவேளையிலேயே ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியுடன் மோதியதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (த-108)

# கொலை சந்தேக நபர்கள் மறியலில்

தென்மராட்சி.ஒக.20

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் சந்தேக நபர்களை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதி மன்று நேற்று உத்தரவிட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபர்களை எதிர்வரும்.2 ஆம் திகதி வரை விளக்க மறிய லில் வைக்குமாறு உத்தர விட் டார்.

இதேவேளை -

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, சந்தேக நபர்களை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

(த-9)


COMBINED MATHEMATICS

Personal Class / Group Class

தொடர்புக்கு:

076 601 2429 (51034) (10)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.08.2014

External Degree

GAQ புதிய பிரிவுகள் ஆரம்பம்,

BA1, BA (Final) வகுப்புக்கள் நடைபெறுகின்றன

Further Details:

JAFFNA COLLEGE

UNDERGRADUATE Dept,

464, Hospital Road, Jaffna.

0212223382

நல்லூர் கால விசேட சலுகை

| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | 20000/= | One way |
| கொழும்பு – சென்னை | 21900/= | Return |
| கொழும்பு – திருச்சி | 22400/= | Return |
| கொழும்பு – டோகா | 26000/= | One way |
| கொழும்பு – அபுதாபி | 26500/= | One way |
| கொழும்பு – மலேசியா | 32000/= | Return |
| கொழும்பு – சிங்கப்பூர் | 30500/= | Return |
| கொழும்பு – பிரான்ஸ் | 45500/= | One way |
| கொழும்பு – ஜேர்மனி | 72300/= | Return |
| கொழும்பு – லண்டன் | 93500/= | Return |
| கொழும்பு – சுவிஸ் | 98000/= | Return |
| கொழும்பு – கனடா | 105700/= | One way |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

Nation Popular Travels & Tours

#128, Brown Road, Jaffna

128 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்

Mobile 0773083820 www.nationtravels.com

Hot line 0114651199 Jaffna 0214920920

உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

NEC கல்வி நிறுவனத்தின் கண்ணீர் காணிக்கை

இலங்கையின் பிரபல பொருளியல் ஆசிரியரும் முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான

சின்னத்துரை வரதராஜன்



அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர், மாணவர்கள்

NEC கல்வி நிலையம்.

(சி/16107) (10)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை A

உதயன் 20 ஜூலை 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

வாழ்க்கை வதங்கிப் போவது ஆச்சரியமல்ல; ஆனால் வதங்கிப் போன நினைவு மாத்திரம் வாடாமல் வாசமும் இல்லாது இருக்கும் நிலைதான் பயங்கரம். - மில்.

# துச்சமாக மதிக்கப்படும் மனித உயிர்கள்



■ ராஜராஜன்

பயிர்களுக்கு அடி உரமாகப் பயன்படுத்தப்படும் பொஸ்பேற் என்னும் இரசாயன உரத்தைப் பயன்படுத்தி பனை வெல்லத்தைத் தயாரித்ததாக வெளிவந்த செய்தியைப் படித்தபோது இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் மனிதர்களா அல்லது கேவலமான மிருகங்களா என்ற சந்தேகம் ஏற்பட்டது. பனை மரத்திலிருந்து பெறப்படும் பத நீரில் உள்ள சுண்ணாம்பின் காரத் தன்மையை சமப்படுத்தும் பொருட்டு பொஸ்பொயிட் என்று அழைக்கப்படும் அமிலத்தைப் பயன்படுத்துவது வழக்கமாகும். அதன் விலை அதிகமாக இருந்ததால் மலிவாகக் கிடைக்கும் இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் தனியார் ஒருவரால் இது மேற்கொள்ளப்படவில்லை. கூட்டுறவுச் சங்கம் ஒன்றிலேயே மனித கொலைக்கு ஒப்பான இந்தப் பாதகம் நிகழ்ந்துள்ளது. சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை நிச்சயம் வழங்கப்பட வேண்டும்.

பனை வெல்லம் மருந்துப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மனித உடலுக்குத் தீங்குசெய்யும் இரசாயன உரம் இதனை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் மனித உயிர்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை என்பதுடன் மனிதத் தன்மையையும் இழந்து விட்டனர். வெளியே தெரிய வந்ததால் இது தொடர்பாக நாம் பேசுகின்றோம். இன்னமும் எத்தனையோ இது போன்ற விடயங்கள் மறைந்து கிடந்து மனித உயிர்களைக் காவு கொள்ளக் காத்திருக்கின்றன.

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியமாகும். உணவும் நீரும் இன்றி அவனால் உயிர்வாழ முடியாது. ஆனால் இன்று இவை இரண்டுமே அவனது உயிருக்கு உலை வைக்கும் விதத்தில் விஷத்தைச் சுமந்து நிற்கின்றன. பயிர்களுக்கு இரசாயன உரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் பயன்படுத்த ஆரம்பித்த போதே உணவு மாசடைந்து மனிதர் களுக்குத் தீமை விளைவிக்கும் செயற்பாடுகள் ஆரம்பித்து விட்டன.

எமது முன்னோர்கள் இயற்கையு டன் ஒன்றியதாக விவசாயத்தை மேற்கொண்டனர். இயற்கையாகக் கிடைக்கும் பசளைகளே பயிர்களுக்கு இடப்பட்டன. அப்போதெல்லாம் கிருமிகள் பெருமளவில் காணப்படாததால் கிருமிநாசினிகளுக்குத் தேவை இருக்கவில்லை. ஏதோ காரணங்களால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்கையான வழிமுறைகளையே அவர்கள் கையாண்டு வந்தனர். இதனால் அன்று உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் தரத்தில் மட்டுமல்லாமல் சுவையிலும் சிறந்து விளங்கின.

இன்றைய மனிதர்கள் நோய்களைச் சுமந்து நிற்பதற்கு இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளின் பாவனையே முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. விவசாயிகள் தமது பயிர்களின் விளைச்சலை மட்டுமே கருத்தில் கொண்டு மனச்சாட்சியே இல்லாமல் பரிந்துரை செய்யப்பட்ட அளவை விடப் பன்மடங்கு இவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நுகர்வோர்களே பாதிக்கப்படுகின்றனர். சந்தைகளில் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு அச்சமாக இருக்கின்றது. ஏனென்றால் கிருமிநாசினிகளால் குளிப்பாட்டப்பட்ட பொருள்களே அங்கு காணப்படுகின்றன.

இரசாயன உரங்களின் பாவனையால் நிலத்தடி நீர் மாசடைந்து விட்டது. அதனைப் பருக முடியாத நிலை மனிதர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆனால் இரசாயன உரங்களையும், கிருமிநாசினிகளையும் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தமது உற்பத்திகளை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

குளிர்பானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தாம் பயன்படுத்தும் நீரிலுள்ள பூச்சிகளை அழிக்கும் பொருட்டு மனிதர்களுக்குத் தீங்கு செய்யும் இரசாயனங்களைப் பயன்படுத்தியமை தெரிய வந்ததால் அதிர்ச்சி அலைகள் எழுந்தன. ஆனால் அந்த அலைகள் விரைவிலேயே ஓய்ந்துவிட்டன. இப்போது அதைப்பற்றி எவருமே பேசுவதில்லை. பால்மாவைக் கெடச் செய்யும் கிருமிகளை அழிப்பதற்கு இரசாயனம் பயன்படுத்தப்பட்டதும், பால்மா இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதும் பழைய கதைகள். மக்கள் அதனைத் தற்போது மறந்து விட்டார்கள். இவற்றைப் போன்று தான் செயற்கை முறையில் பழங்களைப் பழுக்க வைத்தல், உணவகங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகிய நடவடிக்கைகளாலும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மக்களில் அனேகமானோர் பயன்படுத்தும் கோழி இறைச்சி தொடர்பாகவும் அதிர்ச்சித் தகவல்கள் வெளிவந்துள்ளன. தற்போது பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள் மிகக் குறுகிய காலத்தில் பயன்தரும் வகையில் உணவுகளும், நோய்களை எதிர்ப்பதற்கான மருந்து வகைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் இவை இத்தகைய கோழி இறைச்சியை உண்பவர்களுக்குப் பெரும் தீமைகளை ஏற்படுத்துவதாகத் தெரிய வந்துள்ளது.

உணவுப் பெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போது மனிதர்களின் உடல்நலமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் இது தவிர்க்கப் பட்டே வருகின்றது.

நாம் பயன்படுத்தும் எண்ணெய் வகைகளில்கூட தீமையை ஏற்படுத்தும் வகையில் கலப்படம் இடம்பெறுவதால் எமது உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. அவ்வாறாயின் எதனை உண்பது. எதனை ஒதுக்கி வைப்பது என்பதில் குழப்பமே ஏற்பட்டு வருகின்றது.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க மனிதர்களின் உயிர் காக்கும் மருந்துகளின் உற்பத்தியில்கூட மோசடிகள் இடம்பெறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. போலியானதும், தரம் குறைந்ததுமான மருந்து களைப் பயன்படுத்துபவர்கள் தினமும் சாவை எதிர்கொள்ளும் நிலை இன்று தோன்றிவிட்டது. ஆனால் இதற்கெல்லாம் காரணமானவர்கள் தமது பைகளை நிரப்பியவாறு சுதந்திரமாக உலா வருகின்றனர். மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசுகளே மெத்தனமாக இருக்கும்போது பிறரைக் குறை கூறுவதில் பயனொன்றும் இல்லை.

இந்த நிலையில் மக்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். எதற்கெடுத்தாலும் அதிகாரிகள் பார்த்துக் கொள்வார்களென்ற மனநிலையில் மாற்றம் வேண்டும். தமக்கு ஏற்படுகின்ற அநியாயங்களை அவர்களே தட்டிக் கேட்க வேண்டும். சந்தையில் பாவனைக்கு தவாத பொருள்கள் விற்பனை செய்வதைக் கண்டால் உடனடியாக உரிய அதிகாரிகளுக்குத் தகவல் வழங்க வேண்டும். மக்கள் ஒற்றுமையுடன் செயற்படும்போது மோசடிக்காரர்களால் ஒன்றுமே செய்ய முடியாது.

ஊர்காவற்றுறைச் சம்பவம் தற்போதுதான் வெளியில் தெரியவந்தாலும் இது நீண்ட காலமாக இடம்பெற்று வந்ததை மறுக்க முடியாது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்தைப் பயன்படுத்திய பலர் பாதிப்புக்களை எதிர்கொண்டிருப்பதற்கான சாத்தியங்கள் அதிகளவிலேயே உள்ளன. ஏனென்றால் அங்கு பயன்படுத்தப்பட்ட இரசாயன உரம் மனித உடலுக்குத் தீமை செய்யக் கூடியது.

ஆகவே பொதுமக்களும், அதிகாரிகளும் ஒரு புரிந்துணர்வுடன் செயற்பட்டு இத்தகைய மோசடியாளர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்தவேண்டும். இவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை ஏனைய மோசடிக்காரர்களுக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும். அரசும் மெத்தனமாக இருக்காது மக்கள் சுத்தமான உணவு, நீர் மற்றும் மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.



சக்தி FM தமிழ் பேசும் மக்களின் சக்தி

# சக்தி FM யாழ் நேரலை

the capital maharaja organisation limited Since 1930

## யாழ் மண்ணிலிருந்து உலகெங்கும்
## தமிழ் பேசும் மக்களின் சக்தி

யாழ் நல்லூரில்

# சக்தி வளாகம்

ஆகஸ்ட்
**18 - 24**




உலகின் மிகப்பிரம்மாண்டமான
வானொலிக் கலையகம்
உங்கள் அன்பு அறிவிப்பாளர்கள்
ஏராளமான போட்டிகள்
அட்டகாசமான பரிசுகள்
தினமும் கலை நிகழ்ச்சிகள்

அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்

உத்தியோகபூர்வ பத்திரிகை


சக்தி FM சக்தி TV தமிழ் பேசும் மக்களின் சக்தி NEWS 1st உதயன்

நல்லூரான் சக்தி நாடெங்கும் பரவட்டும்

**104.1 / 103.9 FM**
**www.shakthifm.com**

# அறிவு என்பது மொழியில் இல்லை!

சா. கந்தசாமி



கனடா நாட்டில் பழங்குடி மாணவ - மாணவிகளிடம் அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலைமைகளைத் தெரிந்து கொள்ள ஒரு வினாக்கொத்தைக் கொடுத்தார்கள். இருபத்தைந்து கேள்விகள் கொண்ட அந்த வினாக்கொத்தில் ஒரு கேள்வி. உங்கள் வீட்டில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? இந்தக் கேள்வி கனடாவுக்கோ, பழங்குடி மக்களுக்கோ மட்டுமல்ல, உலகத்தில் படிக்கும் எல்லா மாணவ - மாணவிகளுக்கும் பொதுவானது. அதுவும் குறிப்பாகத் தமிழர்களுக்கானது.

சரஸ்வதி கல்விக்குக் கடவுளாக இருக்கிறார். ஆண்டுதோறும் சரஸ்வதி பூஜையன்று, வழிபடப்படுகிறார். படிப்பு என்றால் கல்வி. நன்றாகப் படித்து நிறைய மதிப்பெண் பெற்று வேலைக்குச் சென்று அதிகமாக உழைக்க வேண்டுமென்று கடவுளிடம் கேட்டுக் கொள்கிறார்கள்.


கல்வி - படிப்பு சமூகத்துக்கு அவசியம். எந்த நாட்டு மக்கள் நூறு சதவீதம் படித்தவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் சிறந்த குடிமக்களாகக் கருதப்படுகிறார்கள். கல்வி, மனமாசுகளைப் போக்குகிறது. எனவேதான் ஒளவையார், "ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" என்றார்.

அதனை அவர் மாணவர்களுக்கு மட்டும் சொன்னார் என்பதில்லை. நாட்டில் வாழும் பெண்கள், ஆண்கள் எல்லோரையும் பார்த்துத்தான் சொன்னார். கற்பதற்கு நிறைய இருக்கிறது. காலம் முழுவதும் கற்றாலும், அது பூரணமாகாது. அதுதான் கல்வி.

கல்வி என்பது மொழி வழியே கற்கப்படுகிறது. மொழியை எழுதும் எழுத்து என்பது கோடுகளால் ஆனது. மொழியும் அதனை எழுதும் எழுத்தும் மனித அறிவால் கண்டறியப்பட்டவை. எனவே அறிவு என்பது மொழியில் இல்லை. ஆனால், மொழிவழியாக அறிவு - மனித ஞானம் என்று சொல்லப் படுகிறது.

எனவேதான், உலகத்தின் பல பகுதிகளிலும் வாழும் மனிதர்கள் தங்களது அறிவு, தேவை, வசதி, சுற்றுப்புறச் சூழல், ஆன்மிக உணர்வு, நம்பிக்கை, நம்பிக்கையின்மை ஆகியவற்றின் அடிப்படையில் சொற்களை உருவாக்கிக் கொண்டு பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

அறிவதுதான் அறிவு. அது மனிதர்களுக்கு இல்லாததொன்றல்ல. அறியப்படாமல் இருந்ததைப் படித்துத் தெரிந்து கொள்கிறார்கள். அதாவது இருப்பதைக் கொண்டு அறிந்து கொள்வது. அதனைக் கொண்டு காரியங்கள் செய்கிறார்கள். மற்றவர்களுக்கு விளக்கிச் சொல்கிறார்கள். எழுதியும் புரியவைக்கிறார்கள். அதனால்தான் விவேகானந்தர், "ஏற்கனவே உள்ள அறிவால் அறிந்து கொண்டு செயற்படுவது" என்றார். அறியப்படவில்லை என்பதால் எதுவும் இல்லையென்றாகி விடாது. அறியப்படாத வரையில் அது இல்லை. அவ்வளவுதான்.



தனது அறிவைக் கொண்டு தன்னையும், சக மனிதர்களையும், சுற்றுப்புறச் சூழலையும் மனிதன் அறிந்து கொள்கிறான். மனிதனைப் போலவே மற்ற ஜீவராசிகளும் அறிந்து கொள்கின்றன. என்றாலும் அவை மனிதனுக்கு இணையாக முடியாது.

ஏனெனில், மனிதன், தான் அறிந்திருக்கிறோம் என்பதைப் பற்றிச் சொல்லவும் எழுதவும் அறிந்திருப்பது போல - தான் அறியாதது எவை என்பதையும் அறிந்து கொண்டிருக்கிறான். அதுதான் மனிதனை மற்றைய ஜீவராசி களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. தான் அறிந்ததையும், அறியாததையும் தானே கண்டுபிடித்த மொழியிலும், எழுத்திலும் எழுதி வைத்திருக்கிறான். அவைதான் மனித அறிவு என்பதன் உச்சம்.

எழுதப்பட்டது என்பதால் எப்பொழுதும் படித்தறிய முடிகிறது. அதுவே படிப்பு என்பதற்கு ஆதாரம். ஆனால் படிப்பு - கல்வி என்பது ஒரு மொழிக்குள் இருப்பதில்லை.

உலகத்திலேயே அதிகமான மக்கள் வாழும் நாடு சீனா. பல ஆயிரம் ஆண்டுகளாக கலை, இலக்கியம், தத்துவம், தொழில், வணிகம், சட்டம், நீதி ஆகியவற்றில் முன்னணியில் இருக்கும் நாடு. அங்கு பலவிதமான மொழிகள் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்தன.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் அதிகாரப் பரவுதலுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் பல மொழிகள் இருப்பது தடையாக இருக்கிறது என்று கருதினார்கள். எனவே, சீன மொழிகளில் ஒன்றான மாண்ட்ரீனை பொது மொழியாக்கினார்கள். சிக்கலான எழுத்து முறையைச் சீர்படுத் தினார்கள்.

கல்விக் கூடங்களிலும், பல்கலைக்கழ கங்களிலும் மாண்ட்ரீனுக்கு முதலிடம் கொடுத்தார்கள். அதனால், உலகத்தில் அதிகமான மக்கள் பேசும் மொழியென அது பெயர் வாங்கிவிட்டது. ஆனால், சீன மொழி ஓர் உள்நாட்டு மொழிதான். அதற்குச் சர்வதேச அங்கீகாரம் கிடையாது.

ஸ்பானீஷ் மொழியை உலகத்தில் 40.50 கோடி மக்கள் பேசுகிறார்கள். உலக மக்கள் அதிகமாகப் பேசும் மொழிகளில் இரண்டாவது இடம் அதற்குக் கிடைத்திருக்கிறது. அது ஒரு கலாசார மொழி என்ற கருத்து மக்களிடையே இருக்கிறது.

முதல் ஐரோப்பிய நாவலான 'டான்குவின்செட்' 1605-ஆம் ஆண்டில் மீகையில் டி செர்வாண்டீஸ் என்பவரால் எழுதப்பட்டதெனச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், அது தென்னமெரிக்க நாடுகளின் எல்லை தாண்டி செல்லவில்லை. ஆங்கிலம் சர்வதேச மொழியாகி விட்டது. இங்கிலாந்து என்ற சிறிய நாட்டின் மொழி, 150 ஆண்டுகளில் மகத்தான சக்தி பெற்ற மொழியாகி விட்டது.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், சிங்கப்பூர் உட்பட ஐம்பது நாடுகளின் ஆட்சி மொழியாக அது இருக்கிறது. தொழில், வணிகம், அரசியல், மருத்துவம், விஞ்ஞானம், சட்டம், நீதி, சமூகவியல், தொல்லியல், மொழி, இலக்கியம் - என்று பல துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் மொழியாக மாறி வந்திருக்கிறது.

அத்தோடு ஆங்கிலம் பிற மொழிச் சொற்கள் நிறைந்த மொழி. பிரெஞ்சு மொழிபோல் தூய்மை பாராட்டுவதில்லை. உலகத்தில் இருக்கும் பல்வேறு மொழிச் சொற்களும் ஆங்கிலத்தில் கலந்திருக்கின்றன. அவ்வாறு ஆங்கிலம் கடன் வாங்கி இருக்கும் சொற்கள் எண்பத்து மூன்று சதவீதம் என்று கணக்கெடுத்து இருக்கிறார்கள். அதில் தமிழ்ச் சொற்களும் இருக்கின்றன.

நூறு தமிழ்ச் சொற்களை ஆங்கிலம் கடன் பெற்றிருக்கிறது என்று 'கிரிகிரி ஜேம்ஸ்' என்ற பேராசிரியர் எழுதியிருக்கிறார். கட்டுமரம், சுருட்டு, பந்தல், காவடி என்று அவர் அவற்றை அடையாளம் கண்டுள்ளார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மனிதர்கள் ஒரே கூட்டமாக இருந்து ஒரு மொழியைப் பேசிக் கொண்டு, பின்னர் புலம் பெயர்ந்து, தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். எனவே அவர்கள் முதலில் பேசிய தாய் மொழியில் இருந்த சில சொற்கள் எல்லா மொழிகளிலும் இடம் பெற்றிருக்கின்றன.

ஆனால், எந்த முதல் மொழி என்பதும், எப்பொழுது அது மற்றொரு மொழிச் சொல்லை கடன் வாங்கியது என்பதும் இன்னும் கண்டறியப்படவில்லை. ஆனால் ஒரு மொழியில் இருந்தும், ஒரே எழுத்து வடிவத்தில் இருந்தும் தான் ஏழாயிரம் மொழிகள் கண்டறியப்பட்டன வென்றும், இருபது வகையான எழுத்து வகைகள் உருவாக்கப்பட்டன என்றும் சொல்கிறார்கள்.

மொழி என்பது பேசுவதற்கானது, அவ்வளவுதான். அதிகமான மக்கள் பேசுவதுதான் பெரிய மொழியென்றோ, குறைவான மக்கள் பேசுவது சிறிய மொழியென்றோ கிடையாது. மொழி கருத்துப் பரிமாற்றத்துக்கானது. சொல்லவும், கேட்கவும் பயன்படக் கூடியது. ஆனால், அதிகாரம் செலுத்தக்கூடியது. எனவே அதிகாரத்தைப் பற்றிக் கொண்டவர்கள், தங்களின் அதிகாரத்தின் அடையாளமாக மொழியைப் பயன்படுத்துகிறார்கள்.

மொழி என்பது ஓர் ஆயுதம். மனிதர்கள் கண்டு பிடித்திருக்கும் ஆயுதங்களிலேயே மிகவும் கூர்மையான ஆயுதம். அது சுடும். நாவினால் சுட்டவடு ஆறாது' என்று திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி வைத்திருக்கிறார். மொழி சில நேரத்தில் மனத்தை நெகிழ வைக்கும். உருகாத மனத்தையும் உருக்கும். கண்களில் கண்ணீர் வரவழைக்கும். அதுதான் மொழியின் சக்தி.

மனிதர்கள் தங்களது மேலான அறிவை, ஆற்றலை 'அறிவித்துக் கொள்ள, மற்றவர்களை பயமுறுத்த கண்டு பிடித்த மொழியை, எழுத்துக்களைக் கொண்டுதான் பேசியும், எழுதியும் இணைப்பை ஏற்படுத்தி வருகிறார்கள்.

புத்தகங்கள் மனித அறிவால் மனிதர்களுக்காகவே எழுதப் பட்டவை. மொழி சார்ந்திருப்பவை. எழுத்தும் ஒன்று கிடையாது. ஆனால் எல்லோருக்கும் பொதுவானவையாக இருக்கின்றன. கல்வி - படிப்பு என்பது அதற்கு அவசியமாகிறது. கல்வியின் நோக்கம் - கற்பது என்பது அறிவதுதான். அதாவது படிப்பது. அது ஒரு மனிதனை அவனுக்கே தெரிய வைக்கிறது.

புத்தகம் என்பது காகிதம், மை கிடையாது. அது உயிர்ப்புடன் இருக்கிறது. படிக்கும்போது ஒவ்வொரு எழுத்தும் உயிர் பெறுகிறது. அதனோடு உரையாடுவது உயிர்த்தன்மையை மெய்ப்பிக்கிறது.

500 ஆண்டுகளுக்கு முன்னால் 'ஜான் கூடன் பர்க்' அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தமை, அறிவு பரப்புவதில் பெரும் பாய்ச்சலாக இருந்தது. எனவே புத்தகங்கள் வாங்குவதும் படிப்பதும், வீடுகள், கல்லூரிகளில், பொது இடங்களில் நூலகங்கள் அமைப்பதும் அறிவுக் கோயில்களாகக் கருதப்பட்டு வந்தன.

மனிதர்கள் செய்கின்ற அறிவு பூர்வமான ஒவ்வொரு காரியமும், தம்முடைய அன்பைச் சமூகம் முழுவதற்கும் அர்ப்பணிப்பதாகவே இருந்து வருகிறது. அறிவு, ஞானம் என்பது மறைத்து வைப்பதோ - ஒளித்து வைப்பதோ கிடையாது. எனவேதான் புத்தகங்கள் வாங்கிப் படித்தார்கள். தாங்கள் படித்தால் மட்டும் போதாது என்று புத்தகங்களைச் சொத்துப் போலப் பாவித்து தமது அடுத்த தலைமுறைக்கும் விட்டுச் சென்றார்கள்.

## குழந்தைகள் தொல்லை தராது சாப்பிட வேண்டுமா?

குழந்தைகளைச் சாப்பிட வைப்பது என்பது எல்லாத் தாய் மார்களுக்குமே கஷ்டமான விடயம். அவர்களுக்குப் பிடித்தமான உணவு மற்றும் ஆரோக்கியமான உணவு என்று பார்த்துப் பார்த்துச் சாப்பிட வைக்க வேண்டும். சில குழந்தைகள் ஊட்டி விட்டவுடன் சமர்த்தாகச் சாப்பிடுவார்கள். ஆனால் பெரும்பாலான குழந்தைகள் விளையாட்டு சிந்தனையில் இருந்தால் உணவைத் தவிர்ப்பார்கள்.

ஆகவே பெற்றோர்கள் குழந்தைகளுக்கு உணவைக் கொடுக்கும் முன்னர், அவர்கள் செய்யும் பிரச்சினைகளைப் பற்றி முன்ன தாகவே தெரிந்து கொண்டால், பின்னர் அவர்களிடம் எந்த ஒரு சண்டையும் போடாமல் உணவை ஊட்டிவிடலாம்.

குழந்தைகளுக்கு உணவை ஊட்டும் போது அவர்கள் செய்யும் ஒரு முக்கியமான ஒரு செயல்தான் உணவைத் துப்புவது. வேண்டுமானால் கூர்ந்து கவனித்துப் பாருங்கள், குழந்தைகளுக்கு உணவை ஊட்டும்போது, துப்புவார்கள். இதற்கு முக்கிய காரணம், அவர்களுக்கு அந்த உணவைச் சாப்பிட்டு வெறுப்பாகியிருக்கும். இதனால் அவர்கள் தமக்குப் பிடிக்காததை அவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்.

எனவே அவர்களுக்கு உணவை ஊட்டும்போது, அவர்கள் கவனத்தைத் திருப்புவதற்கு விளையாட வைத்து கொடுத்தால், தடுத்துவிடலாம். சில குழந்தைகள் முகத்தைத் திருப்பிக் கொண்டே இருப்பார்கள். ஆகவே அவ்வாறு செய்யும் போது அவர்களுக்கு பிடித்த ஏதேனும் ஒரு விளையாட்டுப் பொருளை, அவர்கள் முன்பு கொண்டு வந்து வைத்தால், அவர்கள் கவனம் விளையாட்டுப் பொருளுடன் இருக்கும் வேளை உணவைச் சுலபமாக ஊட்டிவிடலாம்.

இல்லையென்றால் ஏதாவது ஒரு வித்தியாசமானவற்றை அவர்களுக்குக் காண்பித்து, அதைப்பற்றி சொல்லிக் கொண்டு இருந்தால், அவர்கள் அதைக் கேட்டுக் கொண்டே சமர்த்துக் குழந்தையாகச் சாப்பிட்டுவிடுவார்கள்.

அதிகமான குழந்தைகள் உணவைக் கொண்டு வந்தாலே, கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு, உணவை கொடுக்க முடியாத அளவில் செய்வார்கள். அப்போது அவர்கள் முன்பு, அவர்கள் உணவை நீங்கள் சாப்பிடுவதுபோல் செய்தால், பின்னர் அவர்கள் உணவை நீங்கள் சாப்பிடப்போவதாக நம்பி, அது பிடிக்காமல், அவர்களே தமது வாயிலிருந்து கையை எடுத்து விட்டு, உணவை வாங்கிக் கொள்வார்கள்.

சில குழந்தைகள் வாயில் உணவை வைத்தால், அதை அப்படியே வைத்துக் கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கு அதை எவ்வாறு சாப்பிட வேண்டும் என்று தெரியாது. ஆகவே அப்போது அவர்கள் முன்பு நீங்கள் உணவை வாயில் வைத்து, மென்று காண்பித்தால், அதை அப்படியே அவர்களும் செய்வார்கள். குழந்தைகள் சாப்பிடும் போது விளையாடிக் கொண்டே இருப்பார்கள். அதிலும் சில குழந்தைகள் உண்ணும் போது தங்களுக்கான உணவை கைகளால் எடுக்க முயல்வார்கள். முக்கியமாக அப்போது அவர்களுக்கு இடது கை தான் வரும். எனவே அத்தகைய குழந்தைகளுக்கு, நல்ல பழக்கத்தை சொல்லிக் கொடுக்கும் வகையில், அவர்களிடம் வலது கையால் எடுத்து சாப்பிடப் பழக்க வேண்டும். இதனால் அவர்களும் விருப்பப்பட்டுச் சாப்பிடுவார்கள்.





# ஆடல் பாடலுடன் ஆர்ப்பரித்த ஆடித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழா

■ தி.அபராஜிதன்

தமிழர் தம் பாரம்பரிய பெருமைகளைப் பறை சாற்றும் கலை வடிவங்களுக்கு காட்சி கொடுக்கும் வகையிலும், பண்பாட்டின் கோலங்களைபார்த்துரைப்பதற்குஏற்ற விதத்திலும் போலும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் சீர்மையுடன் பெருமையாக நடத்திய 2014 ஆடித் திங்கள் முழு நிலா நாள் கலைவிழா பற்றிய காட்சிகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

காலச் சுழற்சியில் வருடாந்தம் வருகின்ற ஒரு முழுநிலா நாளுக்கு விழா எடுக்கும் உரிமை பெற்ற தென்மராட்சிக் கல்வி வலய சமூகம் இவ்வருடமும் சிறப்பான ஆடி மாத முழுநிலாவை தென்மராட்சிக் கல்வி வலய சமூகம் சீரிய தலைமைத் துவத்தின் வழிநடத்தலில் நிறைவுடன் நிகழ்த்திய பெருமையைப் பெற்றுள்ளது.

வெளியக காட்சி நிகழ்வுகளில் முழுநிலா நாள் கலைவின் பதாதைகளை மாணவர் இருவர் கம்பீரமாகக் காட்சிப்படுத்தி வர மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை மாணவர்களின் கவர்ச்சிகரமான கதம்ப நிகழ்வும், அல்லாரை அ.த.க.பாடசாலை மாணவர்களின் வீரம் செறிந்த வாள் நடனமும், கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. மாணவர்களின் குளிர்மை மிகு குதிரையாட்டமும், கைதடி நாவற்குழி வித்தியாலய மாணவர்களின் செழிமைமிகு மயிலாட்டமும், சாவகச்சேரியின் நகர்ப்புறத்தை ஆக்கிரமித்து அசைந்து வர, கண்களுக்கும் காதுகளுக்கு உத்வேகம் தரும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் காத்தவராயன் கூத்துக் காட்சியும், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் இலங்கைத் தீவின் பல்லின சமூகத்தைக் கொண்ட காட்சிப் படிமமும், மட்டுவில் சந்திரமெளலீச வித்தியாலய மாணவர்களின் வில்லுப்பாட்டும் இணைந்துவர, மீசாலை விக்கினேஸ்வரா ம.வித்தியாலயத்தின் சுட்டபழமா? சுடாத பழமா? ஒளவையாரின் காட்சி அசைந்தாடி வர, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியா லய மாணவர்களின் மறைந்து போன பாரம்பரிய கலைகளை மகிழ்வுடனே பேணுவோம் என்பதற்குச் சான்றாய் ஊர்தி ஊர்ந்து வர, மறவன்புலோ சகலகலா வித்தியாலயத்தின் கோமாதா எங்கள் குலமாதா என்ற பாடலோடு பட்டிப் பொங்கலின் சிறப்பை எடுத்தியம்பும் பரிவாரங்கள் பவனி வர, கைதடி விக்கினேஸ் வரா ம.வி கிராமிய வழிபாட்டு முறைகள் வழந்து வைத்துப் பொங்கி இசைத் திடும் காட்சிகள் புகையோடு ஒலியெழுப்பி அசைந்து செல்ல, விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய மாணவர்களின் விவசாயத்தின் மேன்மையை உணர்த்திச் செல்லும் ஊர்தி ஊர்ந்து செல்ல, மந்துவில் றோ.த.க பாடசாலை மாணவர்களின் கண்ணகி வழக்குரைக்கும் காட்சிகண்க ளுக்கு விருந்தூட்டிச் செல்ல, தென்ம ராட்சி இலக்கிய அணியின் தமிழ் நீதி கொண்ட மனுநீதி கொண்ட காட்சி காண்போரைக் களிப்பூட்டும் வகை யில் நகர்ந்து செல்ல, ஊர்தி ஊர்வலங்களினால் ஒரு சில மணி நேரம் நகரமே மிடுக்குடன் காட்சி தந்தது.

கைதடி நவீல்ட் பாடசாலை செவிப் புலனற்ற மாணவர்களின் நடன நிகழ்ச்சி வித்தியாசமான உணர்வை மேலிடச் செய்தது.


மேலும் கொடி காமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களின் முழுநிலா கலை நாள் பற்றிய கருத்தாளம் மிக்க பாடலும் போட்டி உலகில் மாணவர்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்து வாழ்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தாழ மிக்க மெல்லிசை கானம் நிகழ்வை மெரு கூட்டிச் சென்றது.

மிருசுவில் அ.த.க. பாடசாலை, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம், கச்சாய் அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் என சுமார் 70 பேர் இணைந்து வழங்கிய சங்க கால வாழ்க்கை முறை யில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற நிலப் பிரிவுகளுக்கு ஏற்ற வகையில் அக ஒழுக்கம் எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றிய அன்பின் ஐந்திணை நடன நாடகம் கலை நிகழ்வு களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருந்தது.

கலை வெளிப்பாடுகளின் வரிசையில் வலயப் பாடசாலை ஆசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் 'ஆர் என்ன சொன்னாலும் அதிர்ஷ்டசாலி நாங்கள் தானே' என்ற தலைப்பிலான கானாப் பாட்டு காதுகளுக்கு விருந்தூட்டிச் சென்றது. கிராமப் புறங்களில் இருந்து எதுவித பக்கவாத்தியக் கருவிகள் இல்லாமல் இயல்பாகவே இசைக்கின்ற பாடல்களே கானாப் பாட்டு என வரைவிலக் கணப்படுத்தப்படுகின்றதற்கு ஏற்றாற் போல் பழைமையைப் பழித்து புதுமையைப் பாராட்டும் சமூகத்துக்கும் நவீன மோகங் களால் அல்லலுறும் சமூகங்களுக்கும் நல்ல செய்தியை சொல்லிச் சென்றது.


















'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற தலைப்போடு செயல் திறன் அரங்க இயக்கம் நல்லூர் திருவிழாவையொட்டி சிறுவர் நாடகங்களை மேடையேற்றி வருகிறது. நல்லூர் முதலாம் குறுக்குத்தெரு பாணான், குளத்தடியில் புதிதாக அமைத்திருக்கும் திறந்தவெளி அரங்கில் இயக்கம் நடத்தும் முதலாவது நாடகத் திருவிழா இது. சிறுவர்களால் நடிக்கப்படும் நாடகங்களும் பெரியவர்களால் சிறுவர்களுக்காக நடிக்கப்படும் நாடகங்களும் மேடையேற்றப்படுகின்றன. இன்று அதன் கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாப்பா' நாடகம் ஈழத்தின் முக்கிய நெறியாளரும் செயல் திறன் அரங்க இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான தே.தேவானந்தின் நெறியாள் கையில் இந்த நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. முழு நீள நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றிய போதும் சிறுவர் பார்வையாளர்கள் மற்றும் அவர்களை அழைத்துவரும் பெற்றோரின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப சிறுவர் நாடகங்கள் மட்டுமே தொடர்ந்து மேடையேற்றப்படுவது வியப்பளிக்கும் மாற்றமாக இருக்கிறது.

19 AUG 2014

# அப்பிள் அழகி!



சுந்தரபுரம் என்ற நாட்டை அனந்தன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஐந்து மகன்மார். அவர்களுள் நான்கு பேருக்கு திருமணம் முடிந்தது. ஐந்தாவது இளவரசன் அறிவு, வீரம், அழகு எல்லாவற்றில் மிகவும் சிறந்து விளங்கினான். அதனால் அரசருக்கு அவன் மேல் விருப்பம் அதிகம். எங்கே அந்த மகனிடம் அரச பதவியைக் கொடுத்து விடுவாரோ என பயந்தனர் மற்றவர்கள். இதனால் அவன் மீது பொறாமை கொண்ட அவனது அண்ணிமார், "அப்பிள் அழகி என்ற உலகிலேயே சிறந்த அழகி ஒருத்தி உண்டு. அவளை நீ மணந்து வா!" என்று சொல்லி அவனுக்கு உசுப்பேத்தி விட்டனர்.

அவள் எங்கே இருக்கிறாள்? என்று கேட்டான் இளவரசன். அதுதான் யாருக்குமே தெரியாதே! 'என்றனர் அண்ணிமார்'. 'நான் அவளைத் திருமணம் செய்து கொண்டு தான் இங்கே வருவேன்' என்று சொன்னான் இளவரசன். அண்ணிமாரோ, நீ அவளைத் திருமணம் செய்து கொண்டு வந்தால் நாங்கள் உனது அடிமைகள்! என்று கூறினர்.

அதைக் கேட்ட இளவரசன் தன் வாளுடன் காட்டை நோக்கி நடந்தான். இத்தோடு அவன் எப்படியாவது ஒழிந்து போவான்... என நினைத்தனர் அண்ணிமார். அரசரும் 'உலகிலேயே யாரும் அடைய முடியாத அப்பிள் அழகியை மணந்து வந்தால் இந்த நாட்டுக்கு நீதான் அரசன்', என்றார். காரணம்! அப்பிள் அழகி சிரித்தாலோ வைரக் கற்கள் கொட்டும். அவற்றைக் கொண்டு நாட்டை செழிப்பாக்கி விடலாம் என நினைத்தார் அரசர்.

'அண்ணிமாரோ, இளவரசனால் அப்பிள் அழகியை பார்க்கவே முடியாது. ஏனெனில், அவள் எங்கே இருக்கிறாள் என்று யாருக்குமே' தெரியாது! இதோடு இவன் ஒழிந்தான்! என்று நினைத்தனர். இளவரசன் காட்டின் நடுவில் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது களைப்பாக இருந்ததால் ஒரு மரத்தடியில் சென்று அமர்ந்தான். அந்த மரத்தில் ஒரு பருந்து கூடு கட்டி வைத்திருந்தது. அது முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். அது இரை தேடச் செல்லும் பொழுது ஒரு நாகம் தினமும் அது இடும் முட்டைகளைக் குடித்துவிட்டுச் செல்லும். அன்று பருந்தின் குஞ்சுகள் நான்கைக் கொல்லப் போனது. குஞ்சுகள் கத்துவது இளவரசன் காதில் விழுந்தது; கோபம் வந்தது. உடனே குஞ்சுகளைக் கொல்வதற்கு தன் வாளுடன் மேலே பார்த்தான். அங்கே பாம்பு, குஞ்சுகளை கொல்லப் போவதைப் பார்த்தான். உடனே பாம்பை கொன்று குஞ்சுகளை காப்பாற்றினான். அதைப் பார்த்து பருந்துகளின் குஞ்சுகள் மிகுந்த சந்தோஷம் அடைந்தன.

'அண்ணே நீங்கள் யார்?' என்று கேட்டன பருந்து குஞ்சுகள். இதைக் கேட்டதும் இளவரசன் அசந்து போனான். அப்பிள் அழகியை திருமணம் செய்யச் செல்வதாகக் கூறினான் இளவரசன். இதைக் கேட்ட பருந்து குஞ்சுகள், நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியாது. எங்கள் அம்மா, அப்பாவால் தான் முடியும். நாங்கள் சொல்லி உதவி செய்கிறோம். நீங்கள் அந்தச் செடிகளில் ஒன்பதாவது செடியின் பின் சென்று ஒளிந்து கொள்ளுங்கள். நாங்கள் சொன்னால் மட் டுமே நீங்கள் வெளியே வர வேண்டும். எங்கள் அம்மா, அப்பாவுக்கு கோபம் வந் தால் உங்களையும் கொன்றுவிடுவர். அதனால்தான் சொல்லுகிறோம், என்றன.

அதைக் கேட்ட இளவரசன் அவர்கள் சொன்ன இடத்துக்குச் சென்று ஒளிந்து கொண்டான். பருந்துகள் கூட்டுக்கு வந்தன. தமது குஞ்சுகள் உயிரோடு இருப்பதையும், முட்டைகள் உடைந்து கிடப்பதையும், பாம்பு துண்டு, துண்டாக கிடப்பதையும் பார்த்து பருந்துகள் இரண்டும் சந்தோஷத்துடன் தமது குஞ்சுகளிடம் விவரம் கேட்டன.

உடனே ஒரு குஞ்சு நடந்ததை சொன்னது. அவன் எங்கே இருக்கிறான்? என்று கேட்டன. அம்மா நீங்கள் எங்களுக்கு சத்தியம் பண்ணுங்க. எங்கள் உயிரைக் காப்பாற்றியவருக்கு ஒரு உதவி செய்வோம் என வாக்குறுதி கொடுத்தால் நாங்கள் அவரை உங்களுக்கு காண்பிப்போம், என்றன.

சரி! என சொல்லியதும். குஞ்சுகள் உடனே, அண்ணா இங்கே வாருங்கள்! என அழைத்தன. அதுவரை நடந்தவற்றை பொறுமையாக பார்த்துக் கொண்டிருந்த இளவரசன் வெளியே வந்து பருந்துகளை வணங்கினான்.

உனக்கு என்ன வேண்டும் சொல்! என்றன பருந்துகள். உடனே இளவரசன் அரண்மனையில் நடந்தவற்றைக் கூறினான். உடனே கழுகுகள் 'ஏழு மலைகளைத் தாண்டிச் சென்றால் அழகிய தங்க அப்பிள் தோட்டம் வரும். அதன் நடுவில் ஒரு மரம் இருக்கும். அதில் இறக்கிவிடுவேன். அந்த மரத்தை மூன்று சுற்றுச் சுற்ற வேண்டும். முதல் சுற்றில் ஒரு கனியை பார்க்க வேண்டும், இண்டாம் சுற்றுச் சுற்றும் பொழுது ஒரு கனியை பார்க்க வேண்டும். மூன்றாம் சுற்றுச் சுற்றும் பொழுது ஒரு கனியை பறிக்க வேண்டும். அந்தக் கனியை அரண்மனைக்கு எடுத்து சென்று பிய்த்துப் பார்த்தால் அதில் அப்பிள் கன்னி இருப்பாள்.

அந்த அப்பிளை பறிக்கும் போது அந்த தோட்டத்தின் உரிமையாளன் கொம்பேரி பாம்பு முகத்தையுடைய பாம்பு ராட்சதன் உன்னை கொத்த வருவான். நீ இந்த நாகக்கல்லை அவன் மீது தூக்கி எறிந்தவுடனே அவன் இறந்து போவான்' என்றன.

இதைக் கேட்ட இளவரசன் 'சரி' என்றான். இளவரசன் அந்த மரத்தைப் பார்த்து விட்டு சுற்றத் தொடங்கினான். முதல் சுற்றில் ஒரு கனியை பார்த்தான். இரண்டாம் சுற்றில் பருந்து சொன்னது போல் பாம்பு முகத்தைக் கொண்ட ராட்சதன் ஓடி வந்தான். நாகக் கல்லை அவன் மீது தூக்கி எறிந்தான். ராட்சதன் 'ஆ' என அலறியபடியே மடிந்து போனான். மூன்றாம் முறை மரத்தை சுற்றியதும் தங்க நிற அப்பிள் ஒன்று அவன் கையில் வந்து விழுந்தது. உடனே பருந்துகள் அவனை தமது முதுகில் ஏற்றி வந்து அவனது நாட்டில் விட்டன. மறுநாள் அரசனை வணங்கிய இளவரசன் அந்தத் தங்க அப்பிளைக் காண்பித்தான். அரசன் அதன் அழகில் மயங்கினான். அதன் அழகில் மயங்கிய அண்ண்ணிமார், அது தமக்கு வேண்டும்! என கெஞ்சினார்கள். ஆனால், இளவரசனோ அ ப்பிளை இரண்டாகப் பிளந்தான். அதிலிருந்து தங்கச்சிலை போல் அப்பிள் அழகி வெளியே வந்தாள். அவள் அரசனை வணங்கி இளவரசனின் கரத்தைப் பிடித்தாள். அப்படியே அதிர்ந்தனர் அனைவரும். கலகலவென சிரித்தாள்.

வைரங்கள் கொட்டின, அசந்து போன அண்ணிமாரும், அண்ணன்களும் தமது தம்பிக்கு கிடைத்த அப்பிள் அழகியை எண்ணிப் பொறாமைக் கொண்டனர். அரசன் தனது மகனுக்கு முடிசூட்டி அப்பிள் அழகியை அரசியாக்கி மகிழ்ந்தான். பின்னர் இருவரும் சிறப்பாக நாட்டை ஆண்டனர்.

## காக்கா!... வா!...

கா... கா... கா...
காக்கா.. வா!... வா!... வா!...
கன்னம் கரிய காக்காவே!
கடிதெனப் பறந்து வா!...
கடைசிச் சனி விரதக்
கறி... சோறு உண்ணலாம் வா!..
(கா!..கா! கா!)

குரலில் இனிமை இல்லாரையும்
காக்காக் கத்தல் தானென்று
ஒப்புவமைக்கு உதாரணமாய்
செப்புகிறா ருன்னை... காக்காவே!
கழிவைச் சுத்தமாக்கும் தோட்டியே!
கடுப்பின்றி ஓடிவா! காக்காவே!
(கா!..கா! கா!)

ஒற்றுமைக்கு உதாரணம் நீயாம்!
ஒப்பிட்டுப் பேசுகிறார் ஆறறிவாளர்.
ஒரு பயனுமில்லை இவர்
ஓசை மட்டுமே எழுப்புவார்.
ஒருபோதும் உன் போல்
ஒன்றாக இருக்கார் உலகிலே



## உலகின் மிகச் சிறிய பறவை

உலகிலேயே மிகச் சிறிய பறவை கியூபா நாட்டின் "மெல்ஸிகா ஹெலனே" என்ற தேன் சிட்டாகும். இந்தப் பறவையின் எடை இரண்டு கிராம்தான். அலகு முதல் வால் வரை அதன் நீளம் 2 அங்குலமாகும். பெண் பறவையை விட ஆண் பறவை கால் அங்குலம் சிறியது. இதன்படி பார்த்தால் இதுதான் உலகின் மிகச் சிறிய பறவையாகும். இந்தப் பறவை ஒரு விநாடியில் 80 தடவைகள் தனது இறக்கையை அடிக்கிறது. அப்போது "வீர் வீர்" என சப்தம் கேட்கும். ஆண் பறவையும் பெண் பறவையும் தனித் தனியே பறக்கும். இவற்றின் கூடுகள் சிலந்தியின் வலைகளைப் போன்று சிறியதாகக் காணப்படும். எப்போதும் இவை சுறுசுறுப்பாக இருப்பதால் இந்தப் பறவைகளுக்கு உணவு தொடராகவே தேவைப் படுகிறது. இவற்றின் உணவு சிலந்திகளும், ஈக்களும்தான். ஆனால் இவற் றுக்கு மிகவும் பிடித்த உணவு பூக்களிலுள்ள தேன்தான். எனவே, தேனுள்ள மலர்களைத் தேடி இவை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் களைக் காமல் பறக்கும். மேலும் இவை பல வகை நிறங் களில் காணப்படுகின்றன.





ப.தர்சன், தரம்-10'டீ'
கிளி/இந்துக் கல்லூரி



## நவக்கிரக கோயில்கள்

சூரியனார் கோவில்
திங்களூர் கைலாசநாதர் கோயில்
சீர்காழி வைத்தீஸ்வரன் கோயில்
திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயில்
ஆலங்குடி ஆபத்சகாயேசுவரர் கோயில்
கஞ்சனூர் அக்கினீஸ்வரர் கோயில்
திருநள்ளாறு தர்ப்பாரண்யேசுவரர் கோயில்
திருநாகேசுவரம் நாகநாதசுவாமி கோயில்
கீழப்பெரும்பள்ளம் நாகநாதர் கோயில்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. பூமியே பெரிய காந்தம் எனக் கண்டறிந்தவர் யார்?
சேர் ஐசாக் நியூட்டன்
2. புலிக்குகை என அழைக்கப்படும் கலையரங்கம் எங்குள்ளது?
இந்தியா(சென்னை)
3. அஜந்தாவில் எத்தனை குகைகள் உள்ளன?
29 குகைகள் உள்ளன.
4. மோனாலிசா ஓவியம் வரைய மொத்தம் எத்தனை ஆண்டுகள் பிடித்தன?
நான்கரை ஆண்டுகள் பிடித்தன.
5. ஐரோப்பிய நாடுகளுக்கான ஒரே புதிய கரன்ஸி?
யூரோ நாணயம்

*வடிவேல் பிரவீனா, தரம்-9 'பி'*
*கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்*










பிளான் ஸ்ரீலங்கா நிறுவனத்தினால் இசைக்கருவி மற்றும் கலை ஆற்றுகைக்கான உடை, ஒப்பனைப் பொருள்கள் மட்டக்களப்பு - முனைக்காடு நாகசக்தி சிறுவர் கழகத்துக்கு அண்மையில் வழங்கப்பட்டன. முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் இ.குகநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்தினம், பிளான் ஸ்ரீலங்கா அமைப்பின் ஆலோசகர் திட்ட இணைப்பாளர், பிரதேச கலாசார உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், கலைஞர்கள், முனைக்காடு நாகசக்தி சிறுவர் கழகத்தினர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





ஆடிஅமாவாசை விழா கீரிமலை சிவபூமி மடத்திலுள்ள கலை அரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் இடம்பெற்ற அரிச்சந்திரன் இசை நாடகம் பலரது பாராட்டைப்பெற்றது.





வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் நல்லூர் வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் தெய்வீக இசையரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களின் வாத்திய இசைக் கச்சேரி நிகழ்வின் காட்சி.

# புகைத்தலைப் பற்றிய சில அதிர்ச்சியூட்டும் உண்மைகள்

இதய நோய்களுக்கு பகைவனாக விளங்கும் புகைத்தலைப் பற்றிய சில அதிர்ச்சியூட்டும் உண்மைகள் இங்கு தரப்படுகின்றன.

ஒவ்வொரு சிகரெட்டும் உங்கள் விலை மதிப்புள்ள வாழ்க்கையிலிருந்து ஐந்து நிமிடங்களை பறித்துக் கொள்கிறது.

ஒவ்வொரு புகை இழுப்பும் 4,000 வெவ்வேறு தீய பொருள்களைக் கொண்டது. இதில் புற்றுநோய் மற்றும் இருதய நோய் ஏற்படுத்தும் இரசாயனங்களும் அடங்கும்.

சிகரெட்டின் எரிமுனையின் வெப்பநிலை 900 டிகிரி செல்சியஸ் ஆகும். இது நீரின் கொதிநிலையை விட 9 மடங்கு அதிகமானது.


இந்த வெப்பநிலையில் சில இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு மிகவும் விஷமுள்ள பொருள்கள் வெளியிடப்படுகின்றன.

புகையில் 95 சதவீதம் வாயுக்கள் இருக்கின்றன. அவற்றில் கார்பன் மோனக்சைடின் செறிவு 2-8 சத வீதம் உள்ளது. 60 சதவீதம் கார்பன் மோனக்சைட் செறிவு உயிருக்கு ஆபத்து என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எரியும் புகையிலிருந்து கிடைக்கும் நச்சுக்கலவையின் நிகோடின் அதிகம் உள்ளது. இது உடலின் பல முக்கியமான உறுப்புகளைக் கடுமையாகப் பாதிக்கும்.

**புகையில் 95 சத வீதம் வாயுக்கள் இருக்கின்றன. அவற்றில் கார்பன் மோனக்சைடின் செறிவு 2-8 சத வீதம் உள்ளது. 60 சதவீதம் கார்பன் மோனக்சைட் செறிவு உயிருக்கு ஆபத்து என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**





புகைப்பதால் ஏற்படும் மாரடைப்பால் இறக்கும் வாய்ப்புகள் 60-70 சத வீதம் அதிகமாக இருக்கிறது.

இங்கு 40-25 மடங்கு மாற்ற முடியாத நுரையீரல் நோய் உருவாவதற்கான வாய்ப்பு அதிகம். நுரையீரல் புற்றுநோய் உருவாகும் ஆபத்து 10-25 மடங்கு அதிகம்.

உணவுக்குழாய், வயிறு மற்றும் மூச்சுக்குழாய்கள் ஆகியவற்றில் புற்றுநோய் ஏற்படும் அபாயம் இவர்களுக்கு அதிகமிருக்கும்.

மனைவி கருவுற்றிருக்கும் போது, அவர் கணவர் அருகில் புகைப்பிடித்தால் குழந்தையின் வளர்ச்சி தடைப்பட்டு எடை குறைவாகப் பிறக்கும். கருச் சிதைவு அபாயம் மற்றும் சிசுவின் இறப்புக்கு வாய்ப்பு அதிகம்.

மேலும் குழந்தையின் அறிவு வளர்ச்சி தாமதப்படும். மனவளர்ச்சி குன்றிப்போகும். குழந்தைப்பருவ ஆஸ்துமா, அந்தக் குழந்தைக்கு மற்றக் குழந்தைகளைக் காட்டிலும் வருவதற்கு வாய்ப்பு அதிகம்.

இன்றைய காலக்கூட்டத்தில் 20 வயதில் கூட மாரடைப்பு வரும். இளைஞர்கள் சிறு வயது முதலே "Passive Smoking" என்ற வகையில் புகை பிடிக்கும் அப்பாவின் அருகிலிருந்து வளர்வதும் இதற்கு ஒரு காரணம்.

எரிமுனையிலிருந்து வரும் புகையைச் சுவாசிப்பதும், பக்க வீச்சும் அதிக தீமையானது.

அது அப்பாவிகளான .உங்கள் குழந்தை மற்றும் குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைக் குலைக்கும். உங்கள் மனைவிக்கும் மாரடைப்பை ஏற்படுத்தும்.

ஒரு நாளைக்கு ஒரு பைக்கற் புகைப் பிடிப்போர் ஓராண்டில் 4,000 சிகரெட்டை புகைக்கிறார்கள். சிகரெட்டுகளுக்காகவும், புகை பிடிக்கும் பழக்கத்தால் வரும் நோய்க்காகவும் நீங்கள் செலவிடும் தொகையைக் கொண்டு வீட்டில் பல நவீன சாதனங்களை ஒவ்வொரு ஆண்டும் வாங்கலாம்.

20 வயது முதல் சுமார் 40 வயது வரை தினமும் ஒரு பைக்கற் சிகரெட் பிடிப்பவரின் சிகரெட்டுகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கினால் அது எவரெஸ்ட் மலையின் உயரத்தை எட்டிப் பிடிக்கும்.






# பழப் பிரியர்களே

## இதோ பழ ஜோதிடம்

**கிளி ஜோதிடம் தெரியும்; அது என்ன பழ ஜோதிடம் என்கிறீர்களா? மேலை நாடுகளில் இப்போது பரபரப்பாக உலவி வருவது பழ ஜோதிடம். நாம் ஒருவரின் ராசி நட்சத்திரத்தைக் கொண்டு ஒருவரைப் பற்றிக் கணிப்பது போல் உங்களுக்குப் பிடித்தமான கனியைக் கொண்டு உங்கள் குணத்தைக் கணிப்பது தான் இந்த ஜோதிடம். கீழே பல்வேறு பழ வகைகளும் அவற்றை விரும்புபவர்களின் பொதுவான தன்மைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களுக்குப் பிடித்த பழம் என்ன? அதற்கான பலன் பொருந்து கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்களேன்!**



### மாம்பழப் பிரியரா நீங்கள்?

அப்படியானால் நீங்கள் ஓரளவு தீவிரமான ஆசாமி. உங்களது விருப்பு வெறுப்புகளை ஒருபோதும் மாற் றிக்கொள்ள மாட்டீர்கள். உங்களை மாற்ற முயல்வதோ, உங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதோ மிகவும் கடின மான விடயம். உங்களுக்கென்று மாற்றமுடியாத, நிலை யான எண்ணங்கள் இருக்கும். எந்தச் சூழ்நிலையையும் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்க விரும்புவீர்களே தவிர சூழ்நிலைக்கேற்றவாறு நீங்கள் வளையமாட்டீர்கள். மூளைக்குச் சவால் விடும் பணிகளை அதிகம் விரும்புவீர்கள். அதிகமான பிடிவாதக்காரரர் நீங்கள். ஆயினும் அன்பான துணையிடம் கன்றுக்குட்டி போலப் பாசமாக இருப்பீர்கள். அன்பை வீட்டுக்குள்ளும் உங்கள் வலிமையையெல்லாம் வெளியிலும் காட்டுவது உங்கள் தன்மை.



### செரிப்பழமா உங்கள் தெரிவு?

உங்களுக்குப் பிடித்த இடம் உங்கள் வீடுதான். குடும்பமும் நெருங்கிய உறவுகளும் சூழ இருப்பதையே நீங்கள் அதிகம் விரும்புவீர்கள். ஆனால் உங்கள் தொழிலில் உங்களுக்கென்று ஒரு நிலையான இடத்தைப் பிடிக்க இயலாது. எப்பொழுதும் ஏற்றமும் இறக்கமுமாகவே இருக்கும்.
சிறுகச் சிறுகத்தான் உங்களால் சேமிக்கக் கூட முடியும். உங்களுக்குக் கற்பனைத்திறனும் படைப்பாற்றலும் அதிகம் உண்டு. ஒரே மாதிரியான சலிப்புத் தரும் வேலைகளை விரும்பமாட்டீர்கள். சொல்லப்போனால் விளம்பரத்துறை, ஓவியம், கலைத்துறைகளில்தான் உங்கள் நாட்டம். உங்கள் துணைக்கு உண்மையானவராக இருப்பீர்கள். ஆனால் அன்பை வெளிக்காட்ட நீங்கள் இன்னும் சிறிதளவு கற்றுக் கொள்ளவேண்டும்.



### உங்கள் விருப்பம் வாழைப்பழமானால்


நீங்கள் அந்த வாழைப்பழம் போலவே மென்மையானவர். மிகவும் அன்பானவர். பிறருக்கு இரங்கும் மனமும் இதமாகப் பழகும் குணமும் நிறைந்தவர். ஆனால் உங்களுக்குக் கூச்சம் அதிகம். பிறருடன் கலந்து பழகமாட்டீர்கள். உங்களுக்கு தன்னம்பிக்கையும் கொஞ்சம் குறைவுதான். உங்கள் மென்மையான குணத்தைச் சிலர் தமது இலாபத்துக்குப் பயன்படுத்திக்கொண்டு விடுவர். கவனம் தேவை. உங்கள் துணையை நீங்கள் மிகவும் பாராட்டிச் சீராட்டி வைத்துக் கொள்வீர்கள். உங்கள் இனிய குணத்தால் உங்கள் குடும்ப வாழ்வில் எப்பொழுதும் அமைதியும் அன்பும் நிலவும்.



### சீதாப்பழமா உங்கள் விருப்பம்?

அப்படியென்றால் நீங்கள் ஓரளவு கட்டுப்பெட்டி. அடக்கமானவர். எதையும் ஆழ்ந்து ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துத்தான் முடிவு செய்வீர்கள். ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொண்டு அதைக் கண்டிப்பாக அடைந்து விடுவீர்கள். ஆனால் அவசரமோ பதற்றமோ உங்கள் பக்கத்தில்கூட வராது. நிதானமும் பொறுமையும் மிக்கவர். விரிவாக விளக்கப் படவேண்டிய பணி அல்லது புள்ளிவிவரங்கள் தொடர்பான பணிதான் உங்களுக்கு மிகவும் பிடித்தமான, உங்களுக்குப் பொருத்தமான பணியாக இருக்கும்.
புற அழகு அல்லது மற்றைய குணங்களை விட அறிவுத்திறன் வாய்ந்தவரே துணையாக இருக்கவேண்டும் என்று விரும்புவீர்கள். நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் கச்சிதமாக, நேர்த்தியாக இருப்பதுபோல் பிறரும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதால் அடுத்தவர்களிடம் அதிக குற்றங்கள் கண்டு பிடித்தபடியே இருப்பது உங்கள் குறைபாடு.
ஓரளவு வெட்கமும் கூச்சமும் நிறைந்தவராக இருப்பதால் உங்கள் பிரியத்தை யாரிடமும் காட்டிக்கொள்வது உங்களுக்கு மிகவும் சிரமமான காரியம்.
இனி என்ன? உங்கள் நண்பர் அல்லது வாழ்க்கைத் துணைக்குப் பிடித்த பழம் என்ன என்று தெரிந்துகொண்டு அவருடைய தன்மையைப் பற்றிச் சொல்லி வியக்க வையுங்களேன்.

### பேரிக்காய்ப் பிரியர்களே



உங்கள் மனதை ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபடுத்தினால் அதை வெற்றிகரமாக முடித்துவிடுவீர்கள். ஆனால் உங்களால் ஒரு விடயத்தில் மனம் வைப்பது என்பது மிகவும் கடினம். எதையும் மிக உற்சாகத்துடன் ஆரம்பித்து விட்டு இடையிலே கைவிடுவது உங்கள் பழக்கம். எதைச் செய்தாலும் உடனடியாகப் பலன் தெரிந்தாக வேண்டும் என்று துடிப்பீர்கள். அதிக ஆற்றலும் தெம்பும் உடையவர். யாருடனும் எளிதில் பழகுவதில் வல்லவராக உள்ள நீங்கள் அதை நீண்ட நாள் தொடர் வதில் அன்னாசிப் பழக்காரருக்கு அப்படியே எதிரிடையானவர்.



### அன்னாசியை ரசித்து ருசிப்பவரா?

நீங்கள் எந்த விடயத்தையும் சட்டென ஆலோசித்து முடிவெடுத்து அதைவிட வேகமாகச் செயற்படுத்துவீர்கள். உங்களுக்கு அதனால் இலாபம் ஏற்படும் எனில் எத்தனை முறை வேண்டுமானாலும் துணிவுடன் தொழிலை மாற்றிக் கொண்டிருக்கும் பழக்கமுடையவர் நீங்கள். எவ்வளவு பெரிய வேலையாக இருப்பினும் அதை அருமையாக ஒருங்கிணைத்து நிர்வாகம் செய்யும் திறமையில் உங்களுக்கு இணையே இல்லை என்று சொல்லலாம்.
தன்னிறைவுடனும் நேர்மையாகவும் இருப்பது உங்கள் தன்மை. எளிதில் யாரிடமும் நட்புக் கொள்ளமாட்டீர்கள். ஆனால் அப்படி நட்புக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் அந்த நட்பைத் தொடர்வீர்கள். உங்கள் துணைவர், துணைவி உங்களது ஒளிவு மறைவில்லாத குணத்தால் ஈர்க்கப்பட்டாலும் அன்பை வெளிக்காட்டத் தெரியாத உங்கள் தன்மை அவரைச் சலிப்படையச் செய்துவிட வாய்ப்புண்டு.



### தோடம் பழத்தை விரும்புபவர்களுக்கு

அதிகளவு பொறுமையும், அதே அளவு திடமான மன உறுதியும் உள்ளவர்கள் நீங்கள். மெதுவாக, நிதானமாக, அதேசமயம் கடின உழைப்பின் மூலம் உங்கள் இலக்கை அடைவது உங்கள் நோக்கமாக இருக்கும். நீங்களும் கூச்ச சுபாவம் உடையவர்தான் என்றாலும் நம்பிக்கைக்குரிய நண்பராக இருப்பீர்கள். பொதுவாக சண்டை சச்சரவை விரும்பாதவராகிய நீங்கள் மிகுந்த அழகுணர்ச்சியை உடையவர். உங்கள் வாழ்க்கைத் துணையை அதிக கவனத்துடன் தேர்ந்தெடுப்பீர்கள்; முழு மனதுடன் நேசிப்பீர்கள்.

### அப்பிளை விரும்பும் அன்பர்களே

நீங்கள் உடனடியாக முடிவெடுத்துத் தடாலடியாகச் செயல்படக்கூடியவர். அதிகமாகச் செலவு செய்பவர். மிகவும் வெளிப்படையாகப் பேசும் போக்கை உடையவர். ஆனால் எளிதில் உணர்ச்சிவசப்படுபவர். உற்சாகத்துடன் நடை போடக்கூடியவராகிய நீங்கள் ஒரு குழுவுக்குச் சிறந்த தலைவராக விளங்கக் கூடியவர். எப்பொழுதும் முன்னேறிச் செல்வீர்களே தவிர தாமதிக்க மாட்டீர்கள். வாழ்வில் உங்களுக்கு இருக்கும் ஈடுபாட்டிலும் செயற்பாட்டில் காட்டும் ஆர்வத்திலும் உங்களுக்கு நிகர் நீங்களேதான். உங்கள் துணையின் உள்ளம் கவர்ந்தவர் நீங்கள்.



### திராட்சை விரும்பிகள்

நீங்கள் பொதுவாக மென்மையாக, அமைதியாகப் பழகக் கூடியவர். ஆனால் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற பழமொழி உங்களைப் பற்றித்தான் எழுந்ததோ என்னவோ! கோபம் பொங்கி வரும் அதே வேகத்தில் அடங்கியும் விடுவது உங்கள் சிறப்பியல்பு. அழகை ஆராதிப்பவர் நீங்கள். மலரோ, ஓவியமோ, குழந்தைகளோ, மற்றைய மனிதர்களோ எதுவானாலும் அழகாக இருந்தால் இரசிப்பதும் பாராட்டுவதும் உங்களுக்கு இயல்பானது. உங்கள் தோழமையான அணுகுமுறையாலும் வெளிப்படையாகப் பாராட்டும் குணத்தாலும், உங்களுடைய நட்பு பலராலும் விரும்பப்படும். உங்கள் வட்டத்தில் நீங்கள் பிரபலமானவராக இருப்பீர்கள். நீங்கள் செய்யும் எந்தச் செயலாக இருந்தாலும் அதை ஏனோ தானோ என்று செய்யாமல் இரசித்துச் செய்வீர்கள். வாழ்வை உற்சாகத்துடனும் புத்துணர்வுடனும் எதிகொள்வீர்கள். என்ன? உங்கள் வாழ்க்கைத் துணையும் அதேபோல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள். அப்படியில்லை என்றால் சிறிது மனத்தை வருத்திக் கொள்வீர்கள்.



CMYK